கல்கி



KALKI ஜூலை 18, 1954 4 அணா

நாளுக்கு நாள் அதிக தெளிவான, எழிலோங்கும் சருமம்



கேடில் கலந்த ரெக்ஸோனு இந்த அற்புத வேலையைச் செய்யட்டும்.



ரெக்ஸோனுவின் கேடில் கலந்த நுரையை உங்கள் சருமத்தில் மெதுவாகத் தேய்த்து, பிறகு கழுவுங்கள். உங்கள் சருமம் நாளுக்கு நாள் அதிக மழமழப்பும், தெளிவும் பெறுவதைக் காண்பீர்கள். அதனுல் புதுப்பொலிவுடன் விளங்குவீர்கள்.



ரெக்ஸோனு

கேடில்* கலந்த சோப் இதுஒன்றே



* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.

RP. 118-50 TM

ரெக்ஸோனு ப்ரொப்ரைட்டரி லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரித்தது.

கல்கி
பொருளடக்கம்

மலர் 13 }
இதழ் 51 }

1954 ஜூலை 18

{ ஜய ௵
ஆடி 3

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 13 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 51

குமரி முனையில் கொந்தளிப்பு

கிழக்கு, மேற்கு, தெற்கு சமுத்திரங்கள் சந்திக்கும் புனித ஸ்தலமான குமரி முனையில் இன்று பெரும் கொந்தளிப்பு மூண்டிருக்கிறது.

அங்கு திரை கடல்கள் கொந்தளிக்கவில்லை; தமிழர் சமூகமாகிற பெரும் கடலில் ஒரு பகுதி கொந்தளிக்கத் தொடங்கி யிருக்கிறது.

சுமார் நூறு இருநூறு ஆண்டுகளுக்கு முன் தமிழ்த் திருநாட்டைச் சேர்ந்த மக்கள் கடல் கடந்து பல இடங்களுக்குச் சென்றனர். காடுகளை அழித்தனர்; வறண்டு கிடந்த பிரதேசங்களைத் தங்களுடைய உடல் உழைப்பினாலும் உதிரத்தினாலும் வளம் பொருந்திய பூமியாகப் பண்படுத்தினர்.

அவ்வாறு இயற்கையுடன் போராடி, லட்சோப லட்சம் ஜனங்களுக்கு வாழையடி வாழையாக வாழ்வு அளிக்கும் நற்பணியில் வெற்றி பெற்ற தமிழ் மக்களுக்கு, இன்று தென்னாப்பிரிக்கா, இலங்கை முதலிய வெளிநாடுகளில் ஜீவாதார உரிமைகளுக்குப் போராடும்படியான துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

அவர்களுக்கு நீதியும் நியாயமான உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்று இடைவிடாது வற்புறுத்துகிறோம்.

வெளிநாடுகளில் தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தும் நாம், அவர்களுக்குத் தங்கள் சொந்த நாட்டிலே உரிமைகள் மறுக்கப்படுவதை எவ்வாறு பார்த்துக் கொண்டிருக்க முடியும்?

அறுபது ஆண்டுகளுக்கு முன், இந்தியாவில் ஆதிக்கம் செலுத்தி வந்த ஆட்சி வர்க்கத்தைச் சேர்ந்த வெள்ளையர்களுக்கு மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களை அடுத்துள்ள பிரதேசங்களில் தேயிலை பயிரிட வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

வியாபார தந்திரத்தில் நிபுணர்களான வெள்ளையர்கள் தேயிலைச் செடிகளில் பணம் காய்க்கும் என்ற உண்மையை உணர்ந்தனர்.

வெளிநாடுகளில் கரும்புத் தோட்டங்களையும் தேயிலைத் தோட்டங்களையும் ரப்பர்த் தோட்டங்களையும் பண்படுத்திய தமிழர்களின் பிரமிக்கத் தக்க உழைப்பை நன்கு அறிந்திருந்த அவர்கள், ஆயிரக் கணக்கான தமிழர்களை, முக்கியமாக திருவாங்கூரைச் சேர்ந்த தேவிகுளம் முதலிய காட்டுப் பிரதேசத்துக்கு அழைத்துச் சென்றனர்.

அக்காலத்தில் அந்தப் பிரதேசங்களில் ஒரு மலையாளிகூட இல்லை.

அங்கே சென்ற தமிழர்கள் காடுகளை அழித்ததுடன் கரடிகள், புலிகள், யானைகள், நரிகள் முதலிய துஷ்ட மிருகக் கூட்டங்களையும் எதிர்த்துப் போராடும்படி நேர்ந்தது.

அதற்கு முன் அப் பிரதேசங்களில் வசித்த முதுவான், மண்ணுடியார் என்ற பிரிவினரும் முற்றிலும் தமிழே பேசி வந்தார்கள். அவர்கள் தமிழர்களே என்பதற்கு மறுக்க முடியாத ஆதாரங்கள் இருக்கின்றன.


இன்று திருவாங்கூர் ராஜ்யத்தைச் சேர்ந்த தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டை, நெடுமங்காடு, நெய்யாற்றங் கரை, விளவங்கோடு, கல்குளம், தோவாளை, அகஸ்தீசுவரம் முதலிய தாலூகாக்கள் தமிழர்களுடைய வெகு காலத்திய உழைப்பின் சின்னங்களாக இருந்து வருகின்றன என்று கூறுவது மிகையாகாது.


நாகர்கோவில், குமரி முனை முதலிய பழந் தமிழ் நாட்டுப் பகுதிகளைப் போலவே, மேற்கூறிய தேவிகுளம் முதலிய பகுதிகளிலும் அனாதிகாலம் தொட்டுத் தமிழர்களே பெரும்பான்மையோராக இருந்து வருகிறார்கள்.

திருவாங்கூர் கொச்சி சட்டசபைக்காக அந்தப் பகுதிகளில் நடந்த சென்ற இரண்டு தேர்தல்களிலும் திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரசைச் சேர்ந்த தமிழர்களே அமோக வெற்றி பெற்றனர்.

மேலே குறிப்பிட்ட தாலூகாக்கள் தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும் என்ற தர்ம நியாயமான கோரிக்கையை எதிர்த்தவர்கள் யாரும் சென்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை.

சர்வம் பிரயாண மயம் ஜகத்!





அயல் நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து பற்பல காரியங்களுக்காகத் தூது கோஷ்டிகளும் ஆராய்ச்சிக் குழுக்களும் செல்வது சிலகாலமாகச் சர்வ சாதாரணமான காரியமாகி விட்டது!

இவ்வாறு அந்தப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களின் ஏகோபித்த கோரிக்கை வெளியாகி இருந்தும் அதை நிறைவேற்ற எந்தவித நடவடிக்கையும் எடுக்கப் படாதபடியால், அங்கே கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. அக்கொந்தளிப்பை அடக்குவதற்குத் திருவாங்கூர் கொச்சி சர்க்கார் அடக்கு முறைகளைக் கையாளுகிறார்கள்.

அங்கு சர்க்கார் கைக்கொண்டுள்ள அடக்கு முறைகளின் விளைவாகப் பிரபல தலைவர்களும், இந்தியா பார்லிமெண்டு அங்கத்தினர்களுமான ஸ்ரீ ஏ. நேசமணி, ஜனாப் அப்துல் ரஸாக், தி. கொ. சர்க்கார் முன்னாள் மந்திரி ஸ்ரீ சிதம்பரநாத நாடார் முதலியோர் தடை உத்தரவை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டு ஆறு வாரம் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளனர்.

இவர்களைத் தவிர, பல பெண்மணிகள் உள்படச் சுமார் நானூறு பேர் கைதியாகிச் சிறைப்பட்டிருக்கிறார்கள்.

சர்க்காருடைய மேற்படி அடக்கு முறை காரணமாக அந்த ராஜ்யத்தில் திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் வாதிகள் சத்தியாக்கிரக இயக்கம் தொடங்கி யிருக்கிறார்கள்.

முதல் சத்தியாக்கிரக கோஷ்டியைச் சேர்ந்த நாகர்கோவில் நகர சபைத்தலைவர் ஸ்ரீ டி. அனந்தராமன் எம். எல். ஏ. உள்படச் சில தலைவர்களுக்குச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

•• •• ••

திருவாங்கூர் பிரச்னையை ஒட்டிச் சில தினங்களுக்கு முன் ஜவாஹர்லால்ஜி குறிப்பிட்ட விவரங்கள் பத்திரிகைகளில் வெளியாகியிருக்கின்றன.

உத்தரப் பிரதேசத்தில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியார் விவசாயத் தீர்வைகளின் உயர்வைக் கண்டித்துக் கிளர்ச்சி செய்து வருகிறார்கள்.

அதன் சம்பந்தமாக உத்தரப் பிரதேசத்தில் அதிகாரத்தில் இருந்து வரும் காங்கிரஸ் சர்க்கார் பிரபல பிரஜா சோஷலிஸ்ட் தலைவரான லோஹியாவையும் மற்றும் ஏராளமான தொண்டர்களையும் கைது செய்திருக்கிறார்கள்.

அவ்விதம் செய்தது மக்களின் சுதந்திர உரிமைகளைப் பறிப்பதாகும் என்று பிரஜா சோஷலிஸ்ட் தலைவர்கள் கூறுகின்றனர்.

"திருவாங்கூரில் அதிகாரத்தி லிருக்கும் பிரஜா சோஷலிஸ்ட் சர்க்கார் திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்களைக் கைது செய்யவில்லையா! உத்தரப் பிரதேச சர்க்காரைக் கண்டிக்கும் பிரஜா சோஷலிஸ்ட் தலைவர்கள் திருவாங்கூரில் தங்கள் சர்க்கார் என்ன செய்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கொள்ளட்டும்" என்று ஜவாஹர்லால்ஜி கூறி யிருக்கிறார்.

பிரஜா சோஷலிஸ்ட் கட்சியினர்மீது உத்தரப் பிரதேச சர்க்கார் கைக்கொண்டு வரும் நடவடிக்கைகள் முற்றிலும் தவறானவை.

அதுபோலவே, திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள்மீது திருவாங்கூர் — கொச்சி சர்க்கார் கைக்கொண்டுள்ள நடவடிக்கைகளும் தவறானவைதான்.

•• •• ••

திருவாங்கூர்-கொச்சி பிரச்னை தமிழர்களுக்கும் மலையாளிகளுக்கும் ஏற்பட்டுள்ள பிரச்னை.

எனவே அங்கு காங்கிரஸ் சர்க்கார், பிரஜா சோஷலிஸ்ட் சர்க்கார், கம்யூனிஸ்டு சர்க்கார் அல்லது வேறு எந்த சர்க்கார் அதிகாரத்தில் இருந்தாலும், அங்குள்ள தமிழர்களின் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்க முன் வரமாட்டார்கள்.

ஏனெனில் அங்கு ஏற்படும் எந்தக் கட்சி சர்க்காரிலும் மலையாளிகளே பெரும்பாலோராக இருப்பார்கள் அல்லவா!

மலையாள சகோதரர்கள் எவ்வளவு விசால நோக்கம் கொண்டவர்களா யிருந்தாலும் மலையாளிகளின் நலன்களையே முதன்மையாகவும் முக்கியமாகவும் கருதுவது இயல்பு.

"மதராஸ் மனதே!" என்று ஆந்திர சகோதரர்கள் கிளர்ச்சி செய்தபோது, ஆந்திர காங்கிரஸ்காரர்கள், ஆந்திர சோஷலிஸ்டுகள், ஆந்திரப் பிரஜா கட்சியினர், ஆந்திர கம்யூனிஸ்டுகள் எல்லாரும் ஒன்று சேர்ந்து 'மதராஸ் மனதே!' என்ற பல்லவியைப் பாடினார்கள்.

பிரகாசம் கோஷ்டி, ரங்கா கோஷ்டி, சஞ்சீவி ரெட்டி கோஷ்டி, நாகி ரெட்டி கோஷ்டி,—ஆகிய எல்லா கோஷ்டிகளும் சென்னை நகர்மீது பாத்தியதை கொண்டாடினார்கள்.

திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்தில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களின் கோரிக்கை சம்பந்தமாக மலையாளிகள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும், பிரஜா சோஷலிஸ்ட் சர்க்கார் இப்போது செய்வதைப் போலத்தான் செய்வார்கள்.

இந்தப் பொதுத் தேர்தலுக்கு முன்னர் திருவாங்கூர் கொச்சியில் காங்கிரஸ் அதிகாரத்தில் இருந்தது. அப்போது தமிழர்கள் கோரிக்கை ஒப்புக்கொள்ளப் பட்டதா! இல்லையே!

பொதுத் தேர்தலுக்குப் பிறகு கூட தமிழர் கோரிக்கையை அங்கீகரித்திருந்தால் இப்போது காங்கிரஸ் ஆட்சியே நடந்து கொண்டிருக்குமே!

ஆகையால், திருவாங்கூர் கொச்சியில் எந்தக் கட்சியார் ஆட்சி நடத்தினாலும், அங்குள்ள தமிழர்களின் நிலைமை இப்போது போலத்தான் இருந்து வரும்.

திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்தில் உள்ள தமிழர்களின் கோரிக்கையைக் கேட்டு நியாயமான முடிவு கூறவேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்தினரையும், காங்கிரஸ் மேலிடத்தாரையும் சேர்ந்தது. அவர்கள் உடனே தலையிட்டுக் குமரி முனைக் கொந்தளிப்பு அடங்குவதற்கு நியாயமான அவசர நடவடிக்கைகளை எடுக்க முன் வரவேண்டும்.

கருத்தைக் கவரும் கைத்தொழில் மலர்

பாரத தேசமாகிற மாபெரும் மாளிகைக்கு அதில் உள்ள லட்சக் கணக்கான கிராமங்கள் தான் அஸ்திவாரம் என்பதை அறியாதார் இல்லை. இந்தியாவில் உள்ள மக்களில் பெரும்பாலோர் கிராமங்களில் வாழ்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் விவசாயத்தையே ஜீவனமாகக் கொண்டிருக்கிறார்கள். விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு வருஷத்தில் பல மாதங்கள் வேலை இருப்பதில்லை. அதனால் அவர்கள் போதுமான வருமானம் இன்றிக் கஷ்டப்படுவதுடன், பொன் போன்ற அவர்களுடைய நேரமும் வீணாகின்றது.

எனவே, கிராம மக்களுக்குச் சுபிட்ச வாழ்வு ஏற்படவேண்டுமாயின், அவர்கள் சிறு சிறு கைத்தொழில்களில் ஈடுபட வேண்டியது அவசியம்

என்று ஏற்படுகிறது. அவர்கள் அவ்வாறு ஈடுபடுவதற்குச் சர்க்கார் உதவியும் உற்சாகமும் அளிக்க முன்வரவேண்டும். இந்த மாகாணத்திலும் மற்ற மாகாணங்களிலும் எந்தெந்த சிறு கைத்தொழில்களில் மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைச் சர்க்கார் கணக்கு எடுக்க வேண்டும். எந்தெந்த விதத்தில் அந்தக் கைத் தொழில்கள் அபிவிருத்தி அடைவதற்குற்ற முறைகளைக் கைக்கொள்ளலாம் என்பதை ஆராய வேண்டும். நாட்டில் கோர தாண்டவமாடும் வறுமையையும் வேலையற்றோர் பிரச்னையையும் தீர்க்கும் விஷயத்தில் சிறு கைத்தொழில்கள் பேருதவியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சிறு கைத்தொழில்களின் வளர்ச்சி சம்பந்தமாக இதுவரையில் போதிய கவனம் செலுத்தப்படவில்லையென்பதை இந்திய சர்க்கார் உணர்ந்து, அதற்கு வேண்டிய பிரயத்தனங்களைத் தீவிரமாகத் தொடங்கி யிருக்கிறார்கள். முதல் ஐந்து வருஷத் திட்டத்தில் எஞ்சியுள்ள காலத்திலும், இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்திலும் சிறிய கைத்தொழில்களின் வளர்ச்சிக்குப் பெரிதும் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் அத்தகைய சிறிய கைத் தொழில்கள், — சிறிய பட்டணங்களிலும் கிராமங்களிலும் வீடுகளில் செய்யக் கூடிய கைத் தொழில்கள், — என்னென்ன இப்போது நடந்து வருகின்றன என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். அவற்றின் வளர்ச்சிக்கு வேண்டிய ஆதரவு அளிக்க வேண்டும்.

இன்னும் புதிய வீட்டுத் தொழில்கள் என்னென்ன ஆரம்பித்து நடத்தலாம் என்பதையும் ஆராய வேண்டும்.

தற்சமயம் தமிழ் நாட்டில் நன்கு நடந்து வரும் சிறிய கைத்தொழில்களில் தீப்பெட்டி செய்யும் தொழில் மிக முக்கியமானதாக விளங்குகிறது. சிவகாசி — சாத்தூர்ப் பகுதிகளிலுள்ள பல்லாயிரம் மக்கள் இத் தொழிலில் ஈடுபட்டு நல்வாழ்வு நடத்தி வருகிறார்கள். இந்தப் பகுதிகளைச் சேர்ந்த அறிவாளிகள் சிலர் இந்தியா சுதந்திரம் பெறுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே தீப்பெட்டித் தொழிலின் முக்கியத்தை உணர்ந்து அதை ஆரம்பித்தார்கள். அவர்களுடைய சலியா உழைப்பினாலும் ஊக்கத்தினாலும் தீப்பெட்டித் தொழில் ஒரு சிறந்த வீட்டுத் தொழிலாக நல்ல முறையில் நடந்து வருகிறது.

தீப்பெட்டித் தொழிலை யொட்டிய வேறு சில கைத் தொழில்களும் அந்தப் பகுதிகளில் வளர்ந்திருக்கின்றன.

மேற்கூறிய சிறிய கைத்தொழில்களைப் பற்றித் தமிழ் மக்கள் நன்கு அறிந்து கொள்ளும் பொருட்டு, நமது அடுத்த "கல்கி" இதழ் அரிய கட்டுரைகளுடனும் விசேஷப் படங்களுடனும் கைத்தொழில் மலராக வெளியாகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நேருஜியின் நல்ல பதில்

சித்தூர் ஜில்லாவைச் சேர்ந்த தமிழ்த் தாலூக்காக்களைத் தமிழ் நாட்டுடன் இணைக்கும் விஷயமாகச் சில தினங்களுக்கு முன் சென்னையில் நடந்த மாபெரும் கூட்டத்தைப் பற்றிச் சென்ற வாரம் குறிப்பிட்டிருந்தோம். அதன் சம்பந்தமாகத் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைக்கு ஜவாஹர்லால்ஜியிடமிருந்து நல்ல பதில் கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

"ராஜ்ய எல்லைப் பிரச்னையைத் தீர்க்கும் விஷயமாக இந்திய சர்க்கார் ஆலோசித்து வருகிறார்கள்; அதை ஒட்டிச் சில தகவல்களைச் சேகரிக்கவும் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன" என்று வட எல்லைப் பாதுகாப்புக் கமிட்டியின் காரியதரிசி ஸ்ரீ கே. விநாயகத்துக்கு நேருஜி எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவசியமான தகவல்கள் சேகரிக்கப்பட்டதும், சென்னைப் பிரதமரும் ஆந்திர ராஜ்யப் பிரதமரும் சந்தித்து, எல்லைக் கமிஷன் நியமன விஷயமாக ஒரு முடிவுக்கு வருவார்கள் என்றும் நேருஜி அன்புடன் அறிவித்திருக்கிறார்.

அப்பிரச்னையைத் தீர்க்கும் விஷயத்தில் இந்திய சர்க்கார் மிகவும் அக்கறை கொண்டிருப்பதாக நேருஜி கூறியிருப்பது தமிழர்களுக்குத் திருப்தியை அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

வட எல்லைக் கிளர்ச்சி சம்பந்தமாக இனித் தீவிர நடவடிக்கை எதுவும் எடுத்துக் கொள்ள அவசியமில்லை என்று ஸ்ரீ ம. பொ. சிவஞான கிராமணியார் அறிவித்திருப்பதிலிருந்து ஜவாஹர்லால்ஜியின் பதில் எத்தகைய திருப்திகரமான சூழ்நிலையை உண்டாக்கி யிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

திருத்தணிப் பகுதியிலுள்ள தமிழ் மக்களுக்கு ஸ்ரீ ஜவாஹர்லால்ஜியின் பதில் பெரிதும் ஆறுதல் அளித்திருக்க வேண்டும். அந்தப் பதிலை அவர்கள் தங்களுக்குக் கிடைத்துள்ள முதல் வெற்றியாகவே கருதிப் பெருமிதம் அடையலாம்.

"ஓடுது பார் டிராம் வண்டி!"

சென்னை நகரிலுள்ள ஏழை மக்கள் பல்லாயிரக் கணக்கானவர்கள் தலைப்பில் கண்டவாறு கனவு கண்டு வருகின்றனர். மீண்டும் டிராம் வண்டி ஓடாதா என்று ஏங்கி யிருக்கின்றனர்.

ஆலைகளுக்கும், வேறு தொழிற் சாலைகளுக்கும் செல்லும் தொழிலாள சகோதரர்களும், அவர்களுக்கு மத்தியான உணவு கொண்டு போகும் பெண்மணிகளும், டிராம் வண்டி மீண்டும் ஓடுவதை எதிர்பார்க்கின்றனர்.

நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களான என். ஜி. ஓ. குமாஸ்தாக்களும், பள்ளிக்கூட ஆசிரியர்களும், வர்த்தகக் கம்பெனிகளிலும் கடைகளிலும் பணி செய்பவர்களும், மற்றும் பலரும் "டிராம் வண்டி திரும்ப வந்தால் நல்லதுதான்" என்று நினைக்கிறார்கள்.

பஸ் விகிதம் மூன்றணாவாக உள்ள இடத்துக்குப் போக டிராம் வண்டிக்கு இரண்டணா கட்டணம் வாங்கப் பட்டது.

போவதற்கு ஓரணாவும் வருவதற்கு ஓரணாவும் ஆக தினம் இரண்டணா டிராம் வண்டியினால் லாபம் ஆயிற்று.

தினம் இரண்டணா லாபம் என்பது அலட்சியம் செய்யத் தக்கதா!

"ஹிந்து" பத்திரிகையை வாங்கி வைத்துக் கொண்டு டிராம் வண்டியில் மயிலாப்பூரில் ஏறினால், சாவகாசமாகப் படித்துக் கொண்டு போய்ப் பாரீஸ் கார்னரில் இறங்கலாமே!

தமிழ்த் தினசரிப் பத்திரிகையாயிருந்தால் காலையில் ஒன்றும் மாலையில் ஒன்றும் வாங்கலாமே!

பத்திரிகையே வாங்காமல் சேர்த்து வைத்து வந்தால் மாதம் மூன்றே முக்கால் ரூபாய் லாபம் ஆயிற்றே!

நாஸுக்குக்காரர்களும், மோட்டார் வண்டியில் போவோர்களும் "டிராம் கடபுட சத்தம் போடுகிறது! நரம்புகளைப் பாதிக்கிறது" என்றெல்லாம் சொல்லக் கூடும்.

டிராம் வண்டிப் பாதை இல்லாத இடங்களும் சென்னை நகரில் இருக்கின்றன என்பதை இவர்களுக்கு ஞாபகப்படுத்தினால் போகிறது!

டிராம் வண்டியைத் திரும்ப ஓட்டுவது பற்றி யோசிக்கும்போது அரசாங்கத்தார் லாப நஷ்டக் கணக்குப் பார்ப்பது இயல்புதான்! ஆனால் ஏழை மக்களின் குடும்ப லாப நஷ்டக் கணக்கையும் அவர்கள் யோசித்துப் பார்ப்பது உசிதமாகும்.

டிராம் வண்டிகளைத் திரும்ப ஓட்டுவதற்குச் செய்யப்படும் முயற்சிகளை நாம் ஆதரிக்கிறோம். அம்முயற்சிகளைத் தொடங்கி நடத்துவோரைப் பாராட்டுகிறோம். அவர்களுடைய பிரயத்தனம் வெற்றி பெற்றால் மிக்க மகிழ்ச்சி அடைவோம்.

குடியாத்தம் உபதேர்தல்

சென்னைச் சட்டசபைக்குக் குடியாத்தம் தொகுதியில் நடைபெற வேண்டிய உபதேர்தல் தினம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆகஸ்டு மாதம் முதல் தேதியன்று நடக்கும் அந்தத் தேர்தலில், மக்கள் திரளாகச் சென்று தங்கள் வாக்குரிமையைப் பதிவு செய்ய வேண்டும்; ஜனநாயகத்தில் தங்களுக்குள்ள அக்கறையையும் அபிமானத்தையும் நிரூபிக்க வேண்டும்.

சென்னை ராஜ்ய முதல் மந்திரி ஸ்ரீ காமராஜ நாடார் மேற்படி தேர்தலுக்கு நிற்கும் அபேட்சகர்களில் ஒருவராக இருப்பதால், அது அதிக முக்கியத்துவம் பெற்றிருப்பது இயல்பே. எனவே, சிறந்த காங்கிரஸ் வாதியான தங்கள் ராஜ்ய முதல் மந்திரியையே தங்களுடைய பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு குடியாத்தம் தொகுதியில் உள்ள வாக்காளர்களுக்குக் கிடைத்திருக்கிறது. பாரத நாட்டின் அரசியல் சாஸனம் அவர்களுக்கு அளித்துள்ள அருமையான உரிமையை அவர்கள் உபயோகிக்கத் தவற மாட்டார்கள் என்று நம்புகிறோம். முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ நாடாரைத் தங்களுடைய பிரதிநிதியாகப் பெறும் வாய்ப்பையும் கைநழுவ விட மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

மானும் மங்கையும்

இவ்விதம் அட்டைச் சித்திரமாக மானையும் மங்கையையும் நமது சித்திரக்காரர் தீட்டியிருக்கிறார். இதைக் காணும்போது நம் முன்னோர்களின் சிறந்த கலையுணர்ச்சியை எண்ணி வியக்காமலிருக்க முடியவில்லை.

காட்டில் திரியும் மானின் அழகை அவர்கள் எவ்வளவோ பார்த்து அனுபவித்திருக்க வேண்டும். அப்படி அனுபவித்திருந்தாலன்றி, மானின் மருண்ட பார்வையுடன் மங்கையரின் மருண்ட பார்வையை ஒப்பிட்டுக் கூற முடியுமா? மானின் விழியழகை ரஸித்து 'மான் விழியாள்' என்று அழகிய கண்களைப் பெற்ற பெண்களைக் குறிப்பிட்டார்கள். அதன் மேனியழகை ரஸித்து, அழகிய பெண்களை "மானே!" என்று அழைத்தார்கள். மான் துள்ளித் திரியும் அழகையும் பெரிதும் ரஸித்திருக்கிறார்கள்.

இப்படி அவர்கள் மானையும் மங்கையரையும் ஒப்பிட்டு மகிழ்ந்தமைக்கு ஆயிரக் கணக்கில் பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து உதாரணங்கள் காட்டலாம். ஆனால் சமீப காலத்தில் நம்முடன் வாழ்ந்த மகாகவி பாரதியார் நம் முன்னோர்கள் வகுத்துக் கொடுத்துச் சென்ற மரபை விட்டுப் பிறழாமல் பாடியிருக்கும் இந்த அடிகளைப் பாருங்கள்:

> துள்ளிக் குலாவித் திரியும் சிறுவன
> மானைப் போல் — தினைத்
> தோட்டத்திலே யொரு பெண்ணை
> மணங் கொண்ட வேலவா!

மான் என்றால் ஆண் மானைத்தான் குறிக்கும். அதனால் பெண்களை ஆண் மானோடு ஒப்பிடுவது சரியல்ல என்று தீர்மானித்து, ஓர் இளைஞனைப் பார்த்து 'மானே!' என்று அழைத்துப் பாடினால் நன்றாக இருக்குமா?

பெண்களைத் 'தோகையர்' என்று தோகை கொண்ட ஆண் மயில்களுடன் ஒப்பிட்டுப் பூர்வ காலமுதல் இலக்கியங்களில் வழங்கி வருகிறது. இது சரியல்ல; ஆண்களைத்தான் தோகையர் என்று குறிப்பிட வேண்டும் என்று மாற்றிப் பாடினால் நன்றாக இருக்குமா?

பெண்களை, 'மானே!' என்றும் 'தோகையரே!' என்றும் விளிப்பது தமிழ் நாட்டில், தமிழ் இலக்கியத்தில் மரபாகி விட்டது!

பாரதியார் புதுமைக் கவிஞர். ஆயினும் தமிழ் மரபை விடாமல் காப்பாற்றி வந்திருக்கிறார். தமிழின் உயிர்நாடி அதன் மரபில்தான் இருக்கிறது.

திருமணம்

கல்கத்தா வல்கன் டிரேடிங் கம்பெனியைச் சேர்ந்த ஸ்ரீ சி. வி. கிருஷ்ணய்யர் குமாரத்தி **சௌ. சரோஜாவுக்கும்**, மேட்டுப்பாளையம் ஸ்ரீ துரைசாமி அய்யர் குமாரரும், சென்ட்ரல் எக்ஸைஸ் இன்ஸ்பெக்டருமான சிரஞ்சீவி **டி. ஏ. பத்மநாபனுக்கும்** இம்மாதம் 4-ம் தேதி கோயமுத்தூரில் மிகச் சிறப்பாக திருமணம் நடந்தேறியது. இத் தம்பதிகளுக்கு நமது மனமார்ந்த வாழ்த்துக்கள்!

வாழ்க, சரோஜா - பத்மநாபன்





பட்டுக்கோட்டை மணிலா பயர் வியாபாரம் பாலு & பிரதர்ஸ் பார்ட்டனரும் திரு எஸ். தனுக்கோடி செட்டியார் புதல்வருமான செல்வன் டி. துரைராஜுக்கும் திருத்துறைப் பூண்டி மளிகை திரு அ. கி. கல்யாணசுந்தரம் செட்டியார் புதல்வி செல்வி கே. பகீரதிக்கும் 24-6-54ல் திருமணம் வெகு சிறப்பாக நடை பெற்றது. பல இடங்களிலிருந்து வாழ்த்துத் தந்திகளும், வாழ்த்துப்பத்திரங்களும், பரிசுக ளும் வந்தன. வாழ்த்துச்செய்திகள், பரிசுகள் அனுப்பி எங்களைக் கௌரவித்த எல்லோ ருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

வாழ்க மணமக்கள்!

திருவருள் தழைக்கும் தமிழ்நாடு

ரா. கி.

சில ஆண்டுகளுக்கு முன்பு இலங்கைக்குச் சென்றிருந்தபோது கொழும்புமா நகரில் ஒரு சிறந்த அன்பரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவ்வன்பரின் பெயர் ஸ்ரீ சோமசுந்தரம் பிள்ளை. அவருடைய ஊர் குலசேகரன் பட்டினம். கொழும்பு நகரில் பெரிய அளவில் வர்த்தகம் செய்து கொண்டிருந்தார். லட்சக் கணக்கில் பொருளீட்டி யிருந்தார். ஆங்கில முறையில் தொப்பியும் மற்ற உடைகளும் அணிந்திருந்தார். ஆயினும் சமயப் பற்றும் தமிழ்ப் பற்றும் மிக்கவர் என்று தெரிந்தது. ஜிந்துப்பட்டி கோயிலில் நடந்து வரும் கூட்டுப் பிரார்த்தனைக்கு என்னை அழைத்தார். அங்கே அவருடைய திருக்கோலம் முற்றும் மாறி யிருந்தது. விபூதி ருத்திராட்சம் அணிந்த சிவனடியாராகக் காட்சி அளித்தார்.

சில காலத்துக்குப் பிறகு அன்பர் ஸ்ரீ சோமசுந்தரம் பிள்ளை துறவறம் பூண்டு மதுரையில் உள்ள ஸ்ரீ ஞானசம்பந்தர் மடத்துக்கு வந்துவிட்டார் என்றும், அங்கே திருப்பெருந் திருவருள் தவயோக சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் என்னும் பட்டப் பெயர் பூண்டு விளங்குகிறார் என்றும் தெரிந்ததும், எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"இது என்ன ! பழைய காலம் திரும்பி வருகிறது போலிருக்கிறதே ! மாணிக்கவாசகர், சேக்கிழார், பட்டினத்தார் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் இக்காலத்திலும் உளர் என்று தோன்றுகிறதே !" என்று எண்ணி எண்ணி வியந்தேன்.

மேலே குறிப்பிட்ட மதுரை ஞானசம்பந்தர் மடம் தமிழ் நாட்டில் மிகத் தொன்மை வாய்ந்த மடம். பாண்டிமா தேவி மங்கையர்க்கரசியார் அழைத்து ஞானசம்பந்தப் பெருமான் மதுரை சென்றிருந்த காலத்தில் அந்த மடாலயம் ஆரம்பமாயிற்று. இப்போது அம்மடத்தின் ஆதீன கர்த்தரான பரமாச்சாரிய சுவாமிகள் 291-வது பட்டத்துக் குரியவர் !

ஆதீனம் தொன்மை மிக்கதாயினும், பொருள் வருவாய் இல்லாதது. ஆகையினால் ஸ்ரீ சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் துறவறம் பூணுவதற்கு முன்னால் அம் மடத்துக்கு ஒரு பெரிய நன்கொடை அளித்ததாக அறிந்தேன்.

இது மட்டுமன்று ; தாம் அதுவரை வர்த்தகத் துறையில் ஈட்டியிருந்த பொருளை இன்னும் பல நற் பணிகளுக்கும் விநியோகித்தார். "திருவருள் தவநெறி மன்றம்" என்ற சமயப் பிரசார ஸ்தாபனம் ஒன்றை நிறுவினார். அதன் பணி நன்கு நடைபெறுவதற்காக ஐம்பதினாயிரம் ரூபாய் நன்கொடை தந்தார்.

இந்தச் செய்திகள் எல்லாம் என்னைத் திணற அடித்தன. "கொழும்பில் நாம் சந்தித்த ஆங்கில நாகரீக சீலரான ஸ்ரீ சோமசுந்தரம் பிள்ளைதானா இப்படித் துறவறம் பூண்டவர் ! அல்லது அதே பெயர் கொண்ட வேறு ஒருவரா !" என்ற சந்தேகமும் உண்டாயிற்று !

** ** **

நிகழும் ஜூலை மாதத் துவக்கத்தில் திருக்கழுக்குன்றத்தில் ஒரு பெரு விழா நடந்தது. அந்தத் திருவிழாவைத் "திருமுறைப் பெருவிழா" என்று அழைத்தார்கள். மாணிக்கவாசகப் பெருமான் திருக்கழுக்குன்றத்தில் முடிவான ஞான பரிபக்குவம் பெற்று அங்கே தமது திருவடிகளைப் பதித்துவிட்டுச் சென்ற பெருமை பெற்றது திருக்கழுக்குன்றம். ஆகையால் அப்பெருமானுடைய திருநட்சத்திரமாகிய ஆனி மகத்தை யொட்டித் "திருமுறைப் பெருவிழா"வை அங்கே நடத்தி வருகிறார்கள். நடத்துகிறவர்கள் சென்னைச் சிவனடியார் திருக் கூட்டத்தார். அங்கே வந்து சேர்ந்து விழாவை நடத்து கிறவர்கள் பல ஊர்களிலிருந்தும் வரும் பக்தர்கள். இந்த விழாவின் பேரவையை இவ்வாண்டு துவக்கி வைப்பதற்காக என்னை அழைத்திருந்தார்கள். "ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே !" என்று அருள் மொழியை மனதிற் கொண்டு அந்தப் பணியை நிறைவேற்றச் சென்றிருந்தேன்.

அங்கே பேரவைக்குத் தலைமை வகித்த மதுரை ஆதீன இளவரசு திருவருள் சோமசுந்தர தேசிக பரமாச்சாரியார் சுவாமிகளைப் பார்த்தேன். கொழும்பில் நான் சந்தித்த வர்த்தகர் செல்வர் தான் இவ்வாறு தவத் திருக்கோலத்தில் விளங்குகிறார்கள் என்று நேரில் கண்டு உறுதி பெற்றேன்.

** ** **

ஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகளிடம் பூர்வாசிரமத்திலும் தற்போதும் பக்தி பூண்டு ஒழுகும் ஸ்ரீ வீர சிவசுப்பிரமணியம் அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தேன். இந்த நண்பர் எனக்கு நெடுநாளாகத் தெரிந்தவர். குற்றாலத்தில் ரசிகமணியின் இல்லத்தில் அடிக்கடி சந்தித்திருக்கிறேன்.

"தமிழ் நாட்டில் பொதுவாக மடாலயங்களையும் மடாதிபதிகளையும் பற்றி அவ்வளவு நல்ல உணர்ச்சி பரவி யிருக்கவில்லை யல்லவா ! சென்ற முப்பது ஆண்டுகளாக மடங்களையும் மடாதிபதிகளையும் சக்கைப்போடு போட்டு வருகிறார்களே ! பேச்சு மேடைகளிலும், நாடக அரங்கங்களிலும், வெள்ளித் திரைப் படங்களிலும் சாமியார்களை வெளுத்துக் கட்டி வருகிறார்களே ! எல்லாரும் சேர்ந்து வெளுக்கிற வெளுப்பில் சாமியார்களின் காவித் துணிகள் எல்லாம் வெள்ளையாகி விட்டிருக்குமே ! இவையெல்லாம் நம் கொழும்பு நண்பருக்கு நன்றாகத் தெரிந்ததுதானே ! அப்படியிருந்தும், அவர் இல்லறத்தை விட்டுத் துறவறம் பூண்டு காஷாயம் தரித்ததேன் ! மடாலயத்தில் சேர்ந்ததேன் !" என்று கேட்டேன்.

அதற்கு ஸ்ரீ வீர சிவசுப்பிரமணியம் சரியான மறுமொழி கூறினார். சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையிலிருந்து ஒரு நிகழ்ச்சியை ஞாபகப்படுத்தினார். சுவாமி விவேகானந்தர் அதிகமாகப் பிரசித்தி அடையாதிருந்த காலத்தில் தென்னிந்தியாவில் ரயில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவருடைய வண்டியில் இருந்த சில வெள்ளைக்கார ஸோல்ஜர்கள், இந்தியா நாட்டில் காவி உடுத்தித் திரியும் சன்யாசிகளைப் பற்றி நிந்தையாகப் பேசிக் கொண்டு வந்தார்கள். "இந்தியா தேசம் கெட்டுப் போவதே இந்தச் சாமியார்களினாலேதான் !" என்று தங்கள் முடிவான அபிப்பிராயத்தை ஒருவருக்கொருவர் வெளியிட்டுக் கொண்டார்கள்.

சுவாமி விவேகானந்தர் இந்தச் சம்பாஷணையில் குறுக்கிடாமல் மௌனமாகக் கேட்டுக் கொண்டு



குந்தக்கல் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு எஸ். சண்முகம் அவர்கள் குந்தக்கல்லை விட்டுச் சென்னை செல்வதை முன்னிட்டு மேற்படி சங்கத்தார் அவருக்கு ஒரு பிரிவு உபசார விருந்து நடத்தினர். திரு சண்முகம் அவர்கள் மாலையுடன் அமர்ந்திருப்பதையும் தமிழ்ச் சங்க அங்கத்தினர்கள் சூழ்ந்து நிற்பதையும் படத்தில் காணலாம்.

வந்தார். அவருக்கு ஆங்கிலம் தெரியாது என்று அந்த ஆங்கிலேயர்கள் எண்ணி யிருந்தார்கள். சேலம் ரயில்வே நிலையம் வந்ததும், ஸ்டேஷன் மாஸ்டர், சுவாமி விவேகானந்தரை அடையாளம் தெரிந்து கொண்டு வந்து வணங்கினர். அவரிடம் ஆங்கிலத்தில் சுவாமிகள் பேசுவதை அந்த வெள்ளைக்காரப் பிரயாணிகள் கேட்டு ஆச்சரியம் அடைந்தார்கள். மறுபடியும் ரயில் புறப்பட்டதும், "சாமியாரே! உமக்குத்தான் ஆங்கிலம் தெரிந்திருக்கிறதே! நாங்கள் பேசிக்கொண்டு வந்ததை மறுத்து நீர் ஏன் ஒன்றும் சொல்லவில்லை!" என்று கேட்டார்கள். "மூட்டாள்களை நான் சந்திப்பது இது முதல் தடவை அல்ல!" (This is not the first time that I meet fools!) என்றார் சுவாமி விவேகானந்தர்.

"துறவறத்தைப் பழிப்பவர்களைப் பற்றி எங்கள் பரமாச்சாரியரின் கருத்தும் அதுவே தான்!" என்றார் ஸ்ரீ வீர சிவசுப்பிரமணியம்.

** ** **

திருக்கழுக்குன்றத்துப் பெரு விழாவில் இன்னும் சில பேரடியார்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அவர்களில் ஒருவர் திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர். திருப்புகழ் மணி அவர்களின் பஜனையில், ரஸிகமணி டி. கே. சி. அவர்களின் மூலமாக எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. இந்த இரு பெரியார்களின் நட்பினால் அடியார் கூட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புக்கள் சில சமயம் கிடைத்தன. ஒரு கூட்டத்தில் என் இருபுறத்திலும் இந்தப் பெரியவர்கள் அமர்ந்திருந்தார்கள். நான் பேசும்படி நேரிட்டது. "இந்தப் புறத்தில் திருப்புகழ் மணி; அந்தப் புறத்தில் ரஸிகமணி. நானோ ஒரு பெண் மணி கூட இல்லையே! இவர்களுக்கு முன்னால் நான் என்ன பேச முடியும்!" என்று பேச்சை நான் தொடங்கியதும் சபையோர் சிரித்து மகிழ்ந்ததும் எனக்கு நினைவுவருகிறது. அவ்விரு பெரியார்களில் ரஸிகமணி நம்மிடையே இப்போது இல்லை.

ரஸிக மணி நம்மை விட்டுச் செல்வதற்குச் சில காலத்துக்கு முன்னால், திருப்புகழ் மணி தம் பக்த கோஷ்டியுடன் குற்றாலம் சென்று சில நாள் தங்கியிருந்தார். அடிக்கடி பஜனைப் பாடல்கள் பாடி ரஸிக மணியைப் பரவசப்படுத்தினர்.

ரஸிகமணி டி. கே. சி. அறிவு சான்ற ஆராய்ச்சியில் உறுதியான பற்றுக் கொண்டவர். கவிதை இலக்கியத்தையும் பக்தி இலக்கியத்தையும் வேறாகப் பிரித்தே பார்ப்பார். பக்திப் பாடல் என்பதற்காக நல்ல கவிதை என்று ஒப்புக்கொண்டு விட மாட்டார்.

ஆனாலும் திருப்புகழ் மணியின் பஜனைகளில் அவருடைய ஈடுபாடு வியப்புக்குரியதா யிருந்தது. "நான் எத்தனை பாடல் சொல்லி என்ன! திருப்புகழ் மணியைப் போல் கையில் ஜாலராவைத் தட்டிக் கொண்டு இசையோடு ஒரு பக்திப் பாடல்பாட முடியவில்லையே!" என்று ஏங்குவார்.

இந்த ஆர்வம் அவர்கள் உள்ளத்தில் எவ்வளவு ஆழப் பதிந்திருந்தது என்பது திருப்புகழ் மணி குற்றாலத்தில் டி. கே. சி. யிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டபோது வெளியாயிற்று. "ஒரு கோரிக்கை. தங்களிடம் உள்ள ஒரு பொருளைக் கேட்கப் போகிறேன். அதைத் தந்து விட்டுப் போக வேண்டும்!" என்றார்.


திருப்புகழ் மணியும் ஆவலுடன், "அதற்குத் தடை என்ன! கேட்கலாம்!" என்றார்.

"தங்களுடைய ஜாலராவை இங்கே வைத்து விட்டுப் போக வேண்டும். அது தங்களுடைய பக்திப் பாடல்களை எனக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கும்!" என்றார் ரஸிகமணி.

இவ்வாறு, தமிழ் நாட்டின் சிறந்த அறிவாளி ஒருவரின் மதிப்பைக் கவர்ந்திருந்த திருப்புகழ் மணி அவர்களையும், அவர்களுடன் பக்தி பரவசமாகப் பஜனை பாடிக்கொண்டு மலை ஏறிய அடியார் கூட்டத்தையும் நேயர்கள் எதிர்ப் பக்கத்தில் உள்ள படங்களில் காணலாம்.

** ** **

திருக்கழுக்குன்றத்தில் நான் சந்தித்த இன்னொரு சமயத் தொண்டர், ஆசிரியர் இளவழகனார் அவர்கள். தமிழுக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும், சமயப் பணிக்கும் இவர் தம் வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கிறார். "திருக்குறள் காட்டும் ஒழுக்க நெறியை உலகமெல்லாம் ஒப்புக் கொண்டு சிறப்புற வேண்டும்" என்னும் மகத்தான இலட்சியம் இவரை ஆட்கொண்டிருக்கிறது. மாம்பாக்கத்தில் வள்ளுவர் குருகுலம் இந்த நோக்கத்துடன் வைத்து நடத்தி வருகிறார். கந்தரனுபூதி முதலிய பக்தி நூல்களைப் பற்றிய இவருடைய சொற்பொழிவுகளால் சென்னை நகரில் ஒரு பெரும் அடியார் கூட்டத்தைத் தயாரித்திருக்கிறார். இவ்வாண்டில் சென்னை மா நகரில் இவர் நடத்திய வள்ளுவர் விழா ஒரு தனிச் சிறப்பு வாய்ந்ததா யிருந்தது. திருவள்ளுவர் கோயிலிருந்து அப் புலவர் பெருமானின் உருவப் படத்தை ஊர்வலமாக எடுத்துச் சென்று,



திருவருட் செல்வர்கள் :—ஆசிரியர் இளவழகனார், திருமுருக கிருபானந்தவாரியார், தவத்திரு சோமசுந்தர தேசிக பரமாச்சாரியார்.

பத்து தினங்கள் சென்னை நகரின் வெவ்வேறு பகுதிகளில், பத்து இடங்களில் எழுந்தருளச் செய்து, அங்கங்கே திருக்குறள் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்வித்தார். பத்தாம் நாள் விழா சென்னைப் பூக்கடைத் தெருவிலுள்ள ஸ்ரீ சென்ன மல்லீஸ்வரர் ஆலயத்தில் இதற்கு முன் என்றும் கண்டிராத பெருமையுடன் சிறப்பாக நடந்தது

ஆசிரியர் இளவழகனாருடைய பேரூக்கமும் பெரு முயற்சியுந்தான் திருக்கழுக்குன்றத்தில் இந்தச் சமயப் பெரு விழா ஆண்டுதோறும் நடந்து வருவதற்குக் காரணமாகும். மாம்பாக்கம் குருகுலத்திலிருந்து தமது அன்பர் — மாணவர் குழாத்துடன் திரு இளவழகனார் வந்திருந்து பல விதங்களிலும் விழாவைச் சிறப்புறச் செய்தார்.

** ** **

இன்னொரு திருவருட் செல்வரைப் பற்றிக் கூறுவதைக் கடைசியாக வைத்துக்கொண்டேன். ஸ்ரீ கிருபானந்த வாரியாரின் சொற்பொழிவுக்குப் பின்னர் வேறு யாருடைய பேச்சும் எடுபடாது என்ற காரணத்தினால், எந்தக் கூட்டத்திலும் அவரையே கடைசியில் பேசச் சொல்வது வழக்கமா யிருந்து வருகிறது. அந்த மரபு பற்றி நானும் இச் சிறு கட்டுரையில் அவரைக் கடைசியாகக் கொண்டு வந்து நிறுத்துகிறேன்.

இதோ, "மெய்யன்பர்களே!" என்று அழைத்துச் சொற்பொழிவைத் துவங்கி விட்டார்கள். காவேரிப் பிரவாகம்போல் செந்தமிழ் வெள்ளம் பொங்கி வருகிறது!......

ஸ்ரீ கிருபானந்தவாரி அவர்களைப் பற்றியும், அவர்களுடைய சொற்பொழி வாற்றலைப் பற்றியும், வடலூரில் அவர்கள் இயற்றியுள்ள சத்திய ஞான சபைத் திருப்பணியின் மகிமை பற்றியும் அறிந்திராத தமிழர் யாரும் இருக்க முடியாது. வடலூரில் திருப்பணி முடிந்து கும்பாபிஷேகம் நடந்த போது சுமார் பதினைந்து லட்சம் ஜனங்கள் குழுமியிருந்தார்கள். அந்த வைபவத்தைப் பற்றிய புகைப் படங்கள் அப்போது "கல்கி"யில் வெளியாகி யிருக்கின்றன.

வடலூரில் அவர்களுடைய மகத்தான திருப்பணியைப் பார்க்கும் பேறு சென்ற ஆண்டிலே தான் எனக்குக் கிடைத்தது.

அவதார புருஷரான ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் ஜோதியுடன் கலந்த புனிதமான ஸ்தலத்தில் கம்பீரமாக எழுந்து நிற்கும் சத்திய ஞான சபையில் மூன்று மணி நேரம் இருந்தேன். இந்த மூன்று மணி நேரமும் "ஸ்ரீ கிருபானந்தவாரி என்கிற ஒரு 'தனி மனிதர் இவ்வளவு மகத்தான திருப்பணியை எப்படிச் செய்து முடித்தார்!" என்று வியப்பதிலேயே சென்று விட்டது.

பின்னர், ஸ்ரீ கிருபானந்தவாரியார் செய்து வரும் மற்றப் பணிகளையும் நன்கு தெரிந்து கொள்ள வேணும் என்ற ஆவல் உண்டாயிற்று. அவர் வெளியிட்டு வரும் "திருப்புகழமிருதம்" என்னும் மாத இதழ், கந்தரனுபூதி — கந்தரலங்கார விரிவுரைகள், கம்பன் கவிமணிகள், சிந்தனைத் தேன் முதலிய நூல்களைப் பார்த்தேன். இவற்றை யெல்லாம் பார்க்கப் பார்க்க, "ஸ்ரீ கிருபானந்த வாரியார் ஒரு தனிப்பட்ட மனிதர் அல்ல; அவரே ஒரு பெரிய ஸ்தாபனம்" என்று முடிவு செய்ய வேண்டியதாயிற்று.

** ** **

தமிழ் நாட்டில் சொற்பொழிவாற்றல் மிக்கவர்கள் பலர் முன்னும் இருந்தார்கள்; இப்போதும் இருக்கிறார்கள். அவர்களில் பலருடைய சொற்பொழிவுகளை நான் கேட்டிருக்கிறேன்.

அவர்களில் யாரையும் இணை சொல்ல முடியா வண்ணம், ஸ்ரீ கிருபானந்தவாரியாரின் சொற்பொழிவாற்றல் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்ததாக விளங்குகிறது.

அரசியல் ஆவேசம், இனப் பகைமை, சாதித் துவேஷம், மொழிப் பூசல், பணக்காரர்மீது போர் முழக்கம், மோனை எதுகை, அடுக்கு மொழித்

தொடர் ஆகியவற்றின் துணை கொண்டு ஆயிரக் கணக்கான மக்களின் முன்னால் பேசி ஆரவாரம் உண்டாக்கக் கூடிய சொற்பொழிவாளர்கள் தமிழ் நாட்டில் பலர் இருக்கிறார்கள்.

ஆனால் ஸ்ரீ கிருபானந்தவாரியாரோ மேற் கூறிய சாதனங்களில் எதையும் கையாளுவதில்லை.

அவர் சமய தத்துவங்களைப் பற்றிப் பேசுகிறார்; இறைவன் திருவருளைப் பற்றிப் பேசுகிறார்; பழைய புராண இதிகாசங்களைப் பற்றிப் பேசுகிறார்; ஒழுக்க நெறியைப் பற்றிப் பேசுகிறார்.

ஆவேசத்துக்கு இடம் கொடாத இத்தகைய பொருள்களைப் பற்றி யாவருக்கும் எளிதில் விளங்கக் கூடிய 'பாமர'த் தமிழ் நடையில் பேசுகிறார்.

ஆயினும் மூன்று மணி நேரத்துக்கு மேலே பதினாயிரக்கணக்கான மக்கள் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருக்கும்படி செய்கிறார்.

ஆங்கிலம் படித்த அறிஞர்கள், தமிழ்ப் புலமை மிக்க சான்றோர்கள், ஏதோ ஓரளவு கல்வி கற்றவர்கள், எழுத்தறிவே இல்லாத நன்மக்கள், பெண் மணிகள், குழந்தைகள் அனைவரும் கேட்டு ரசித்து மகிழ்ந்து உள்ளத்தில் பதிய வைத்துக் கொண்டு செல்லுமாறு ஸ்ரீ கிருபானந்தவாரியின் சொற் பொழிவுகள் அமைகின்றன.

தொல்காப்பியத்திலிருந்து பாரதியார் பாடல் வரை ஸ்ரீ கிருபானந்தவாரியார் ஆராய்ந்து அறியாத சிறந்த தமிழ் நூல் எதுவும் இல்லை.

சங்க நூல்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், பெரிய புராணம், கம்பராமாயணம், வில்லி பாரதம், தேவார திருவாசக திவ்யப் பிரபந்தங்கள், திருப்புகழ் முதலிய தெய்வத் தமிழ் நூல்கள் எல்லாவற்றையும் நன்கு கற்றறிந்திருக்கிறார். அவற்றிலிருந்து பொருத்தமான மேற்கோள்களை எடுத்துக் கையாளுகிறார்.

ஆனால் பாடல்களை வரிசையாக ஒப்புவித்துக் கொண்டு போவதில்லை.

மூன்று மணி நேரச் சொற்பொழிவில் நாலைந்து பாடல்களுக்கு மேல் சொல்லுவதில்லை.

சிலேடைகள், அடுக்கு மொழிகள், மோனை எதுகைகள் அவருடைய சொற்பொழிவுகளில் வந்தால், அவை நகைச்சுவை கலந்த பரிகாசத்துக்காகவே இருக்கும். பிரமிப்பு ஊட்டுவதற்காகவோ, ஆவேசம் உண்டாக்குவதற்காகவோ இராது.

அவருடைய சொற் பொழிவுகள் பாகவதர்கள் செய்யும் கதா காலட்சேபத்தைப் போல் நவரஸங்களும் கலந்து நேரம் போவதே தெரியாமல் ரஸிக்கக் கூடியனவாக இருக்கின்றன.

ஆனால் காலட்சேபம் செய்யும் பாகவதர்கள் கதைகளைச் 'சிட்டை' செய்து கொண்டு ஓரிடத்தில் சொல்லியது போலவே மற்ற இடங்களிலும் சொல்லிக் கொண்டு போவார்கள்.

ஸ்ரீ கிருபானந்த வாரியாரின் நான்கு சொற்பொழிவுகள் சமீபத்தில் கேட்கும்படி நேர்ந்தது. ஒன்றிலே சொன்ன பொருளை இன்னொன்றில் அவர் சொல்லவில்லை. ஒவ்வொரு சொற்பொழிவிலும் புதிய புதிய பொருள்களும் புதிய புதிய உவமைகளும் போட்டியிட்டுப் பொங்கி வந்தன.

தமிழுக்கும், தமிழர் பண்பாடு உயர்வதற்கும் ஸ்ரீ கிருபானந்த வாரியார் செய்யும் தொண்டு மிக மேன்மையானது. நமது பழம் பெரும் சமய நெறிகள் தழைத்தோங்குவதற்கு அவர் செய்யும் தொண்டினை மதிப்பிடவே முடியாது.

* * *

செந்தமிழ் நாட்டில் நால்வரும் மற்ற நாயன்மார்களும் சிவ பக்திச் செல்வத்தைப் பரப்பி வந்த நாட்களில் திலகவதியார் புனிதவதியார் போன்ற பெண்மணிகள் சிலரும் வாழ்ந்து வந்ததாக அறிகிறோம். அவர்களுடைய பாரம்பரையில் வந்த பெண்மணிகள் இன்றும் இருக்கிறார்கள். சென்னை வண்ணையம்பதியைச் சேர்ந்த சிவத்திரு வள்ளியம்மையார் திருக்கழுக்குன்றத்துக்கு வந்திருந்த அடியார்களுக் கெல்லாம் பக்தி சிரத்தையுடன் அமுதளிக்கும் திருப்பணி செய்ததைச் சேக்கிழார் போன்றவர்கள்தான் பாடிப் புகழ வேண்டும்.

இக்காலத்தில் தமிழ் நாட்டில் நாத்திகம் ஓங்கி வளர்ந்து வருகிறது என்று அடிக்கடி சொல்லப் படுவதைக் கேட்கிறோம்.

நாத்திகக் கொள்கை தமிழ் நாட்டுக்குப் புதிது அன்று. "நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறி" என்று மாணிக்க வாசகர் பாடியிருக்கிறார்.

நாத்திகம் பரவுவதாகத் தோன்றும் காலங்களிலேயே உண்மை ஆத்திகமும் சமய நெறியும் திருவருளும் ஓங்கி யிருக்கின்றன.


அவ்வாறே இன்றைக்கும் தெய்வத் தமிழகத்தில் தவ நெறியும் திருவருளும் தழைத்தோங்கி வருகின்றன என்றே கருதுகிறேன்.

திருக்கழுக் குன்றம் சென்றதில் இந்த நம்பிக்கை எனக்கு மும்மடங்கு உறுதிப்பட்டது.

சிவனடியார் திருக் கூட்டம்

1. யானைமீது அலங்கரித்த அம்பாரியில் வைத்த திருமுறைகளின் ஏட்டுச் சுவடிகள் திருக்கழுக்குன்ற திருவீதிகளில் ஊர்வலமாக வருகின்றன. 2. திருமுறைப் பெருவிழா மேடைக்கு ஸ்ரீ ஞானசம்பந்த மடத்து இளவரசு தவயோக சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள். ஸ்ரீ வீர சிவசுப்பிரமணியம், ஸ்ரீ கிருபானந்தவாரியார் முதலிய சைவ சமயப் பெரியார்களை ஊர்வலமாக அழைத்து வருகின்றனர். 3. திருக்கழுக்குன்றத்து மலை உச்சியில் உள்ள திருக்கோயில் தோற்றம். 4. திருமுறைப் பெருவிழாவில் ஆசிரியர் இளவழகனார் துவக்கவுரை நிகழ்த்துகிறார். 5. திருமுறைப் பெருவிழாவில் பக்தியுடன் கலந்துகொண்டு சிறப்பித்த சைவத் திரு மங்கையர்கள் திருக் கூட்டத்தில் ஒரு பகுதி. 6. விழாவுக்கு வந்திருந்த சிவனடியார் திருக்கூட்டத்துக்கு அறுசுவை உண்டி அளித்து உபசரித்த திருமதி வள்ளி அம்மையார். 7. திருப்புகழ் மணியின் பக்தி மயமான பஜனை ஆரம்பமாகி விட்டது. 8. மதுரை ஞான சம்பந்த மடத்து இளவரசு சோமசுந்தர சுவாமிகள் தலைமையில் ஸ்ரீ கிருபானந்தவாரியார் சொல்மாரி பொழிகிறார். 9. சிவனடியார் திருக் கூட்டத்தின் காரியதரிசி ஸ்ரீ எம். ஆர். சம்பந்தம் அவர்கள். 10. திருக்கழுக்குன்றத் திருமலையில் திருப்புகழ் மணி அவர்களின் பஜனை கோஷ்டியைத் தொடர்ந்து பக்த கோடிகள் பரவசத்துடன் செல்கின்றனர்.


சிவனடியார்
திருக்கூட்டம்


முடிவில் ஒரு நூதன முறை டூத்பேஸ்டின் அவசியத்தை நீங்கள் உணருவீர்கள்
இப்பொழுதே மாற்றிக்கொள்வது நலம்!
பழைய முறை டூத்பேஸ்ட் எதுவும் இந்த இரட்டை அனுகூலம் தரமுடியாது—க்ளோரோபில் மற்றும் அற்புதமான 'கோலினுஸ்' நுரை
ஆம், 'கோலினுஸ்' நுரை க்ளோரோபிலை உங்கள் வாயில் பிரஷ் நுழைய முடியாத மூலைமுடுக்குகளுக்குக்கூட எடுத்துச் செல்கிறது—எனவே 'கோலினுஸின்' சுத்திகரிக்கும் தன்மையுடன் க்ளோரோபில் தரும் அனுகூலங்களும் உங்களுக்குக் கிடைக்கின்றன.
உங்கள் சுவாசத்தை மணிக்கணக்கில் நறுமணம் கமழ வைத்திருக்கிறது. புண்பட்ட ஈறுகளுக்கு உதவி, பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளையும் தடுக்கிறது! அப்படியிருக்க, அனுகூலக் குறைவான ஒரு டூத்பேஸ்டை உபயோகிப்பதில் என்ன லாபம்?
'கோலினுஸ்' அதிக காலம் வருகிறது—ஏனெனில் ஈரமில்லாத பிரஷில் அரை அங்குல அளவுதான் தேவை. உங்கள் பணத்திற்கு மிகச்சிறந்த பயன் தருவது இது! உபயோகித்துப்பாருங்கள்.
Kolynos
Chlorophyll
'கோலினுஸ்' புன்னகையில் ஆரோக்கியம் ததும்புகிறது
குழந்தைகளுக்கு இலவசம்
'நகைமுகனும் அவனுடைய பிராணி நண்பர்களும்' என்ற அழகான சித்திரக்கதைக்கு இப்பொழுதே எழுதுங்கள். உங்கள் பெயர் மற்றும் விலாசத்தை மட்டும் அனுப்பினால் போதும்:
நகைமுகன், டிபார்ட்மெண்ட் 38 F
த. பெ 541, பம்பாய்
நகைமுகன், 'கோலினுஸ்' சிறுவன்
OK. 9373

கல்கத்தா தமிழ் மாணவர் மன்றம்

கல்கத்தா தமிழ் மாணவர் மன்றத்தின் முதலாவது ஆண்டு விழா கடந்த 19-6-54 முதல் 21-6-54 முடிய மூன்று தினங்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

19-6-54 மாலை நடைபெற்ற ஆரம்ப விழாவில், மன்றத்தின் தலைவர் ஸ்ரீ ப. ந. தியாகராஜன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், தமிழ் மொழியின் வருங்காலம் இன்றைய மாணவர்களின் கையிலிருக்கிறது என்று குறிப்பிட்டு, மாணவர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளைப் பற்றியும் விரிவாகக் கூறினார்.

கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஸ்ரீ டி. எஸ். சீதாபதி அவர்கள் விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசினார். மாணவர்கள் நமது பண்பாட்டுக் கேற்ப ஒழுங்கு முறை தவறாது. இயற்கை வழி நின்று தமிழுக்கும், சமூகத் துக்கும் சேவை செய்ய வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

தமிழ் நாட்டின் மேதையும், மாணவ சமூகத்தின் இலட்சிய புருஷருமான தீரர் ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்களின் திருவுருவப் படத்தை, மேற்கு வங்க உணவு அமைச்சர் ஸ்ரீ பி.ஸி. ஸென் அவர்கள் திறந்து வைத்துப் பேசுகையில், நாட்டின் அடிமைத்தளை நீங்க மகாத்மா காந்தி அடிகளின் தலைமையில் நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தில் பெரும் பங்கு கொண்டு ஸ்ரீ சத்தியமூர்த்தி செய்த அரும் பெரும் சேவையைப் பற்றிக் கூறினார்.

உலகம் சுற்றிய தமிழரும், பிரபல தமிழ் எழுத்தாளருமான ஸ்ரீ சோம. லெ. அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்து, தமது தலைமைப் பேருரையில், வருங்காலத்தில் மாணவர்கள் சாதிக்க வேண்டிய அரும் செயல்களையெல்லாம் எடுத்துக் கூறினார்.

வங்கத்துக்கும் தமிழகத்துக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு பற்றிக்கூறிவிட்டு, சென்னையில் தமிழ் வளர்ச்சிக் கழகம் செய்து வரும் பணியைப் பாராட்டிப் பேசினார். சமீபத்தில் வெளி வந்திருக்கும் கலைக் களஞ்சியத்தின் முதலாவது பாகத்தை மேற்கு வங்க உணவு அமைச்சர் ஸ்ரீ பி. ஸி. ஸென் அவர்களுக்குப் பெருமையுடன் ஸ்ரீ சோம. லெ. அன்பளிப்பாக அளித்தார்.

எம். ஆர். ஏ. குழுவின் தலைவர் ஸ்ரீ ரீவ்ஸ், நிகில பங்க பாஷா பிரசார சமிதியின் காரிய தரிசி ஸ்ரீ ஜே. ஸி. கோஷ், பேராசிரியர் தாஸ் குப்தா ஆகியோர் தலைவர் ஸ்ரீ சத்திய மூர்த்தி அவர்களுக்கு அஞ்சலி செய்தனர்.

இரண்டாம் நாள் 20-6-54 காலை நிகழ்ச்சிகள் இளம் கவியரங்கத்துடன் ஆரம்பமாயின. மன்ற உறுப்பினர்களாகிய ஸ்ரீ கோ. சு. மணியம், ஸ்ரீ எஸ். கே. ஸ்வாமி, ஸ்ரீ வேங்கடராமன், குமாரி லட்சுமி ஆகியோர் முறையே "இலக்கியம் வளர," "கலை வளர" "பண்பு



1. எம். ஆர். ஏ. குழுவின் பிரதமர் ஸ்ரீ ரீவ்ஸ் தலைவர் ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு அஞ்சலி செய்கிறார்.

2. கல்கத்தா தமிழ் மாணவர் மன்றத்தின் முதலாவது ஆண்டு விழாவை ஸ்ரீ டி. எஸ். சீதாபதி ஆரம்பித்து வைத்துப் பேசுகிறார்.

3. தமிழ் மாணவர் மன்ற ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்த ஸ்ரீ சோம. லெ. சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டிருக்கும் கலைக் களஞ்சியத்தின் முதல் பாகத்தை மேற்கு வங்க மந்திரி ஸ்ரீ பி. ஸி. ஸென் அவர்களுக்கு அளித்தார். ஸ்ரீ ஸென் கலைக் களஞ்சியத்தைக் கூர்ந்து பார்க்கிறார்.

உயர," "பெண்கள் நிலை உயர" என்னும் பொருள்கள் பற்றிக் கவி பாடினார்கள்.

பின்னர் மன்றத் தலைவர் ஸ்ரீ ப. ந. தியாகராஜன் அவர்களின் தலைமையில் ஸ்ரீ சோம. லெ. அவர்கள் "கவிமணியின் கவிதைகள்" பற்றி அழகாகப் பேசினார்.

மாலை நிகழ்ச்சிகளில் ஸ்ரீ அரு. சொக்கலிங்கம் அவர்கள் தலைமையில் பாரதி தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் கல்லூரி மாணவர்களுக்குத் தமிழ் வகுப்புகள் நடத்தும், தமிழ்ப் பேராசிரியர்களுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. பின்னர் மன்ற உறுப்பினர்கள் ஸ்ரீ ஆர். ஜகந்நாதன், வடநாட்டுத் தமிழர்களின் அன்றாட வாழ்க்கையைப் புகைப்புலனாகக் கொண்டு எழுதிய "திக்கு விஜயம்" என்ற ஓரங்க நாடகத்தைத் திறம்பட நடித்து கூடியிருந்த ரஸிகப் பெரு மக்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றனர்.

மூன்றாம் நாள் 21-6-54 நிகழ்ச்சிகள் மன்றத் தலைவர் ஸ்ரீ ப. ந. தியாகராஜன் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயின. உலகம் சுற்றிய தமிழர் ஸ்ரீ சோம. லெ. அவர்கள், 'கல்கி' ஆசிரியர் அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைத்து, ஸ்ரீ கல்கி அவர்களின் சேவையைப் பாராட்டினார்.

மன்றத்தின் தாய் ஸ்தாபனமான பாரதி தமிழ்ச் சங்கத்துக்கு, மன்றத்தின் அன்புக் காணிக்கையாகக் கல்கி ஆசிரியர் அவர்களின் உருவப் படத்தை ஸ்ரீ ப. ந. தியாகராஜன் அளிக்க, தமிழ்ச் சங்கத் தலைவர் ஸ்ரீ கா. செந்தியப்பன் படத்தை ஏற்றுக் கொண்டு மன்றத்துக்கு நன்றி தெரிவித்தார்.

மூன்று நாட்களிலும் வங்கத் தமிழர்களும், தாய்மார்களும் பெருவாரியாக விழாவுக்கு விஜயம் செய்து தமிழ் மாணவர் மன்றத்தின் ஆண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

மஹாபலியின் மகிமை

ராஷ்மி

கொஞ்ச நாட்களுக்கு முன் என் நான்கு வயது மகன் ஏதோ கோபத்தில் வேலைக்காரனை "உதைப்பேன்" என்று காலைத் தூக்கினான். எல்லாத் தாய்மார்களைப் போல, நானும் அவனை அடிப்பதற்காகக் கையை ஓங்கினேன். என் மனச்சாட்சி, "நீ பிறருக்குக் குழந்தை வளர்ப்பதைப் பற்றி எழுதுகிறாயே தவிர, உனக்கு அதே பாடம் இல்லையா!" என்று சுட்டிக் காட்டியது. சட்டென்று சமாளித்துக் கொண்டு வெகு திறமையுடன் குழந்தையை வளர்ப்பதாக எண்ணி, "நாம் ஒருவரையும் உதைக்கக் கூடாது; எல்லோரிடமும் கடவுள் இருக்கிறார்: அதனால் கடவுளையே உதைப்பதாக ஆகும். இனிமேல் அப்படிச் செய்யாதே" என்று அவனுக்கு உபதேசம் செய்தேன்.

"கடவுள் எல்லோரிடமும் எங்கு இருக்கிறார்!" என்று அந்தச் சிறுவன் கேட்டு வைத்தான். "நம் மனத்தில்தான்" என்று விரலால் தலையைச் சுட்டிக் காட்டினேன்; மனத்தின் பிறப்பிடம் என்ற அர்த்தத்தைக் கொண்டு.

"அப்படியானால் பெருமாள் மாத்திரம் மஹாபலியைத் தலையில் உதைக்கலாமா!" என்று ஓர் அணுகுண்டுக் கேள்வி கேட்டு விட்டான். அவன் 'ராமாயணக் கதைகள்' அவ்வளவையும் அவன் பாட்டியிடம் கேட்டிருக்கிறான். அதுவும் மஹாபலி சக்கரவர்த்தியின் கதையை நடனத்தில் பார்த்திருந்ததினால் அவனுக்கு அது நன்றாக ஞாபகமிருந்தது. நான் அவனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விழித்தேன்.

"கடவுள் மஹாபலியை உதைக்கவில்லை. அவர் மூன்றாவது அடி வைப்பதற்கு இடமில்லை. அதனால் மஹாபலி தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றத் தானே தன் தலைமீது காலை வைக்கச் சொன்னான்" என்று எனக்குத் தெரிந்த வரையில் இச் சிக்கலான விஷயத்தை விளக்கிச் சொன்னேன்—ஆனால் அவனுக்குச் சமாதானம் போதவில்லை, எனக்கும் மன நிம்மதி ஏற்படவில்லை.

சமீபத்தில் "கல்கி" பத்திரிகையில் ராஜாஜி தமக்கே உரிய அற்புத எளிய நடையில் எழுதி யிருக்கும் "சக்கரவர்த்தித் திருமகன்" வரலாற்றைப் படித்தேன். அதில் மஹாபலி சிரஞ்சீவியான வரலாற்றை எழுதும்போது, வாமனனாக வந்த மகாவிஷ்ணு, தன் பக்தனுடைய தலை, உலகப் பரப்புக்குச் சமானமென்றும், அபயம் தரும் நோக்கத்துடன் தன் காலை மஹாபலியின் தலையில் வைத்தார் என்ற சிறந்த பொருள் விளக்கத்தைப் படித்ததும் எனக்கு உண்மையாகவே மெய் சிலிர்த்தது.

என் மகனைக் கூப்பிட்டு, திரும்பவும் மஹாபலியின் கதையைச் சொல்லி, இதுவரை ஒருவரும் தந்திராத இந்த உயர்ந்த விளக்கத்தை அவனுக்குப் படித்துச் சொன்னேன். அதிசயம் பாருங்கள். "அப்படியானால் பெருமாளுக்குப் பக்தர்கள் என்றால் ரொம்பப் பிடிக்குமா!" என்று பளிச்சென்று கேட்டான். அவன் எப்படியோ ராஜாஜியின் வேதாந்தத்தைப் புரிந்து கொண்டு விட்டான் என்று மகிழ்ச்சி யடைந்தேன்.

ராஜாஜியின் மஹா பாரதத்தில் ஓர் இடத்தில் சொல்லுகிறார்: "நமக்கு எது 'நல்லது' என்று தெரிந்து கொள்ளச் சக்தி யில்லாததினால், நாம் கடவுளிடம் பிரார்த்தனை கேட்கும் எல்லாப் பொருள்களும் அவர் நமக்குக் கொடுப்பதில்லை" என்று. ஆகையால் நமது பிரார்த்தனையிலே "இது வேண்டும்—அது வேண்டாம்" என்று கேட்பதற்குப் பதிலாக "கடவுளுக்கு நம் நன்மை, உலக நன்மைக்குத் தேவையானது எது என்று தெரியும், அவர் அதையே செய்கிறார்" என்ற திட நம்பிக்கையுடன் இருக்க வேண்டும் என்கிறார்.

ஆகவே ராஜாஜி முதல் மந்திரியாக இல்லையே என்று வருந்துவோமானால், அதுவும் ஒரு விதத்தில் நன்மைக்கேதான் என்று நினைக்க வேண்டும். இல்லாவிடில் அவர் நமக்கு இந்தமாதிரி அற்புதக் கட்டுரைகள் எழுதித் தர அவகாசமிருந்திருக்குமா!

சக்கரவர்த்தித் திருமகன்

14. அகலிகை

எல்லாரும் விசாலா நகரத்தில் ஒரு நாள் தங்கி அடுத்த நாள் விடியற்காலை மிதிலை நோக்கிச் சென்றார்கள்.

ஜனக ராஜனுடைய நகரத்துக்கு இன்னும் கொஞ்ச தூரம் இருக்க, மிக ரம்மியமான ஒரு ஆசிரமத்தைக் கண்டார்கள். ராமன், "முனிவர் யாரும் இல்லாததாகக் காணப்படும் இந்தப் புராதன ஆசிரமம் யாருடையது? ஏன் இந்த அழகான ஆசிரமம் யாரும் வாசம் இல்லாமல் கிடக்கிறது?" என்று வினவினான்.

முனிவர் சொன்னார்: "இதை நீ தெரிந்து கொள்வது அவசியம்: இந்த ஆசிரமம் ஒரு சாபத்துக்கு உட்பட்டிருக்கிறது. இது கௌதம மகா முனிவருடைய ஆசிரமம். முன்னாள் அவர் இங்கே இருந்து வந்தார்.

"நீண்டகாலம் அவரும் அவர் மனைவி அகலிகையும் இங்கே இருந்து வந்தார்கள். இடையூறின்றி அவர்களுடைய தவமும் கழிந்தது. ஒரு நாள் இந்திரன், சமயம் பார்த்து, ஆசிரமத்தில் முனிவர் இல்லாத காலத்தில் கௌதமருடைய உருவத்தையும் முனி வேஷத்தையும் தரித்துக் கொண்டு ஆசிரமத்துக்குள் புகுந்தான். அகலிகையின் உலகப் பிரசித்தமான அழகை நினைத்து அவனை யடையும் கெட்ட எண்ணத்துடன் வந்தான். இவ்வாறு திருட்டுத் தனமாக வந்த தேவ ராஜன் அகல்யா தேவியைப் பார்த்து, 'அழகியே! எனக்கு ஆசை மேலிட்டிருக்கிறது. இந்த நிலையில் காலப் பொருத்தம் பார்க்கலாகாது, நாம் கூடுவோம்' என்று முனிவர் சொல்லுவதுபோல் சொன்னான்.

"ரிஷியின் மனைவி உடனே விஷயத்தைத் தெரிந்து கொண்டு விட்டாள். இவன் தன் புருஷன் அல்ல, இந்திரன் என்பது அவளுக்குத் தெரிந்து விட்டது. ஆயினும் தேவராஜனே தன்னைத் தேடி வந்தான் என்று தன் அழகைப்பற்றிக் கர்வப்பட்டு மனநிலை யிழந்து விட்டாள். தேவராஜனுடைய விருப்பத்துக்கு உடன்பட்டு விட்டாள்.

ராஜாஜி

"பிறகு 'தேவராஜனே! சீக்கிரம் அப்புறப்பட்டுப் போ. பெரும் அபாயத்தினின்று எப்படியாவது காப்பாற்றிக் கொள்' என்று எச்சரித்தாள். இந்திரனும், 'உனக்கு நன்றி!' என்று சொல்லிவிட்டு வேகமாகத் திரும்பிப் போனான்.

"வெளியில் சென்றிருந்த கௌதமர் ஸ்நான ஜபங்கள் முடித்துக் கொண்டு ஆசிரமத்துக்கு வந்து கொண்டிருந்தார். தேவ தானவர்களும் பயப்படும்படியான தபோபலம் அடைந்த முனிவர், ஸ்நானம் செய்த ஈரத் துணியோடு முகத்தில் அக்னி பகவானைப் போல் காந்தி ஜொலிக்க, அன்று ஓமத்துக்கு வேண்டிய தர்ப்பையும் ஸமித்துகளும் கையில் எடுத்துக் கொண்டு வந்தார். அவரைக் கண்டதும் அதுவரையில் மிக தைரியமாக இருந்த இந்திரன் மிக நடுங்கினான். முகம் வாடி அவர் எதிரில் வணங்கி நின்றான். 'மூடனே! என் வேஷத்தைத் தரித்துக் கொண்டு ஆசிரமத்துக்குள் புகுந்து தகாததைச் செய்தாய்! நீ நபும்சகனாய்ப் போவாய்!' என்று கோபம் மேலிட்டுச் சொன்னார்.

"சினங் கொண்ட முனிவர் இவ்வாறு சொன்ன அக்கணமே இந்திரன் தன் ஆண்மையை யிழந்தான். தேவர்கள் பரிதபித்தார்கள்.

"முனிவர் தம் மனைவிக்கும் பிராயச்சித்தம் விதித்தார். 'அகலிகையே! நீ இங்கே நீண்ட காலம் காற்றே உணவாக ஏதொரு ஆகாரமுமின்றிச் சாம்பல்மேல் படுத்து யார் கண்ணுக்கும் தென்படாமல் மறைந்து வசிப்பாயாக. பல காலம் கழித்து இவ்விடம் தசரதன் மகன் ஒரு நாள் வருவான். அந்த வீரன் இந்த ஆசிரமத்தில் கால் வைக்கும்போது உன் பாபம் நீங்கும். நீ அவனை அதிதியாக வரவேற்று உபசரிப்பாய். அப்போது உன்னுடைய இயற்கை குணத்தையும் காந்தியையும் மறுபடி அடைந்து என்னுடன் வாழ்வாய்.'

"இவ்வாறு சொல்லி விட்டு கௌதமர் நெறி தவறிய மனைவியை விட்டு விலகி, இமய மலை சென்று விட்டார். அங்கே தவமிருக்கிறார்."

** ** **

"ஆசிரமத்திற்குள் நாம் செல்வோம். திக்கற்ற இந்த அகலிகைக்கு முனிவர் சொல்லியபடி நீ விமோசனம் தருவாய்" என்றார் விசுவாமித்திர முனிவர்.

அவ்வாறே ஆசிரமத்திற்குள் சென்றனர். ராமன் உள்ளே கால் வைத்ததும் அகலிகையின் பாவம் தீர்ந்தது. பாவம் தீர்ந்து காந்தியுடன் விளங்கிய அகலிகையைக் கண்டான் ராமன். அகலிகை உலகத்திலுள்ள எல்லா ஸ்திரீகளுடைய அழகையும் ஒன்று சேர்த்து பிரம்மாவால் ஆக்கப்பட்ட தனி அழகைப் பெற்றவள். இலைகளிலும் கொடிகளிலும் மறைந்து யாருக்கும் தென்படாமல் பல்லாண்டுகள் விரதம் காத்து வந்த அவள் அன்று பனியால் மூடப்பட்ட சந்திரனைப் போலும், புகையால் மறைக்கப்பட்ட அக்கினி ஜ்வாலையைப்போலும், அசையும் ஜலத்தில் காணப்படும் சூரிய பிம்பம் போலும் ராமன் ஆசிரமத்திற்குள் சென்றதும் காணப்பட்டாள்.

ராமனும் லக்ஷ்மணனும் அவளுடைய பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்தார்கள். நெடுங் காலம் காத்திருந்த அகலிகை தன்னுடைய விமோசன காலம் வந்து விட்டதென்று மகிழ்ந்து சக்கரவர்த்





த் திருமகனுக்கு அர்க்கியம் பாத்தியம் முதலியன தந்து உபசாரம் செய்தாள். ராமனும் அங்கீகரித்தான். ஆகாயத்தி லிருந்து புஷ்பமாரி பெய்ய அவளுடைய கொடிய பாவம் தீர்ந்து, தேவகன்னி போல் பிரகாசித்தாள். கௌதமரும் அச்சமயம் அங்கே வந்து சேர்ந்தார்.

** ** **

இது வால்மீகி ராமாயணத்தில் உள்ள அகலிகைக் கதை. மற்ற புரா ணங்களிலும் கதைகளிலும் சில விஷ யங்கள் பேதப்பட்டு வழங்கி வருகின் றன. அதனால் குழப்பம்வேண்டியதில்லை.

இவ்விடத்தில் கொஞ்சம் நின்று ராமா யணம், பாரதம் முதலிய புராணங் களைப் படிக்கும் இக்காலத்தவர்களுக் குப் பொதுவாகச் சில வார்த்தைகள்.

புராணங்களில் தேவர்களும் ராக்ஷ சர்களும் அடிக்கடி வருவார்கள். ராக்ஷ சர்கள் என்பவர்கள் அதருமத்துக்குக் கொஞ்சமும் பயப்படாத துஷ்டர்கள் குலம். சர்வ சாதாரணமாகத் தீய காரி யங்களைச் செய்வார்கள்.

இரக்கமென்(று) ஒருபொருள்
இலாத நெஞ்சினர்
அரக்கர்என்று உளர்பலர்
அறத்தின் நீங்கினர்

என்று கம்பர் விளக்கி யிருக்கும் கூட் டம். அசுரர்களும் ராக்ஷசர்களைப் போன்றவர்களே.

ராக்ஷசர்களிலுங் கூட ஒரு சிலர் அறி வாளிகளும் நல்லவர்களும் இருந்தார்கள். எந்த நல்ல குலத்திலும் சில தீயவர்கள் உண்டாவார்கள். அப்படியே எந்தக் கெட்ட குலத்திலும் சில சமயம் நல்ல வர்களும் இருப்பதுண்டு. ஆனால் மொத் தத்தில் ராக்ஷசர்களும் அசுரர்களும் கம்பர் சொல்லியிருக்கிறபடி தீய கருமங் களிலேயே ஈடுபட்டுச் சந்தோஷப் பட்ட கூட்டம். அவர்களைத் தமிழர்கள் என்றும் தம் முன்னோர்கள் என்றும் சிலர் இக் காலத்தில் அறிவீனமாக எண்ணியும் பேசியும் வருவது பரிதாபம். எந்தத் தமிழ் பழைய நூலிலாவது சரித்திரத்தி லாவது தனிப் பாட்டிலாவது கிராமப் பாட்டிலாவது இப்படிச் சொன்ன தில்லை. தமிழர்களுக்கு "நீங்கள்தான் புராணத்தில் அரக்கர் என்று சொல்லப் பட்டவர்கள்" என்கிற புதுப் பட்டம் அளிப்பதற்குப் பழைய தமிழ் நூல் களில் ஆதாரம் எங்கும் இல்லை.

தேவர்கள் என்கிற கூட்டம் சாதாரண மாகத் தருமத்துக்கு அஞ்சும் சுபாவம் கொண்ட கூட்டம். ராக்ஷசர்களை ஒழிப் பதே தேவர்களுடைய வேலையாக இருந் தது. இந்தக் காரியத்தில் புராணங்களின் படி சில சமயம் தருமத்துக்கு விரோத மான முறைகளிலும் தேவர்கள் இறங் குவதுண்டு. இதற்குக் காரணம் ராக்ஷ சர்கள் தவம்செய்து பெற்ற வரங்களே யாகும். தவம் செய்து பெற்று விட்ட வரங்களின் பலத்தினால் உலகத்தைத் துன்புறுத்தும் அசுரர்களைத் தேவர் களால் எதிர்க்க முடியாமல் போகும். அச்சமயங்களில் தேவர்களும் ஏதோ வழிதேடி முறை தவறியும் நடக்க வேண்டியதாகும். ஆனால் மொத்தத்தில் தேவர்கள் நல்ல சுபாவம் கொண்ட வர்கள். அவர்களிலும் சிலர் தீய காரி யங்களைச் செய்து அதனால் கஷ்டமும் படுவார்கள். அப்படிச் செய்த அதரு மங்களின் பலனைத் தேவர்களும் அனு பவிப்பார்கள். தேவர்களாயிற்றே என்று அவர்களுக்கு வேறு நியதி யில்லை. கரும விதிக்கு இவர்களும் உட் பட்டவர்களே யாவர்.

தேவர்கள் மொத்தத்தில் நல்வழியில் நிற்பவர்களான படியால் அவர்களில் யாரேனும் பிழை செய்தால், அந்தப் பிழை இப்போது படிக்கும்போது நம் கருத்தில் பெரும் பிழையாகத் தோன் றும். இது இயற்கை. வெள்ளைத் துணி யில் பட்ட கறையானது கண்ணைக் குத்துவதுபோல்.

எப்போதுமே தீய காரியங்களில் ஈடுபட்டிருக்கும் ராக்ஷசர்களுடைய பிழைகள் படிக்கும் போது நமக்கு அவ் வளவு பெரிதாகக் காணப்படாது — கருப்புத் துணியில் பட்ட அழுக்கைப் போல் மறைந்து நிற்கும்.

யோக்கியர்கள் நல்ல வழியிலிருந்து வழுவினால் அது நம்மை மிகவும் புண் படுத்துகிறது. எப்போதுமே தீய எண் ணமும் துஷ்ட காரியமுமாக இருப்பவர் களை ஐயோ பாவம் என்று விட்டு விட்டு, தரும சங்கடத்தில் சிக்கிக் கொண்டு ஏதேனும் பிழை செய்கிறவர்களை அதி கக் கடுமையாகக் கண்டித்து விமரிசனம் செய்வதும் பேசுவதும் இயற்கை. ஆனால் இது நியாயமாகாது.

புராண கர்த்தாக்களே தேவர்களை அவ்வப்போது அநீதியிலும் பாபத்திலும் சிக்கிக் கொள்ளச் செய்திருப்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதனுள்

அடங்கி நிற்கும் பாடத்தைக் கற்க வேண்டும். புராண கர்த்தாக்கள் எந்தக் காரணத்தைக் கொண்டு இந்திரன் முதலிய தேவர்களைச் சில சமயம் மகா பயங்கர பாபங்களைச் செய்ததாகச் சொல்லியிருக்கிறார்கள்? தரும சங்கடங்களையும் சிக்கல்களையும் தாமே ஏன் உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள்? இதையெல்லாம் நாம் சாவதானமாக ஆராய வேண்டும். இவற்றின் நோக்கம் மக்களுக்கு விவேகமும் அடக்கமும் பயபக்தியும் உண்டாக்கித் தரவே என்பது வெளிப்படை. இல்லாவிடில் முனிவர்கள் தாமாகவே தங்கள் கருத்துக்கும் நோக்கத்துக்கும் முற்றிலும் விரோதமாக நல்லவர்களுக்குச் சங்கடங்களை உண்டாக்கியிருக்க வேண்டிய அவசியமில்லை.

இத்தகைய தரும சங்கட நிகழ்ச்சிகளை வைத்துச் சிலர் மூர்க்கமாகத் தவறான முடிவுகளைக் கட்டிக் கொண்டு சந்தோஷப்படுகிறார்கள். 'ராவணன் மிக நல்லவன்; அவனுடைய காரியங்களைப் பற்றி வால்மீகி இல்லாததைச் சொல்லி அவதூறு செய்திருக்கிறார். ராமன் குறிப்பிட்ட ஒரு சமயத்தில் அநீதி செய்தான் அல்லவா? சீதை ஒரு சமயம் பொய்யே சொல்லி விட்டாள் அல்லவா?' என்று இவ்வாறு வாதம் செய்து பேசுவதைக் கேட்டிருக்கிறோம்.

எதை எப்படியேனும் எழுதும் அவகாசம் பெற்றிருந்த வால்மீகிமுனிவர் ஏன் இவ்வாறு தம் கருத்துக்கே விரோதமாகவும் தம் கதாநாயகனுக்கே இகழ்தரும்படியானதுமான நிகழ்ச்சிகளைக் கற்பித்துக் கொண்டு அலைய வேண்டும்? முற்றிலும் வால்மீகியே கொடுத்த பாத்திரம் அல்லவா ராமனும் ராவணனும்? ராவணனைப் பற்றி வேறு கதையோ சரித்திரமோ இருந்ததா? இல்லை. வால்மீகிக்கும் முன்னதாக யாரேனும் ஒரு புராணமோ பாட்டோ சரித்திரமோ அல்லது கல் சாசனமோ எழுதியிருந்து அதில் விஷயங்கள் வேறுவிதமாக எழுதி வைத்திருப்பதைக் காண்கிறோமா? இல்லை. அப்படி ஏதேனுமிருந்திருக்கும் பட்சத்தில் வால்மீகி முனிவரானவர் ராமனுக்கும் சீதைக்கும் தேவர்களுக்கும் பட்சபாதமாக மாற்றியும், விஷயங்களை மூடியும் மறைத்தும் சொல்லி, சமாதானங்களைக் காட்டி நம்மை ஏமாற்றுகிறார் என்று ஒரு வேளை வாதாடலாம்.

ராம கதையைப் பற்றிய விஷயங்களைப் பெற்றது வால்மீகி நூல் வழியே தான்; வேறு எங்கிருந்தும் அல்ல. தரும சங்கடங்களைக் காட்டுவதும் அந்நூலே. பிழைகளாகத் தோன்றும் நிகழ்ச்சிகளும் அந்நூலிலேதான் கண்டோம். இதற்கெல்லாம் காரணம் என்னவென்று, மூளையில் குழப்பமாவது அசூயையாவது இன்றி, ஆழ்ந்து ஆராய்ந்தால் அவற்றிலெல்லாம் சாதாரண மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களின் சித்திரத்தைக் காண்போம். நம்மால் பின்பற்றக் கூடிய நல்ல உபதேசத்தை அவற்றினின்று பெறலாம். நாம் உணர்ந்து நடக்கக்கூடிய நெறியைக் கண்டு பயன் அடையலாம்.

எவ்வளவு பெரிய பாபத்தைச் செய்து விட்டாலும், பச்சாத்தாபப் பட்டு, தண்டனையைப் பொறுத்துத் தவமிருந்தால் விடுதலை அடையலாம் என்பது அகலிகை நிகழ்ச்சியின் பாடம். பாபம் செய்த மற்றவர்களை இகழாமல் அவரவர்கள் தத்தம் உள்ளங்களி லுண்டாகும் தோஷங்களை அகற்றுவதில் முயற்சி செலுத்த வேண்டும்; எவ்வளவு சுத்தமான நிலையிலிருந்தாலும் சதா ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பது பாடம்.



கடல் முத்து

சீதா

3. அண்ணனும் தங்கையும்

வள்ளி அந்த அதிசயத்துடனேயே வானத்திலிருந்த சந்திரனைப் பார்த்தாள். அந்த முழுமதியும் மகிழ்ச்சிப் புன்னகையொன்று தன்னைப் பார்த்து வீசுவது போல் வள்ளிக்குத் தோன்றியது.

பிறகு கந்தனைப் பார்த்து, "இன்னும் விடிவதற்கு நேரம் கிடக்குது. நேற்று ராத்திரி யெல்லாம் சரியாகவே தூங்கவில்லை. கொஞ்ச நேரம் படுத்துத் தூங்குங்க" என்றாள்.

"ஆமாம், வள்ளி! நான் அதைத்தான் பண்ணப் போகிறேன். இந்த முத்து வந்ததிலிருந்து மனசிலே எவ்வளவு உளைச்சல், வேதனை! இனிப் பொழுது விடியற வரை நிம்மதியாகத் தூங்கப் போகிறேன்" என்று சொல்லிக் கொண்டே தன் குடிசைக்குள் நுழைந்தான். அந்தக் குடிசையின் மூலையில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த பாயை விரித்துப் போட்டுப் படுத்துக் கொண்டான்!

* * *

அன்றிரவு வள்ளி கடற் கரையில் வந்து நின்று கொண்டு உள்ளத்தில் பயம் அழுத்த, அதை மீறித் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கடலில் அந்த முத்தை வீசி எறிந்தாள்.

இதைக் கவனித்து வந்த சமுத்திர ராஜன், தன் அலைக் கரங்களை நீட்டி அந்த அற்புத முத்துக்கு எந்த விதமான அடியும் படாமல் ஏந்திக் கொண்டான்.

ஆம், சமுத்திரராஜன், அந்த அற்புத முத்தை நிலவொளியில் இப்படியும் அப்படியும் திருப்பித் திருப்பிப் பார்த்தான். அதினின்று பச்சை, நீலம், முதலிய பற்பல ஒளிக் கிரணங்கள் வெளிப் பட்டன! இதை இப்படிப் பார்ப்பதும், தன் அலைக் கரங்களில் அம்மானை யாடுவதுமாக சமுத்திரராஜன் பொழுதைப் போக்கி வந்தான்.

அதற்குள் கிழக்குத் திசையில் சூரியன் தேஜோமயமாக வானத்தில் எழும்பலானான். சூரியனுடைய கிரணங்கள் பட்டவுடன் சமுத்திர ராஜன் புத்தொளி பெற்றான். சமுத்திர ராஜனின் அலைக் கரங்களிலிருந்த முத்து இன்னும் பலவித வண்ண ஒளிகளைச் சூரியக் கிரணங்கள் பட்ட மாத்திரத்தில் வெளியிட்டது!

இப்படி வெகு நேரம் ரஸித்துக்கொண்டிருந்த சமுத்திரராஜனுக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று. ஏன், ஒரு வேடிக்கை செய்ய வேண்டும் போல் தோன்றியது!

அந்தக் கடலில் ஒரு கப்பல் மிதந்து சென்று கொண்டிருந்தது. அந்தக் கப்பலில் ஏராளமான பிரயாணிகள் இருந்தார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் யாவரும் இருந்தார்கள். அதில் ஒரு தனவந்தரின் இரு குழந்தைகள்



மிகவும் அன்யோன்யமாக விளையாடிக் கொண்டிருந்தார்கள். அண்ணனும் தங்கையுமான அந்தக் குழந்தைகள் ரொம்பவும் ஒற்றுமையாக இருந்தார்கள். அவர்களுடைய கள்ளமற்ற சிரிப்பொலி கேட்கும் போது மற்றப் பிரயாணிகளுக் கெல்லாம் அமுதம் நுகர்ந்தாற்போல் இன்பமளிக்கும்!

இப்படி அவர்கள் ஒற்றுமையாக அந்தக் கப்பலின் மேல் தளத்தில் விளையாடிக் கொண்டிருந்த போது 'தொப்' என்று ஏதோ விழுந்த சத்தம் கேட்டது. சமுத்திர ராஜன் தான் நினைத்த வேடிக்கையைச் செய்துவிட்டான். குழந்தைகள் இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்!

என்ன அதிசயம்! அவர்களுடைய மலர்ந்த கண்கள் மலர்ந்தபடியே நின்று விட்டன! ஆம்! ஒளி வீசும் அவ்வளவு பெரிய முத்தைக் கண்டால் அப்படியெல்லாம் வியப்பு அவர்களுக்கு ஏற்படத் தானே செய்யும்!

அந்த வியப்புத் தெளிந்து, ஓடிப்போய் அந்த முத்தைக் கையால் எடுக்கவேண்டும் என்ற உணர்ச்சி பெற்றவன் அண்ணன் தான். அவன் ஓடிப் போய் எடுத்துப் பார்த்தான். பார்த்தான், பார்த்தான்! அவனால் பார்த்தே முடியவில்லை! இதையெல்லாம் அவன் அருகிலேயே நின்று கவனித்துக் கொண்டிருந்த அவன் தங்கைக்குப் பொறுக்க முடியவில்லை.

"அண்ணா! அண்ணா! என்னிடம் ஒரு தடவை கொடு, பார்த்துவிட்டுத் தருகிறேன்" என்று கெஞ்சினாள்.

"இரு, இரு, நான் முழுதும் பார்த்துவிட்டுத் தருகிறேன்" என்றான்.

கொஞ்ச நேரம் சென்றது.

"நீ எத்தனை நாழிகையாகப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்! என்னிடம் கொடு, அண்ணா! நான் பார்த்து விட்டுத் தருகிறேன்" என்றாள் மீண்டும் தங்கை.

இப்பொழுதும் "இரு! இரு!" என்று கூறினான் அண்ணன்.

தங்கை சற்று நேரம் பொறுத்தாள். அண்ணன் தன் கையில் கொடுக்கிற வழியாகக் காணோம். "அண்ணா! நீ தருகி

இரு பிரபல திருமணங்கள்





நாகர்கோவில் 'சீதா கார்டன்ஸ்' என்ற இல்லத்தில் சென்ற 11-6-54 அன்று, மத்திய சர்க்கார் டிரான்ஸ்போர்ட் இலாக்காவின் காரியதரிசி ஸ்ரீ என். எம். ஐயர் ஐ. ஸி. எஸ். அவர்களின் சகோதரர் ஸ்ரீ என். கணபதி அவர்களின் புதல்விகள் சௌ. சீதாவை ஸ்ரீ ஜெ. பத்மநாபன் *M.Sc* க்கும், சௌ. பிருந்தாவை ஸ்ரீ எஸ். பாலு *B.Sc. (Eng.)*க்கும் கன்னிகாதானம் செய்து கொடுத்து, திருமணங்கள் வெகு விமரிசையாக நடந்தேறின. இந்த வைபவங்களுக்கு நிதி மந்திரி ஸ்ரீ தேஷ்முக் தம்பதி சமேதராய் விஜயம் செய்திருந்தார். மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துக்கள் வந்திருந்தன. இந்தத் திருமண வைபவங்களையொட்டி 20-6-54 அன்று ஏழைகளுக்கு அன்னதானம் அளிக்கப்பட்டது.

றாயா, இல்லையா?" என்று அவன் கையிலிருந்து வெடுக்கென்று பிடுங்கப்போனான்.

"என்ன? என் கையிலிருந்து பிடுங்க வருகிறாயா?" என்று கூறிக் கொண்டே 'பளார்' என்று அவள் கன்னத்தில் அறைந்துவிட்டான்! தங்கையைக் கடிந்து ஒரு வார்த்தை சொல்லி யறியாதவன் ஓங்கி அறைந்து விட்டான்! தங்கை 'ஓ' வென்று கதறி அழத் தொடங்கினாள்! கப்பலிலிருந்தவர்கள் எல்லாரும் வெளியே வந்து விட்டார்கள், என்ன விபரீதம் நடந்து விட்டது என்று பார்க்க!

அவள் அழுகை யோலம் கொஞ்சங் கொஞ்சமாகப் பெரிய ஓலமாக மாறியது. இல்லை, பெரும்புயலாகமாறியது! சமுத்திர அலைகள் பனை மரம் உயரத்துக்கு ஓங்கி வீச ஆரம்பித்தன. புயலிடை அகப்பட்ட அந்தக் கப்பல் கிறு கிறு என்று சுழன்றது. பாய்மரங்கள் காற்றில் தார் தாராகக் கிழிந்தன. கப்பல் முறிந்து சிதறி அந்த ஆழ் கடலில் மூழ்கலாயிற்று.

* * *

"கப்பல் மூழ்கிப் போகின்றதே!" என்று பெரும் சத்தம் போட்டுக்கொண்டே கந்தன் எழுந்தான்.

"கப்பலாவது ஒன்றாவது!" என்றாள் வள்ளி. அப்போது அடுப்படியில் அவள் ஏதோ வேலையா யிருந்தாள்.

வள்ளியின் குரலையும், தான் இருப்பது தன் குடிசையில் என்பதும் தெரிந்த பிறகு தான் இத்தனை நேரம் தான் ஒரு பயங்கரக் கனவு கண்டிருப்பதை உணர்ந்தான். பிறகு முகத்தை நன்றாகக் கழுவிக்கொண்டு வள்ளி கொடுத்த கஞ்சியைக் குடித்து விட்டுக் குடிசையைவிட்டு வெளியே வந்து கடற் கரையை நோக்கி மெள்ளச் சென்றான். இருப்பினும் அவன் உள்ளத்தில் சற்று முன் கண்ட பயங்கரக் கனவின் நினைவு இன்னும் நீங்கவில்லை. அந்த உணர்ச்சி யுடனேயே கடற்கரை யோரமாகச் சென்றான் கந்தன். சற்றுத் தூரத்தில் ஒரு காட்சியைக் கண்டான்.

கடற்கரையில் நான்கைந்து சிறுவர்கள் மணல் வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் முகத்தில் சந்தோஷம் தவழ்ந்து விளையாடியது. அப்போது ஒரு பெரிய அலை வந்தது. அவர்கள் கட்டிய மணல் வீட்டை அழித்து விட்டுப் போய்விட்டது. (தொடரும்)

ஹரி எப்படி வெற்றியடைந்தான்?




ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகளால் உங்களுக்கு என்ன அனுகூலம்


பணம் மிச்சமாகிறது. டீக்கான தோற்றம்.
க்ஷவரசுகம். பரிசுத்தத்தன்மை.
வெற்றிக்கான மார்க்கம்.

தினசரி ஸெவன் ஓ'க்ளாக் பிளேடுகளால் க்ஷவரம் செய்துகொள்ளுங்கள்.

7 o'clock BLADES



B. I. S. N. கம்பெனி லிமிடெட்



S. S. ரஜுலா

சென்னை - நாகப்பட்டினம் - பினங்கு - சிங்கப்பூர்

மேற்படி கப்பல் கீழ்க்கண்ட தேதி வாக்கில் புறப்படும்

சென்னையிலிருந்து 31-7-1954 - நாகப்பட்டினத்திலிருந்து 1-8-1954

மாறுதலுக்கு உட்பட்டது

ஸலூன் இடவசதி முழுவதும் புக் ஆகிவிட்டது. ஆனால் கம்பெனியின் ஏஜண்டுகளிடமிருந்து உணவுடனே அல்லது உணவு இன்றியோ பர்த் வசதி இல்லாத பிரயாண டிக்கெட்டுகள் கிடைக்கும்.

கீழ்க்கண்ட பிரயாண மற்றும் ஆரோக்கிய பத்திரங்கள் தேவையாகும்.

1. மலேயா அல்லது சிங்கப்பூரில் உள்ள குடியேற்ற அதிகாரிகளால் கையெழுத்திடப்பட்ட அனுமதி பர்மிட்டுடன் கூடியதும் செல்லக் கூடியதுமான ஒரு பாஸ்போர்ட். பாஸ்போர்ட்டில் கையெழுத்திடப்படா விட்டால், ஒரு தனி அனுமதி பர்மிட்டோ அல்லது குடியேற்ற அதிகாரிகளால் அளிக்கப்பட்ட விஸிட்டர்ஸ் பாஸை பாஸ்போர்ட்டுடன் கொடுக்க வேண்டும். அல்லது மலேயா அல்லது சிங்கப்பூரில் உள்ள குடியேற்ற அதிகாரிகளால் அளிக்கப்பட்ட ரீ-என்ட்ரி பர்மிட். (பாரம் 1-டி-64 அல்லது 65)

2. எல்லா சலூன், பர்த் வசதி இல்லாத பிரயாணிகளும் வருமான வரி ஆபீஸர்கள் ஒருவரிடமிருந்து (வெளி நாட்டுப் பிரிவு) முழு வருமான வரி செலுத்தியதற்கான அல்லது வரி விலக்கு சர்டிபிகேட்டை, அவர்கள் வசிக்கும் வட்டாரத்து வருமான வரி ஆபீசரிடமிருந்து "ஏ" பாரம் வாங்கிக் கொண்ட பிற்பாடு பெற்று கொண்டு வரவேண்டும்.

3. சுகாதார சர்டிபிகேட்டுகள் : 1-7-54 தேதி முதல் எல்லா சலூன் மற்றும் பர்த் வசதியற்ற பிரயாணிகள் காலரா தடுப்பு ஊசியும் வைசூரி அம்மை வராமலிருப்பதற்காக ஊசியும் போட்டுக் கொண்டதற்கு இந்திய அரசாங்கத்தினரால் வெளியிடப்பட்டுள்ள புதிய பாரங்களில் சர்டிபிகேட் பெறுவதுடன் அதில் கீழ்க்கண்டுள்ள சுகாதார அதிகாரிகளில் ஒருவருடைய அத்தாட்சியும் பெற்றிருக்க வேண்டும்.

டைரக்டர், டிபுடி டைரக்டர், டிபுடி அஸிஸ்டென்ட் டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் அல்லது கார்ப்பொரேஷன் முனிஸிபாலிடி, ஸ்தல ஸ்தாபனங்களின் சீப் மெடிகல் ஆபீஸர்ஸ், அட்மினிஸ்ட்ரேடிவ் மெடிகல் ஆபீஸர்ஸ், டிஸ்ட்ரிக் மெடிகல் ஆபீஸர்கள் அல்லது கவர்ன்மெண்ட் முனிஸிபல் மற்றும் டிஸ்ட்ரிக்போர்ட் அலோபதிக் ஆஸ்பத்திரிகள், டிஸ்பென்ஸரிகளின் மெடிகல் ஆபீஸர்-இன்-சார்ஜ்.

மேற்கண்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளில் ஒருவரின் அத்தாட்சி பெற்ற சர்டிபிகேட்டுகளே பிரயாண டிக்கட்டுகள் வழங்குவதற்கு உரியது என ஒப்புக் கொள்ளப்படும்.

பினங், போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலான இடங்களுக்கு நேரடியாக சரக்குகளின் ஏற்றுமதி ஏற்றுக் கொள்ளப்படும். சிங்கப்பூரில் மாற்றி பாங்காக்கிற்கு அனுப்புவதற்கான சரக்குகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

○●○

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றுமதி விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதுக :

பின்னி & கோ., (மதராஸ்) லிட்.	**மதுரா கம்பெனி லிமிடெட்**
7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1	முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

இந்துவின் அதிர்ஷ்டம்

ஆர். சூடாமணி

"உங்களைத்தானே! அடுத்த வீட்டு அம்புஜம் மல்லி மொக்கு போட்ட ஜரிகைப் பேட்டு அரக்குப் புடவை வாங்கிக் கொண்டிருக்கிறாள். எனக்கும் அந்த மாதிரி..."

இந்துவை பாஸ்கரன் ஐந்து வருஷங்களுக்கு முன் கல்யாணம் செய்து கொண்டான். இந்த ஐந்து வருஷங்களாகத்தான் அவன் தன் வாழ்வின் பெரிய தவறை உணர்ந்து கொண்டான். தான் ஒரு ஜவுளி வியாபாரியாயில்லாதது எத்தகைய தவறு என்று அவனுக்குப் புரிந்தது. அடுத்த வீட்டு அம்புஜம் அரக்குப் புடவை வாங்கினாலும், எதிர்வீட்டு எச்சுமு எலுமிச்சம் பழக் கலர் ரவிக்கை வாங்கினாலும், கோடி வீட்டுக் கோமளம் கோடு போடாத ஸில்க் வாங்கினாலும் இந்து தன்னுடைய புருஷனிடம் அதைச் சொல்லி விட்டு "அந்தமாதிரி எனக்கும்..." என்று இழுப்பாள்.

"இதெல்லாம் என்னால் முடியக் கூடியதா?" என்று எத்தனையோ தடவை பாஸ்கரன் அவளைக் கேட்டிருக்கிறான்.

"முடியாமல் என்னவாம்? எச்சுமு ஆத்துக்காரருக்கு உங்களைவிடப் பெரிய வேலை ஒன்றுமில்லை. ஆனால் அவள் பீரோ பீரோவாக ஸில்க்கும் ஜார்ஜெட்டும் நைலானுமாய் அடுக்கி வைத்திருக்கிறாள். அதுவும் நானென்ன, மற்றப் பெண்களைப் போல் நகையைக் கொண்டா என்றா கேட்கிறேன்? ஏதோ துணிதானே?" என்று பதில் வரும்.

"துணி என்றால் மட்டும் பணம் வேண்டாமா? அதுவும் நீ இவ்வளவு அடிக்கடி துணி கேட்கிறாயே, அதையெல்லாம் நான் வாங்கிக் கொடுத்தால் நகைக்குமேல் விலையாகி விடாதா?"

"அதனால்தானே எப்போதும் இல்லையென்கிறீர்கள்?" அவன் சொன்னது முழுவதும் உண்மையல்ல. பாஸ்கரன் சராசரி மாதத்துக்கு ஏதாவது வாங்கித் தருவான். ஆனால் மாதத்தில் முப்பது தடவை அவள் கேட்கும்போது இருபத்தொன்பது தடவை இல்லை என்றுதானே பதில் சொல்ல வேண்டியிருக்கிறது?

இதற்கு மேல் அவன் அவளை ஒன்றும் கடிந்து கொள்வதில்லை. அவள் கண்ணைக் கசக்க ஆரம்பித்து விடுவாள். இந்து மிகவும் ரோஸக்காரி.

பாஸ்கரன் மனத்துக்குள் "ஆண்பிள்ளை ஆபீஸுக்குப் போய்த் திரும்பி வருவதற்குள் இந்தப் பெண்கள் எவ்வளவு காரியம் நடத்தி விடுகிறார்கள்! இவர்கள் நாலைந்து கடைகள் ஏறி இறங்கி, ஒரு மணி நேரம் சுற்றினார்களானால் ஆண்களுக்கு நாலைந்து வருஷங்களுக்குத் தலைமேல் பாரம் ஏற்றி விடுகிறார்களே!" என்று நினைத்துக் கொள்வான்.

பாஸ்கரன் சிலகாலம் பொறுமையுடன் சகித்து வந்தான். ஆனால் அம்புஜமும் எச்சுமுவும் கோமளமும் அளவுக்கு மீறித் தன் வாழ்க்கையில் தலையிடுவதாக அவனுக்குத் தோன்றியது. கோடி வீட்டுப் பெண்ணுக்கு ஒரு நாள் சாயங்காலம் பொழுது போகாமலிருப்பது அவனுக்குப் பல இரவு சாந்தியைக் குலைப்பதாயிருந்தால் எந்த ஆண் மகன்தான் அதிக நாள் பொறுத்துக் கொள்வான்?

ஆழ்ந்து யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான் பாஸ்கரன், அதாவது, அந்த வீட்டைக் காலி செய்துவிடுவதென்று. போகும் வீட்டுக்கும் எதிர் வீடும் பக்கத்து வீடும் இருக்குமென்றாலும் பக்கத்து வீட்டுப் பெண்மணி தான் வாங்கும் துணிகளால் இந்துவைப் பாதிக்கும் அளவுக்குச் சிநேகம் வளரச் சில காலம் ஆகுமல்லவா? ஆபத்து நெருங்குமுன் பெண்ணை வேறு வீட்டுக்கு நழுவித் தப்பித்துக் கொண்டால் போயிற்று!

ஆகவே ரகசியமாய் வேறு வீடு பார்க்கத் தொடங்கினான் பாஸ்கரன். அவனுக்கு ஒரு வீடும் கிடைத்தது.

"இந்து, இந்த வீட்டில்..." என்று ஆரம்பித்தான் பாஸ்கரன்.

"இந்த வீட்டுக்கு வந்த நாளாய் எனக்கு நல்ல புடவையாக ஒன்று நீங்கள் வாங்கிக் கொடுத்ததுண்டா? எதிர் வீட்டு எச்சுமு ஆகாய நிறத்தில் ஒரு பூப்போட்ட ஸில்க் வாங்கியிருக்கிறாள் பாருங்கள்......"

"நமக்கு இந்த வீடே அதிர்ஷ்டமில்லை, இந்து. இங்கே வந்த நாளாக ஒரே கவலையும் கஷ்டமுமாயிருக்கிறது......"

"எனக்கு அந்த மாதிரிப் புடவை வாங்கித் தந்துவிட்டீர்களானால் உங்களுக்கும் கவலையில்லை, எனக்கும் கஷ்டமில்லை. ஒரு நாளைக்குத் தோழிகளை அழைத்து வந்து துணி பீரோவைக் காட்டலாமென்றால்......"

"இந்த வீட்டில் பீரோ வைக்கத் தகுந்த இடமாக ஏதாவது இருக்கிறதா பார்த்தாயா? வேறு வீட்டுக்குப் போய் விட்டோமானால்......?"

"நன்றாயிருக்கிறது! என்ன குறைச்சலாம் இந்த வீட்டுக்கு?"

"கிழக்கு பார்த்த வீடாக இல்லையே! எழுந்ததும் சூரியனை வீட்டு வாசலில் பார்ப்பதே ஒரு பாக்கியம்!"

"பார்த்தீர்களா? இப்போதான் நினைவு வருகிறது. கோடி வீட்டுக் கோமளம் சூரியன் பார்டர் போட்ட..."

"இந்த வீட்டில் பார், விளக்குகள் சரியாகவே எரியவில்லை."

"வீட்டுக்காரரிடம் விளக்குகளைச் சரி செய்யும்படி சொன்னால் போயிற்று. இதற்காக வீட்டைக் காலி செய்வார்களோ?"

"ராத்திரி யெல்லாம் இங்கே கொசு பிடுங்கித் தின்கிறதே!"

"அப்படியா? எனக்குத் தெரியவில்லை. கொசு வலை வாங்கிக் கட்டி விட்டால் போகிறது!"

"இங்கே வீடுகளெல்லாம் ரொம்பக் கிட்ட கிட்ட இருக்கின்றன."

"நல்லதுதானே? சில சமயம் வீட்டில் வேலை இருக்கும்போது இங்கிருந்தே சற்று உரக்கப் பேசினால் எச்சுமுவோடு தாராளமாகப் பேச முடிகிறது. அந்த மாதிரி ஒரு சந்தர்ப்பத்தில் தான் அவள் அந்த மூவர்ண ரவிக்கையைப் பற்றி!..."



"இங்கே பக்கத்தில் பள்ளிக்கூடமே இல்லை. நமது ஜானுவைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேண்டுமானால்?"

"ஜானுவுக்கு இன்னும் இரண்டு வயது நிரம்பவில்லையே! இப்போதைக்குச் சிறிதும் அவசிய மில்லாததில் பள்ளிக்கூடத்தைப் பற்றித்தான் உங்களுக்குக் கவலை. அவசியமுள்ள புடவைக் கடைக்கு இந்த வீடு சௌகரியமா யிருப்பதை நீங்க யோசிக்க மாட்டேனென்கிறீர்களே?"

கடைசியில் இந்துவும் பாஸ்கரனும் புது வீட்டைப் போய்ப் பார்த்தார்கள். இந்து எல்லா சோதனைகளையும் செய்து பார்த்தாள். குழாயில் ஜலம் கொட்டு கொட்டென்று கொட்டியது. காற்று ஜிலு ஜிலுவென்று ஆளைத் தூக்கிக் கொண்டு போயிற்று. "நமக்கும் ஒரு மாறுதல் இருப்பது நல்லதுதான்" என்று சொல்லிப் பாஸ்கரனை ஆனந்த சாகரத்தில் அமிழ்த்தி விட்டு விளக்கைப் போட்டாள் இந்து. என்ன துரதிருஷ்டம்! விளக்கு எரிய மறுத்து விட்டது!

"நல்ல வீட்டைப் பார்த்தீர்கள்! இப்பொழுது நாமிருக்கும் வீட்டில்தான் விளக்குகள் சரியாக எரியவில்லை என்றால் இங்கே அடியோடு எரியவில்லையே!" என்றாள் இந்து. விளக்கு எரியாததற்கு 'பல்ப்' உடைந்திருந்ததுதான் காரணம் என்று தெரிந்த போதிலும் அந்த அபசகுனத்தால் ஏற்பட்ட மனக் கிலேசத்தினால் மறு பேச்சில்லாமல் அங்கிருந்து கிளம்பி விட்டாள். முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு பாஸ்கரனும் அவளைப் பின் தொடர்ந்தான்.

இதற்குப் பின் வேறு சில வீடுகளைப் பார்த்தார்கள். ஒரு வீட்டில் நுழைந்ததுமே குழந்தை ஜானு அழ ஆரம்பித்தாள். "குழந்தைகளுக்கே ஒரு நுண்ணறிவு இருக்கிறது. இந்த வீடு நமக்கு அதிர்ஷ்டமா யிருக்காது" என்று சொல்லி விட்டாள் இந்து. இன்னொரு வீட்டில் வாயிற்படிகள் சற்று உயரமா யிருந்தன. குழந்தை அவற்றைத் தாண்ட முடியாமல் விழுந்து விடுவான் என்று ஆட்சேபித்து இந்து அந்த வீட்டையும் மறுத்து விட்டாள். வேறொரு வீடு அழகா யிருந்தது. சின்ன மாடியும் இருந்தது. வாடகை மட்டும் கொஞ்சம் அதிகமானாலும் கொடுக்கத் தயாரா யிருந்தான் பாஸ்கரன். ஆனால் இந்து "எனக்குப் புடவை எடுப்பதென்றால் உமக்குச் சம்பளம் போதாது. ஆனால் அநாவசியமான மாடிக்குப் பணம் சேர்த்துக் கொடுப்பதென்றால் உங்களுக்குப் பணம் எங்கிருந்தோ வந்து குதித்து விடும்? என்னைக் கண்டால் பிடிக்கவில்லை என்று சொல்லி விடுங்களேன்" என்று கண்ணீர் வடியக் கத்தி விட்டுக் கோபமாய்த் திரும்பி விட்டாள். அவளைச் சமாதானம் செய்து தன் பிரியத்தைத் தெரிவிக்கப் பாஸ்கரன் மறுநாளே ஒரு மூவர்ண ரவிக்கையும் அதனுடன் சேர்த்து அணிந்து கொள்ள ஒரு மூவர்ண பார்டர் பெங்கால் ஸில்க் புடவையும் அவளுக்கு வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து விட்டான்.

கடைசியில் பாஸ்கரனுக்கு மிகவும் திருப்தியளிக்கும் வகையில் ஒரு வீடு காலியாயிற்று. அந்த வீட்டுக்கு அருகில் ஒரு ஆண் பிள்ளைகள் காலேஜ் இருந்தது. ஆண்களின் பூப்போட்ட புஷ்கோட்டுகள் ஸ்திரீகளின் வெவ்வேறு நிறமாகவும் விதமாகவும் உள்ள உடைகளுக்கு என்ன இருந்தாலும் ஈடாகாது என்று நினைத்து அவன் மனம் குளிர்ந்தது. எதிரில் ஒரு விளையாட்டு மைதானம் இருந்ததால் அங்கே அதிக வீடுகள் சமீபத்தில் கட்டப்பட வில்லை.

இந்து அந்த வீட்டில் குடியிருக்க எளிதில் ஒப்புக் கொள்ளவில்லை. "பேச்சுத் துணைக்கு யாரும் இல்லையே!" என்று மறுத்தாள்.

"சீக்கிரத்தில் அருகில் வீடுகள் கட்டி விடுவார்கள்" என்றான் பாஸ்கரன்.

"அம்புஜமும் கோமளமும் எச்சுமுவும் இல்லாமல் எனக்குப் பொழுதே போகாதே!"

"உனக்கு நிறையத் தபால் கார்டுகள் வாங்கித் தருகிறேன். தினம் அவர்களுக்குக் கடிதம் எழுதிப் போடு."

"அப்படி என்னவாம் இந்த வீடு உசத்தி?" என்று வினவினாள்.

"எதிரே திறந்த வெளி இருப்பது எவ்வளவு ஆரோக்கியம் தெரியுமா? நம் குழந்தை இப்போதிருந்தே இம்மாதிரி இடத்தில் வசித்தால் ஆரோக்கியமாக வளர்வான்!"

"நான் குழந்தையாயிருந்தபோது விளையாட்டு மைதானத்துக்கு எதிரேயா வசித்தேன்? என் ஆரோக்கியத்துக்கு என்ன குறைவு வந்து விட்டது? என் விஷயமாய் டாக்டருக்கு ஒரு காலணா செலவழித்திருப்பீர்களா? அல்லது என்னைக் கிளியே மயிலே என்றெல்லாம் வர்ணித்தீர்களே, அதைத்தான் மறந்து விட்டீர்களா?"

"அடடா! இப்போது மட்டும் உன்னைக் கிளியில்லை என்று சொல்கிறேன்! அதுவும் பஞ்சவர்ணக் கிளி என்று இப்போது சொல்வேன். அதற்காக நல்ல வீடு வந்தால் விட்டு விடுவதா? ஜானு மிகவும் பலவீனமாயிருக்கிறான். அவனுக்கு இந்த இடம் மிகவும் நல்லது. ஏன், உனக்கும்தான் நல்லது. சந்தடியில்லாமலிருந்தால் மனத்துக்கு ஓய்வு உண்டாகும்."

வெகு நேரம் வாக்குவாதத்துக்குப் பிறகு இந்து அரை மனசுடன் சம்மதித்தாள். சிநேகிதிகளிடமெல்லாம் வருத்தமாய் விஷயத்தைச் சொன்னாள். "நீங்களெல்லாம் அடிக்கடி அங்கே வர வேண்டும். புது மோஸ்தரில் என்னென்ன துணிகள் வருகின்றன என்று எனக்குத் தெரிவிக்க உங்களைத் தவிர வேறு யாருமில்லை. போகிற வீட்டுக்கு வாடகை குறைச்சல். ஆகையால் அவர் முன்னை விட அடிக்கடி எனக்குத் துணி வாங்கிக் கொடுத்தாலும் கொடுப்பார்" என்று நம்பிக்கையோடு சொன்னாள்.

எதற்கும் அதிர்ஷ்டம் வேண்டாமா? பால் காய்ச்சிச் சாப்பிடப் போயிருந்த தினம் எதிர்பாராத ஒரு விஷயம் நடந்தது. இந்து பாஸ்கரனைப் பார்த்து, "நல்ல அதிர்ஷ்ட வீட்டைப் பிடித்தீர்கள்! இந்த வீட்டில் கொஞ்ச காலத்துக்கு முன் குழந்தை ஒன்று காணாமல் போய் விட்டதாமே? அதுதான் இவ்வளவு நாள் காலியாய்க் கிடந்திருக்கும். நமக்கு ஒரு குழந்தை இருக்கிறதா இல்லையா? இந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த வீட்டில் குடியேறி ஜானுவுக்கு ஏதாவது நேர்ந்து விட்டதானால் என்ன செய்கிறதாம்?" என்று இரைந்தாள். கொண்டு வந்திருந்த அடுப்பு முதலியவற்றை ஒரு இடுப்பிலும் ஜானுவை மற்றொரு இடுப்பிலும் வைத்துக் கொண்டு விடு விடென்று வெளியே நடந்து விட்டாள். பாஸ்கரன் பேசவும் சக்தியற்றுப் பிரமித்துப் போய் விட்டான்.

இதற்குப் பிறகு இந்து வேறு வீடு பார்க்க அடியோடு மறுத்து விட்டாள். பாஸ்கரன் கெஞ்சினான், மிஞ்சினான். வார்த்தை அதிகரித்தால் நீர் தேங்கிய கண்களோடு ஜானுவைப் பார்ப்பாள் இந்து. பாஸ்கரன் அதற்கு மேல் ஒன்றும் செய்வதில்லை.

பாஸ்கரனும் விடா முயற்சியில் சிறந்தவன்தான்.

சில தினங்கள் யோசனை செய்த பிறகு அவனுக்கு மற்றொரு வழி புலப்பட்டது. ஜவுளி பக்தைகளை ஜவுளியைக் கொண்டே ஜெயித்து விடலாமே!

அவன் வீட்டிலிருந்து வெகு தூரத்துக்கு அப்பால் ஒரு புது ஜவுளிக் கடை திறந்திருந்தார்கள். அங்கு மிக நேர்த்தியான ஜவுளி தினுசுகளெல்லாம் விற்கப்படுவதாகக் கேள்விப்பட்டிருந்தான்.

"ஏன் இந்து, புதிதாக ஒரு ஜவுளிக்கடை திறந்திருக்கிறார்களாமே?" என்றான் பாஸ்கரன் சாமர்த்தியமாக.

"ஆமாம். அங்கே ரொம்ப அழகான உருப்படிகளெல்லாம் வந்திருக்கின்றனவாம். ஹூம். எங்கே போக முடிகிறது?"

"ஏன்? இப்போது மணி நாலுதானே? நான் வீட்டைப் பார்த்துக் கொள்கிறேன். நீ உன் சிநேகிதிகளுடன் அங்கே போய்ப் பார்த்து விட்டு வாயேன்."

இந்து ஆச்சரிய மிகுதியால் ஸ்தம்பித்துச் சிலைபோல நின்றாள். பாஸ்கரனா இந்த வார்த்தைகளைச் சொல்வது!

சிறிது நேரத்தில் தோழிகள் நால்வரும் புறப்பட்டு இரவு சுமார் எட்டு மணிக்குத் திரும்பி வந்தார்கள். அன்று இரவெல்லாம் இந்து கடையில் கண்ட அதிசயங்களையே கணவனிடம் வர்ணித்துக் கொண்டிருந்தாள்.

தினம் ஆபீஸ் வேலையோடு வேலையாகப் பாஸ்கரன் ஜவுளிக் கடையின் அருகில் வீடு தேடும் வேலையையும் ஏற்றுக் கொண்டான். கடைசியில் வெகு சிரமப்பட்டு ஒரு இடம்



கண்டு பிடித்தான். ஒரு பெரிய வீட்டில் பல குடித்தனங்கள். ஒரு குடித்தனத்தின் இடம் காலியா யிருந்தது. இந்த விஷயத்தை இந்துவிடம் அவள் சிநேகிதிகள் காதில் கேட்கும் படியாகப் பாஸ்கரன் சொன்னான்.

அங்கு குடி போக வேண்டு மென்று இந்து அவனிடம் மன்றாடினாள். ஆனால் பல குடித்தனங்களுடன் சேர்ந்து தான் வாழ முடியாது என்று பாஸ்கரன் கண்டிப்பாகச் சொல்லி விட்டான். இந்துவுக்கு அந்த இடம் ஒத்துக் கொள்ளாது என்று வாதாடினான். மற்றக் குடும்பங்களது குழந்தைகளால் ஜானுவுக்குக் கஷ்டம் ஏற்படும் என்றான். அதிக மனிதர்களுடனிருந்தால் இந்துவின் உடல் நலம் குலைந்துவிடும் என்று அழுத்தந் திருத்தமாய் அபிப்பிராயப் பட்டான். இன்னும் என்னென்ன செய்திருப்பானோ தெரியாது. அதற்கெல்லாம் அவசியமில்லாமல் செய்து விட்டுக் கோமளம் புது இடத்துக்குக் குடியேறி விட்டாள்!

இந்து முகத்தில் வருத்தம் சூழ "கொடுத்து வைத்தவள், அனுபவிக்கப் போய் விட்டாள். தினம் அந்தப் பெரிய கடைக்குப் போய் ஆசைதீர ஆயிரம் ரகத் துணிகள் வாங்குவாள். சீக்கிரத்தில் அங்கேயே வேறு இடம் பார்த்து எங்களுக்கெல்லாம் சொல்லியனுப்புவதாய்ச் சொல்லி யிருக்கிறாள். இருந்தாலுமென்ன! கைக் கெட்டியது வாய்க்கெட்டவில்லை. அந்த இடத்துக்கு நாம் போயிருந்தால்......" என்று இரண்டு சொட்டுக் கண்ணீர் வடித்தாள்.

பாஸ்கரனுக்குச் சந்தோஷ மிகுதியால் பேச்சே எழவில்லை. ஆனால் அந்தப் பரவசத்திலும் அவன் ஜாக்கிரதையை மறக்கவில்லை. வீடு கிடைக்காமல் திண்டாடிய சிநேகிதர் ஒருவரை உடனே கோமளம் இருந்த வீட்டுக்குத் தருவித்து விட்டான். தோழிகள் இல்லாமல் இருக்க முடியாதென்று இப்போது கோமளம் பழைய வீட்டுக்குத் திரும்பிவர முடியாது அல்லவா?

எச்சுமுவையும் அம்புஜத்தையும் கிளப்ப அவன் வேறொரு வழி யோசித்து விட்டான். ஒண்டுக் குடித்தனம் ரொம்பப் பேருக்குப் பிடிக்காதல்லவா? அவன் கோமளம் வசிக்கும் வீட்டுக்குச் சென்று இரண்டு குடித்தனக்காரர்களிடம் வேறு வீட்டில் குடியேறும்படி சொன்னால்......?

நினைத்த படியே செய்தான். கும்பலை வெறுக்கும் இரண்டு குடித்தனக்காரர்களையும் கண்டான். கோமளம் என்பவள் அவளது இரண்டு உயிர்த் தோழிகள் வேறு இடத்தில் இருப்பதால் மிகவும் மனம் வருந்துவதாக அவர்களிடம் உருக்கமாய் எடுத்துச் சொன்னான். கடைசியில் அந்தத் தோழிகள் இருக்கும் தனி வீடுகளுக்கு அவர்கள் குடித்தனம் வந்து விடலாமென்று சொன்னபோது அவர்கள் முகம் மலர்ந்தது.

ஆயினும் எளிதில் ஒப்புக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை. பாஸ்கரன் எடுத்து எடுத்துச் சொன்னான்; ஏழெட்டு நாட்கள் வந்து சொன்னான்; தன் எதிர் வீட்டையும் பக்கத்து வீட்டையும் புகழ்ந்து பேசினான்; தன் உண்மை நிலையையும் ஓரளவுக்கு வெளியிட்டான். அவர்கள் மனம் இரங்கியது.

"என்றைக்கு ஸார் வரலாம்?" என்ற முடிவான கேள்வியைக் கேட்டார்கள்.

"நீங்கள் ஒரு குறிப்பிட்ட தேதியில் காலி செய்யப் போவதாய்ச் சொல்லுங்கள். உடனே அந்தப் பெண் தன் சிநேகிதிகளை அதே தேதியில் இங்கு வர ஏற்பாடு செய்து விடுவாள். அவர்களுக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறாள். ஒரே வீட்டில் சேர்ந்து வசிக்கும் சந்தர்ப்பத்தை இழக்க மாட்டாள். அதே தேதியில் நீங்கள் அங்கு வந்து விடலாம்" என்றான் பாஸ்கரன்.

இரண்டு தினங்களுக்குப் பிறகு இந்து, பாஸ்கரனிடம், "கேட்டீர்களா சமாசாரத்தை? கோமளம் இருந்த வீட்டிலேயே இருவர் இன்னும் பத்து நாளில் காலி செய்கிறார்களாம். எச்சுமுவும் அம்புஜமும் அதே தேதியில் அங்கு குடி போகப் போகிறார்களாம்" என்றாள். அவள் குரலில் சோகம் தோய்ந்திருந்தது.

எச்சுமுவும் அம்புஜமும் புது வீட்டுக்குக் குடியேற ஆயத்தம் செய்துகொண் டிருந்தார்கள். இந்து துக்கமே உருவெடுத்தவளாய்த் தோழிகள் தாம் விரும்பிய இடத்துக்குப் போகப் போவதை எண்ணி மனம் வெதும்பினாள். அவர்கள் ஒவ்வொரு நாளும்

அந்த உயர்ந்த ஜவுளிக் கடைக்குச் சென்று அனுகுண்டு பார்டர் சோலிகளும் மிருகக் காட்சிச் சாலையைப் 'பார்ட'ராகக் கொண்ட புடவைகளும் வாங்குவார்களே என்று நினைத்தபோது தன் விதியை நினைத்து அவளால் வருந்தாமல் இருக்க முடியவில்லை.

தன் லட்சியம் பூர்த்தியாவதைக் கண்டு பாஸ்கரன் பரவசமானான். எதிர் வீட்டுக் காரியும் அடுத்த வீட்டுக்காரியும் இந்துவிடம் விடைபெற்று வண்டியில் ஏறியபோது அவனுக்குச் சந்தோஷத்தால் மனம் பூரித்தது. அன்று இரவு இன்பத் தூக்கம் தூங்கி ஆனந்தக் கனவுகள் கண்டான்.

* * *

இப்போதெல்லாம் இந்து புடவை கேட்பதில்லை. அதையெல்லாம் அவள் ஒருவாறு மறந்து விட்டாள் என்றே சொல்ல வேண்டும். எந்த ஜவுளிக் கடையில் எந்த மாதிரிப் புடவை வந்தாலும் அவள் அதைப் பற்றி அவ்வளவு அக்கறை காட்டுவதில்லை.

பாஸ்கரனைக் கண்டிப்பதில் தான் அவளுக்குப் பொழுது சரியாகி விடுகிறதே! கோடி வீட்டுக் கோபாலய்யர், அடுத்த வீட்டு அப்புஸ்வாமி, எதிர் வீட்டு யக்ஞநாராயணன் இவர்கள் என்ன சினிமா பார்த்தாலும் பாஸ்கரன் அதை மனைவியிடம் சொல்லி விட்டு "இன்று நானும் அந்தச் சினிமாவுக்குப் போகப் போகிறேன்" என்று கிளம்பி விடுவான். "இதெல்லாம் நமக்குக் கட்டுப்படியாகுமா?" என்று அவள் கேட்டால், "இல்லாமலென்ன? நானென்ன மற்றவர்களைப் போல் இரண்டரை ரூபாய் ஸீட்டுக்கா போகிறேன்? ஏதோ ஒண்ணே கால் ரூபாய்தானே?" என்பான். சினிமாவுக்குப் போய்விட்டு வந்து அதைப் பற்றிச் சிநேகிதர்களுடன் வம்பளப்பான். பாஸ்கரன் வீட்டில் ஏழெட்டுப் பேர்களாகக் கூடிக் கொண்டு ரொம்பவும் உற்சாகமாகச் சினிமாவைப் பற்றி அக்கு வேறு ஆணி வேறாக அலசி எடுத்து விவாதிக்கத் தொடங்கி விடுவார்கள். இரவு பதினொரு மணி வரையில் வாசலிலேயே பேச்சு.

"இப்படி பணம் மட்டுமல்லாமல் உடம்பையும் கெடுத்துக் கொள்கிறாரே!" என்று இந்துவுக்குக் கவலை.

"இந்த வீடே நமக்கு அதிர்ஷ்டமானதில்லை. வேறு வீட்டுக்குப் போய்விடலாமே?" என்று இந்து அடிக்கடி பாஸ்கரனிடம் சொல்லுகிறாள்.

"இந்த வீட்டைப் போல் அருமையான வீடு உலகில் வேறு எதுவுமே கிடையாது. நண்பர்களில்லாமல் நான் எப்படிப் பொழுது போக்குவேன்?" என்று ஏங்குகிறான் பாஸ்கரன்.

உலகம் அறியாதவள்

எஸ். டி. ஸ்ரீநிவாஸன்

மோட்டார் சைக்கிளை அதன் இடத்தில் விட்டு விட்டு, தன் அறைக்குள் நுழைந்த ராகவன், கூடத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய பெட்டியைக் கண்டு திகைத்தான். அவனைத் தொடர்ந்து பின்னால் நுழைந்தாள் கல்யாணி, கையில் காப்பி டம்ளருடன். சிறிது ஆச்சரியத்துடன் அவன், "யார் வந்திருக்கா நம் வீட்டுக்கு!..." என்று கேட்டுக் கொண்டே தன் உடுப்புக்களைக் களைந்தான். அதே சமயத்தில், "பெரியம்மா, நீ வந்து சாயங்காலம் மயிலாப்பூருக்குப் போகச்சே..." என்று சொல்லிக் கொண்டே வாசற்படியண்டை வந்த கமலி, ராகவனைக் கண்டதும், மேலே தான் சொல்ல வந்த விஷயத்தை முடிக்காமல், 'திரு திரு' வென்று விழித்துக் கொண்டு நின்றாள்.

"இது உங்க பெரியப்பா, கமலி. இவர் கிட்டே உனக்கு என்ன வெட்கம்!...வா. இங்கே!..." என்று வாசற்படியண்டை நின்ற குழந்தையைக் கூப்பிட்டுக் கொண்டே, ராகவனிடம், "ராஜி வந்திருக்கா!" என்றாள் சற்று மெதுவாக.

சட்டென்று ராகவனின் முகம் மாறியது; அதைக் கல்யாணி கவனிக்காமல் போகவில்லை.

"உன் தங்கையா வந்திருக்கிறாள்!..." அவன் குரல் மாறுபட்டுத் தொனித்தது.

அதே சமயத்தில் எதிர் அறையில் இருந்து ஹாலின் வழியாக. ஏதோ காரியமாக. வாசல் பக்கம் சென்ற ராஜியின் உருவம் ராகவனின் கண்களில் பட்டது.

ராகவனுடன் பத்து வருஷம் குடித்தனம் நடத்திய கல்யாணிக்கு அவன் குணம் தெரியும்; ராஜி தன் வீட்டுக்கு வந்தபோது, எத்தனையோ வருஷங்களுக்குப் பிறகு தன் உடன் பிறந்தாளைச் சந்திக்கிறோம் என்ற மகிழ்ச்சி ஒரு பக்கம் அவளுக்கு இருந்தபோதிலும், அவள் வரவால் என்ன விளைவுகள் ஏற்படுமோ என்ற பயமும் கூடவே அவள் மனத்தில் எழுந்தது. ராஜியின் அப்போதைய நிலை அவள் வந்த காரியம் இரண்டும் அவள் பயத்தை மிகைப்படுத்தின.

ஆகவே அவள், ராஜியைப் பற்றி அப்போதைக்குத் தன் கணவனிடம் ஒன்றும் பேசாமல், காலி டம்ளருடன், கமலியையும் அழைத்துக் கொண்டு அந்த அறையை விட்டு வெளியே வந்துவிட்டாள்.

பத்து நிமிஷ நேரத்துக்குள் குளித்து விட்டு மாற்று உடை அணிந்துகொண்டு, தன் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே கிளம்பினான் ராகவன்.

"அக்கா! அத்திம்பேர் கிட்டே விஷயத்தைச் சொன்னயா!..." நம்பிக்கையற்ற குரலில் கேட்டாள் ராஜி.

அனுதாபம் ஒரு பக்கம், பயம் ஒரு பக்கம் கல்யாணியின் மனத்தை இழுக்க, "அவர் இப்போ எங்கோ அவசரமாகப் போனார். ராத்திரி வந்ததும் சொல்றேன்" என்றாள் அவள்.

கடற்கரையில் நடைபாதை ஓரமாகத் தன் மோட்டார் சைக்கிளைக் கொண்டு வந்து நிறுத்தினான் ராகவன். மணற் பரப்பில் சென்று, ஒதுக்குப் புறமான ஒரு இடத்தில் அமர்ந்தான்.

அவனுக்கு எதிரே அலைமோதும் நீலக்கடல்; அவனுக்கு உள்ளே புயலடிக்கும் வேதனை உள்ளம்.

ராஜி! வேம்பாகக் கசந்தது அவன் மனம். அவள் பெயரைக் கேட்கவே அவன் காதுகளுக்குச் சகிக்கவில்லை.

*

ஏழைமையின் காரணமாக எஸ். எஸ். எல். ஸி. யுடன் படிப்பை நிறுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது ராகவனுக்கு. சிறு வயதிலேயே அவனுடைய தாய் இறந்து விட்டாள்; தந்தை மறுமணம் செய்துகொண்டு இளையாள் மோகத்தில் ராகவனைத் திரஸ்கரித்து விட்டார். ஒன்று விட்ட மாமா ஒருவரிடம் போய் ஒட்டிக் கொண்டான் ராகவன்; கஷ்டப்பட்டு எஸ். எஸ். எல். ஸி. தேறியதும், அவர் ராகவனுக்கு ஒரு இரும்புக் கடையில் குமாஸ்தா உத்தியோகம் பார்த்து வைத்தார். பிறகு அவன் 'ரூம்' எடுத்துக்கொண்டு, ஹோட்டலில் சாப்பிடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அந்தச் சந்தர்ப்பத்தில்தான் அவன் வாழ்வில் சாம்பசிவம் புகுந்தார். சாம்பசிவம் ராகவன் வேலைசெய்து வந்த கடைக்காரனுக்குத் தெரிந்தவர். அவருடைய மூத்த பெண் கல்யாணி தன் கல்விக்கு எட்டா வகுப்புடன் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு வீட்டில் இருந்தாள். அப்போது அவளுக்குப் பதினெட்டு வயது. அவளுக்கு மணம் செய்ய முயன்று கொண்டிருந்தார் சாம்பசிவம். பார்ப்பதற்கு அழகாக, வேலையில் கெட்டிக்காரனாக இருந்த ராகவனின்மேல் அவருடைய திருஷ்டி விழுந்தது.

மெதுவாக ராகவனிடம் விஷயத்தைப் பிரஸ்தாபித்தார்; ராகவன் கல்யாணியை வந்து பார்த்தான். கல்யாணி மாநிறமாயினும் அவளுடைய அடக்கமான சுபாவம் ராகவனுக்கு ரொம்பப் பிடித்து விட்டது. சீக்கிரத்தில் கல்யாணி ராகவனின் மனைவியானாள்.

ராகவனுக்கு மிகக் குறைந்த சம்பளம் வந்ததால் அது தனிக்குடித்தனம் வைக்கப் போதுமானதாய் இல்லாததாலும், அவனுக்கு வேறு நெருங்கிய பந்துக்களே யாரும் இல்லாததாலும் ராகவன் மாமனார் வீட்டிலேயே வந்து தங்கினான்.

ராஜி அப்போது இண்டர்மீடியட் படித்துக் கொண்டிருந்தாள். அவள் நல்ல அழகி; பாட்டிலும் படிப்பிலும் மிகவும் கெட்டிக்காரி; கலாசாலை மன்றத்துக்கு அவள்தான் காரியதரிசி. பல கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் பரிசுகள் வாங்கியவள். அந்த வீட்டில் அவளுக்கு மிகுந்த செல்வாக்கு; ஆனால் அவள் மகா கர்வம் பிடித்தவள். ஆரம்ப முதலே அவளுக்கு ராகவனைக் கண்டால் பிடிக்கவில்லை. திக்கற்றவனாய், உற்றார் உறவினர் ஒருவரும் இன்றி, அவன் தங்கள் வீட்டில் வந்து புகுந்து கொண்டது, அவள் அவனைப்பற்றி ஏளனமாக நினைக்க முதல் காரணமாக இருந்தது. அவனுடைய குறைந்த படிப்பு, ஏழைமை நிலைமை, அவன் பார்த்து வந்த சாதாரண உத்தியோகம், குறைந்த சம்பளம் உப காரணங்களாய் அமைந்தன.

அன்று ராகவன் கடையில் இருந்து வர சற்று நாழிகை யாகிவிட்டது. வீட்டினுள் நுழைந்த அவன் ராஜி, கல்யாணியுடன் ஏதோ பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு நடையிலேயே நின்று கவனித்துக் கொண்டிருந்தான்.

"இன்றுதான் அந்தச் சினிமா கடைசி நாள். யோசனை செய்யாமல் வா, போகலாம்..." என்று கூப்பிட்டாள் ராஜி.

"அவர் இன்னும் வரவில்லை. அவரைக் கேட்டுக் கொண்டுதான் நான் வர முடியும்..." என்று பதிலளித்தாள் கல்யாணி.

"அத்திம்பேர் வந்து அவரை நீ கேட்டுக் கொண்டு புறப்படும் வரையில் சினிமா ஆரம்பிக்காமல் இருக்குமா! நாழிகையாச்சு, புறப்படு. நீ அவரைக் கேட்காமல் வந்து விட்டால் உன் மேல் அவர் கோபித்துக் கொண்டு வெளியே போய் விடுவார் என்று உனக்குப் பயமா! அந்தப் பயமெல்லாம் உனக்கு வேண்டாம். இந்த வீட்டைத் தவிர அவருக்குப் போக்கிடம் வேறு ஏது!" என்றாள் ராஜி துடுக்காக.

ஆனால் கல்யாணிக்குப் பொறுக்கவில்லை.

"ராஜி! நீ அத்து மீறிப் பேசுகிறாய். என் கணவர் ஏழைதான். ஆனாலும் அவரை இவ்வளவு துச்சமாக நடத்துவது தவறு" என்றாள் கோபத்துடன். ராஜி 'உர்'ரென்று முகத்தை வைத்துக் கொண்டு போய் விட்டாள்.

ராஜி இவ்வளவு துடுக்குக்காரியாயினும் கல்யாணி மிகவும் நல்லவள். தன் கணவனிடத்தில் அவளுக்குப் பெரு மதிப்பு. தன் காது பட ராஜி தன் கணவனைப் பற்றி இழிவாகப் பேச அனுமதிக்க மாட்டாள்.

ராகவனும் ரொம்பப் பொறுமைசாலி. ராஜியின் அவமதிப்பு நிறைந்த சொற்கள் அவன் உள்ளத்தில், 'நாம் இந்த வீட்டில் இனி ஒரு க்ஷணமும் இருக்கக் கூடாது' என்ற எண்ணத்தை எழுப்பினும், கல்யாணி சில மாதங்களில் தாய்மையை அடையவிருந்த அவளுடைய பலஹீனமான அந்த சமயத்தில், தான் பொறுமையுடன் சில காலம் இருப்பதுதான் மேல் என்று அவன் விவேகம் எடுத்துக் கூறியது.

காலதேவனின் அடிச்சுவட்டில் வருஷங்கள் என்னும் புழுதிப் படலங்கள் பல எழும்பி மறைந்தன. கல்யாணி சேகரைப் பெற்றெடுத்தாள்.

ராஜியின் படிப்பு முடிந்தது. பி. ஏ. பட்டம் பெற்ற நாகராஜனுக்கு அவளைக் கொடுத்தனர். ஒரு அயல் நாட்டு மண்ணெண்ணெய்க் கம்பெனியில் அவன் காஷியராக இருந்தான். ராஜி தன் கணவனுடன் குடித்தனம் செய்யப் போய் விட்டாள். கல்யாணியின் தாய் திடுமெனக் கண்களை மூடிவிடவே, சாம்பசிவம் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுத் தன் கிராமத்துக்கே சென்று விட்டார், ராஜிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

ராகவன் தான் பார்த்து வந்த வேலையின் நுணுக்கங்களை யெல்லாம் நன்றாகக் கற்றுக் கொண்டு விடவே அவன் சம்பளம் படிப்படியாக உயர்ந்தது. சென்ற வருஷம்தான் அவன் ஒரு அமெரிக்கக் கம்பெனியில் உதவி மானேஜராக நியமிக்கப்பட்டான். நானூறு ரூபாய் அவனுக்குச் சம்பளம். ஸ்ரீராம் நகரில் தனி வீடு எடுத்துக் கொண்டான்.

ராஜி கல்யாணமாகிக் கணவனுடன் குடித்தனம் செய்யப் போய்ப் பல வருஷங்களுக்குப் பிறகு சகோதரிகள் இருவரும் சந்திப்பது இதுதான் முதல் தடவை.

நிலா வெளிச்சத்தில் தன் கைக்கெடியாரத்தைப் பார்த்தான் ராகவன். மணி எட்டு. அவன் வீட்டுக்குக் கிளம்பினான்.

பத்து மணிக்குத் தன் காரியத்தை யெல்லாம் முடித்துக் கொண்டு தன் படுக்கையறைக்கு வந்தாள் கல்யாணி. ராகவன் கட்டிலில் படுத்திருந்தான். தன் கணவனின் கட்டிலுக்கு அருகே இருந்த முக்காலியின் மேல் உட்கார்ந்து கொண்டாள். வெற்றிலை மடித்துக் கொடுத்துக் கொண்டே, "நான் ஒரு விஷயம் சொல்லப் போகிறேன். அதை நீங்கள் முழுக்க கேட்கணும். முடிவை உங்க இஷ்டம்போல் செய்து கொள்ளலாம்" என்று ஒரு நீண்ட பூர்வ பீடிகையுடன் ஆரம்பித்தாள்.

அவள் சொல்லப் போவதையே உற்றுக் கவனித்தான் ராகவன்.

"ராஜி ரொம்ப சந்தோஷமாக வாழ்கிறாள் என்று நாம் எல்லாரும் நினைச்சுக் கொண்டிருக்கோம். ஆனால் வாஸ்தவத்தில் அவள் படுகிற கஷ்டத்தை உலகத்திலே வேறு யாருமே பட மாட்டார்கள். அவள் அகமுடையானுக்கு நாற்



றைம்பது ரூபாய் வருகிறது. ஆனால் அவன் எல்லாவற்றையும் ஒழித்து விடுகிறானாம். இவளுக்குப் பண்ணிப் போட்ட நகைகள் எல்லாத்தையும் மூன்னூறு ரூபாய்க்கு மார்வாடிக் கடையிலே அடகு வைத்து விட்டானாம். இப்போ அவன் வந்திருக்கிறது ரொம்ப முக்கியமான ஒரு காரியத்தை உத்தேசித்துத்தான். ஆபீஸ் பணம் மூன்னூறு ரூபாயை எடுத்து அவன் அகமுடையான் கையாடி விட்டானாம். நாளை சாயங்காலத்துக்குள்ளே அதைக் கட்டா விட்டால், உத்தியோகமும் போய், போலீஸிலே வேறு பிடித்துக் கொண்டு போய் விடுவார்களாம்.........'' துக்கம் தொண்டையை அடைக்கச் சொன்னான் அவன்.

''ஆமாம். அதற்கு நாம் இப்போது என்ன செய்யணுமாம் !'' என்று வெறுப்போடு கேட்டான் அவன்.

''மூன்னூறு ரூபாயைக் கொடுத்து நம்மை அந்த நகைகளை யெல்லாம் மீட்டு, அதை யெல்லாம் எங்கேயாவது விற்று, நாம் முன் பணமாகக் கொடுக்கும் மூன்னூறு ரூபாய் போக மீதியை அவள் கிட்டே கொடுக்கச் சொல்கிறாள். மார்வாடியிடமே அவைகளை விற்றால் அவன் ரொம்பக் குறைந்த விலைக்கு எடுத்துக் கொள்ளுவானாம். மார்வாடிக் கடை ரசீதுகளையும் என் கிட்டே கொடுத்திருக்கிறாள். அதை யெல்லாம் நான் பீரோவிலே வைத்திருக்கிறேன். அவள் நிலைமை ரொம்பப் பரிதாபகரமாக இருக்கிறது. அந்த நகைகளிலே ஒரு மாங்காய் மாலையும் ஒரு ஸ்வஸ்திக் சங்கிலியும் இருக்கிறது. அவை எங்க பிறந்த வீட்டு நகைகள். வெளியிலே விற்கிறதை, குறைந்த விலைக்கு நாமே அவைகளை வாங்கிக் கொண்டும் விடலாம். கூலி தள்ளி வருகிறது. நமக்கு அதில் லாபம்தானே !'' என்று சொல்லி விட்டு, அவன் சொல்லப் போகும் பதிலை வெகு ஆவலுடன் எதிர்பார்த்தாள் கல்யாணி.

''இரும்புக் கடைக்காரன்கிட்டே முன் பணமாகப் போட்ட மூன்னூறு ரூபாய் எங்கே இருக்கும் என்று உன் தங்கை யோசனை செய்ய வில்லை போலிருக்கிறது...'' என்று ஏளனமாகச் சொன்னான் ராகவன்.

அவன் சொல்வதன் அர்த்தம் கல்யாணிக்குப் புரியாமல் போகவில்லை ; அடுத்த ஹாலில் படுத்திருந்த ராஜியின் காதுகளிலும் அந்த வார்த்தைகள் விழத்தான் செய்தன.

''பெண்களுக்குத் தேவையான அடக்கமில்லாமல் கர்வம் பிடித்துத் தலை கவிழ்ந்து போனால் இந்த கதிதான் வரும்...நம் தொல்லைகளே பல இருக்கும்போது பிறத்தியார் விஷயங்களை நாம் தலையில் எடுத்துப் போட்டுக் கொள்வதற்குப் பொழுது எங்கே இருக்கிறது! பணம் எங்கே இருக்கிறது ! அவரவர் விதியை அவரவர்கள் அநுபவிக்க வேண்டியதுதான். என்னிடத்தில் பணமுமில்லை. அனாவசியமான விஷயங்களில் தலையிடும் உத்தேசமும் எனக்கில்லை. எனக்குத் தூக்கம் வருகிறது. விளக்கை அணைத்து விட்டு நீ படுத்துக்கோ '' என்றான்.

இந்தப் பதிலை ஓரளவுக்குக் கல்யாணி எதிர்பார்க்கத்தான் செய்தாள். ராகவனிடம் பணம் இல்லாமல் போய் விடவில்லை. ஆனால் ராஜியின் பழைய சரித்திரம் அவன் மனத்தில் கனிவை உண்டாக்கவில்லை என்பதைக் கல்யாணி நன்றாகப் புரிந்து கொண்டு விட்டாள்.

மின்சார விளக்கு 'டக்' கென்று அணைந்தது. ராஜி, கல்யாணி இருவர் மனத்திலும் ராகவன் கட்டாயம் உதவி செய்வான் என்ற நம்பிக்கை ஒளி மறைந்தது.

மறு நாள் சனிக்கிழமை. இரவெல்லாம் யோசித்துக் கல்யாணி இந்த முடிவுக்குத்தான் வந்தாள். குடும்பச் செலவுக்கென்று ராகவன் அவ்வப்பொழுது அவளிடம் கொடுத்த பணத்தில், மிகுதியானதை அவள் அப்படியே தன் பெட்டியில் வைத்திருந்தாள். அது மூன்னூறு ரூபாய்க்கு மேல் இருக்கும். ராகவனுக்கு ராஜியின் மேல் பழைய கோபம் இன்னும் மாறவில்லை. ஆனால் கல்யாணிக்கு உடன்பிறந்த பாசம் விடவில்லை. ராகவனுக்குத் தெரியாமல் அந்தப் பணத்தை நகைகளை மீட்டவுடன் அவைகளை விற்று மூன்னூறு ரூபாயை உடனே கல்யாணியிடம் கொடுத்து விடவேண்டியது. இடையே ராகவன், கல்யாணி சேர்த்து வைத்திருக்கும் பணத்தைக் கேட்டால், சந்தர்ப்பத்துக்குத் தகுந்த மாதிரி ஏதாவது சாக்கு சொல்லிக் கொள்ளலாம் என்று துணிந்து விட்டாள் கல்யாணி.

மத்தியானம் ஒரு மணி. பெட்டியிலிருந்து மூன்னூறு ரூபாயை எண்ணி எடுத்து வைத்து விட்டாள். மார்வாடிக்கடை ரசீதுகளை எடுக்கப் பீரோ அருகில் சென்றாள். அப்பொழுது ஆபீஸிலிருந்து ராகவன் வந்தான். தன் அறைக்குச் சென்ற அவன் கல்யாணியைக் கூப்பிட்டான். அவனுடைய கையில் ஒரு பொட்டலத்தை வைத்தான். அதைப் பிரித்த கல்யாணியின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. அதனுள் மார்வாடிக்கடையில் ராஜியின் கணவன் அடகு வைத்திருந்த அவளுடைய நகைகள் அத்தனையும் இருந்தன.

''நேற்றிரவு நீ ராஜியைப் பற்றிச் சொன்ன போது, முன்பு அவளிடத்தில் எனக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பால் அவள் மேல் இருந்த கோபம் மாறவில்லை. ஆனால் சிறிது நேரம் சிந்தித்த பின் என் மனத்தில் மாறுதல் ஏற்பட்டது. அப்போது அவள் உலகம் தெரியாத சிறு பெண். தெரியாத்தனமாக நடந்துகொண்டு விட்டாள். நம்மிடத்தில் வந்தால் நிச்சயம் உதவி கிடைக்கும், அவமானகரமான இந்த விஷயமும் ரகசியமாகக் காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கையுடன் வந்திருக்கும் அவளுக்கு ஏமாற்றத்தைக் கொடுப்பது அதர்மம் என்று தோன்றியது. காலையில் ஆபீஸுக்குப் போகும் போது மார்வாடிக்கடை ரசீதைப் பீரோவிலிருந்து எடுத்துச் சென்றேன். நகைகளை மீட்டு வந்தேன். நமக்கு இந்த மூன்னூறு ரூபாயை ராஜி திருப்பித்தர வேண்டாம். எந்த நகையையும் அதற்கு ஈடாகவும் தரவேண்டாம். இவைகளில் எதையும் விற்கவும் வேண்டாம். ராஜியின் புருஷன் வேலை செய்யும் கம்பெனி மானேஜர் எனக்கு நெருங்கிய நண்பர். சற்று முன் அவருடன் நான் டெலிபோனில் பேசி நாகராஜன் பணமெடுத்த விவகாரத்துக்கும் ஒரு முடிவு கட்டி விட்டேன். இந்தத் தடவை நாகராஜனை மன்னித்து விடுவதாகவும், அவன் கையாடிய பணத்தை மாதம் பத்து ரூபாயாக அவன் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளவும் அவர் ஒப்புக் கொண்டு விட்டார். ஆனால் இனி அவன் காஷியரா யிருக்க முடியாது. வேறு இலாக்காவில் தான் அவனுக்கு வேலை தருவார் '' என்று சொன்னான் ராகவன்.

தன் கணவன் செய்த காரியத்தால் விவரிக்க முடியாத ஒரு பெரிய சாம்ராஜ்ய பதவியைப் பிடித்து விட்ட பெருமை உணர்ச்சி கல்யாணியின் மனத்தில் ஏற்பட்டது. சிறிது நேரத்தில் நாகராஜன் அங்கே வந்து சேர்ந்தான். தங்கள் நன்றியைத் தெரிவிக்க ராஜிக்கும் நாகராஜனுக்கும் வார்த்தையே கிடைக்க வில்லை.



காந்திமதியின் கல்யாணம்

சரஸன்

அந்தப் பெண்ணின் போக்கு ஊராருக்கு ஒரே புதிராய் இருந்தது. "இப்படியும் ஒரு பெண் உண்டோ! பெற்ற தாய் உயிருடன் இருக்கிறாள். அவளுக்கு ஒரு கடிதம் போட்டாளா, தன் கல்யாணத்தைப் பற்றி! கட்டிய புருஷன்தான் சாரதாவை விலக்கி வைத்து விட்டான். வயிற்றில் பிறந்த பெண் கூடவா இப்படி உதாசீனம் செய்வது! என்ன கல்நெஞ்சம்! அப்பனுக்கேற்ற பெண்தானே!" என்று காந்திமதியைக் கண்டபடி ஏசினார்கள்.

எல்லோரையும் போல, பாஸ்கரனும் ஆதியில் விரும்பித்தான் மணந்து கொண்டார் சாரதாவை. இன்னும் கண்ணுக்கும் கருத்துக்கும் கவர்ச்சியான எத்தனையோ பெண்கள் வந்தும்கூட, அவருடைய கண்ணுக்குச் சாரதாதான் ரதியாய்க் காட்சி தந்தருளினாள். , அம்மாதிரி விரும்பி மணந்து கொண்ட சாரதாவுடன் சுமார் நான்கு வருஷங்கள் இன்பமாய் வாழ்க்கை நடத்தினார். ஒரு பெண்ணும் பிறந்தது அவர்களுக்கு. பெண்ணின் பெயர் காந்திமதி.

அப்போதுதான் அவர்களுடைய வாழ்க்கையில் சனி புகுந்தான். அந்தச் சனி, கைம்மைக் கோலத்துடன் தமையன் வீடு திரும்பிய ருக்மணியின் உருவத்திலே வந்தான். ருக்மணி கைம்மை அடைந்தாலும், ஏராளமான சொத்துக்கு அதிபதியாகத் தன் தமையன் பாஸ்கரனுடைய வீடு வந்து சேர்ந்தாள். தமையன் தங்கையை அன்புடன் ஏற்றுக் கொண்டார். எப்படியும் அவளுடைய சொத்து தம்மைத் தாமே சேரப் போகிறது என்ற காரணமுமிருக்கலாம் அவர் அம்மாதிரி அன்பு காட்டியதற்கு.

ருக்மணி வந்ததிலிருந்து, குடும்ப நிர்வாகம் அவள் கைக்கு மாறியது. பாஸ்கரனுக்கும் அவள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதில் பரம திருப்திதான்.

தங்கை வந்த பின்பும் சாரதாவுடன் எப்போதும் போலவே சௌஜன்யமாகவும் பரிவுடனும் பழகி வந்தார் பாஸ்கரன். அவர் அம்மாதிரி தம் மனைவியுடன் பழகுவது ருக்மணிக்கு மனம் ஒவ்வவில்லை. ஓர் வயது சென்ற மனிதருக்கு இரண்டாந் தாரமாக வாழ்க்கைப்பட்டுக் கணவனின் அன்பு எப்படிப்பட்டது என்பதை உணர்ந்திராத ருக்மணிக்குத் தன் தமையனும் அவர் மனைவியும் சல்லாபமாய் இருப்பது பொறாமையை உண்டாக்கியது போலும்! தன் துரதிர்ஷ்டம் தனக்கு இன்ப வாழ்வு கிட்டாவிடினும், இன்ப வாழ்வு வாழும் தம்பதிகளைக் கண்டு, பொறாமை கொள்ளாது, போற்றி வாழும் பரந்த உள்ளம் படைத்த ஆணோ பெண்ணோ ஆயிரத்தில் ஒருவர் இருப்பது துர்லபந்தான்.

எடுத்ததற்கெல்லாம் சாரதாவிடம் குறையைக் கண்டு கடிந்தாள் ருக்மணி. பணக்கார நாத்தனார் என்ற காரணத்தினால், சாரதா ருக்மணியிடம் அதிகமாய் வாயாடுவது கிடையாது. தன் கணவரே ருக்மணியிடம் பவ்யமாயும் மரியாதையாயுமிருக்கையில், அவளால் வேறு எப்படி இருக்க முடியும்! சிற்சில சமயங்களில், ருக்மணி சாரதா மனம் நோகும்படியாகக் கூடக் கடிந்து கொள்வதுண்டு. சாரதா வாயைத் திறக்க மாட்டாள். அக்கம் பக்கத்துப் பெண்கள் தூபம் போடுவார்கள். "ஏண்டி சாரதா! உன் வீட்டில் உன் நாத்தனாரின் கொடி கட்டிப் பறக்கிறதே! நீ அப்படி விட்டு வைக்கலாமா! உன் கணவர்தான் மௌன சாமியாராக இருக்கிறார் என்றால், நீயாவது அவளுக்குச் சூடு கொடுத்து, அடக்க வேண்டாமா! நீ இப்படிப் பேசாமலிருந்தால், நாளைக்கு உன்னையே இந்த வீட்டிலிருந்து விரட்டியடித்தாலும் அடிப்பாள்" என்று அவர்கள் உபதேசம் செய்தார்கள்.

ஒரு கணம் அவர்கள் கூறியதில் நியாயமிருப்பதாய்த்தான் தோன்றும் சாரதாவுக்கு. மறுகணமே மனம் மாறிவிடும். 'நாம் அவசரப்படக் கூடாது. பொறுமையைக் கடைப்பிடிப்பதுதான் நல்லது. எப்படியும் தன்னால் வழிக்கு வந்து விடுவாள் தன் நாத்தனார். தவிர, தன் கணவருக்கும் ருக்மணியின் சுபாவம் நாளடைவில் வெறுப்பை உண்டு பண்ணி, அவரே அவளைத் திருத்த முயலலாம்' என்ற நம்பிக்கையுமிருந்தது.

ஒருநாள் சாரதா எங்கோ வெளியே சென்றிருந்தாள். குழந்தை காந்திமதியும், அத்தை ருக்மணியும் மட்டுமே வீட்டிலிருந்தார்கள். அப்போது ஏதோ பிடிவாதம் பிடித்ததென்று அந்த இரண்டு வயதுக் குழந்தையை நன்றாய் அடித்து விட்டாள் ருக்மணி.

குழந்தையை அடிக்கும் சமயம், வெளியே சென்றிருந்த சாரதா திரும்பினாள். ருக்மணி குழந்தையை அடிப்பதையும், அது அலறுவதையும் கண்டு அசந்து போய் விட்டாள். தாயைக் கண்ட குழந்தை மேலும் வீறிட்டது.

"அக்கா! ஏன் இப்படிக் குழந்தையை அடிக்கிறீர்கள்!" என்று தனக்கும் மீறிவந்த ஆத்திரத்துடன் கேட்டாள் சாரதா.

"ஆமாம்! அடித்து விட்டேன்! மெதுவாய் ஒரு தட்டுத் தட்டினேன். அதுவும் எதற்காக! தலையை வாரிக்கொள்ள மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தாள் என்பதற்காக. ஏதோ கொன்று விட்ட மாதிரியல்லவா கதறுகிறாள்!"



"என்ன, அக்கா! மெதுவாய்த் தட்டினேன் என்கிறீர்கள்! கானே பார்த்தேன். பலமாகத்தான் அறைந்து விட்டீர்கள். இப்படியா அடிக்கிறது குழந்தையை! உங்கள் வயிற்றில் பிறந்த குழந்தையானால் இப்படி அடித்திருப்பீர்களா!'' தன்னையும் மீறிய ஆவேசத்திலே இப்படிக் கேட்டு விட்டாள் சாரதா.

வந்து விட்டது கோபம் ருக்மணிக்கு. ஆரம்பித்து விட்டாள். ''ஆம்! உன் குழந்தையை நான் கொன்று விட்டேன். நான் ராட்சஸிதான்! என் சொத்தையும் கொண்டு போட்டுக் கொண்டு, உன்னிடம் வார்த்தையும் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று என் தலையில் எழுதியிருக்கிறது'' என்று தலையில் மொட் மொட்டென்று போட்டுக் கொண்டாள். அவள் அந்தச் சொற்ப நேரத்திலே செய்த அட்டகாசம் வீடே அதிர்ந்தது. சாரதா வெலவெலத்துப் போய்விட்டாள். ''ஏன் இவளை இம்மாதிரி கேட்டோம்!'' என்று கூட எண்ணி ஏங்கினாள். விஷயம் விபரீதமாய் முடிந்தது. வீடு திரும்பிய பாஸ்கரன் தன் தங்கை மூட்டைமுடிச்சுக்களுடன் கிளம்பத் தயாராயிருப்பதைக் கண்டு திகைத்தார். காரணம் கேட்டபோது, ருக்மணி மூக்கைச் சிந்திக் கொண்டாள்.

''போதும், அண்ணா! இந்த வீட்டில் இருந்தது போதும். என் சொத்தைப் போட்டுக் கொண்டு சாப்பிடுகிறேன். உன் குடும்பத்துக்கும் செய்கிறேன். செய்யத்தான் எனக்குப் பாத்தியம். சொல்லவோ, குழந்தையை ஒரு தட்டுத் தட்டவோ பாத்தியம் கிடையாது. ஊராரிடம் ஏன் ஒரு வார்த்தை கேட்கணும்! குழந்தையை நான் கொன்று விட்டதாக உன் பெண்டாட்டி எண்ணுகிறாள். எனவே, நான் போகிறேன்'' என்று கண்ணீரைச் சொரிந்தபடியே கூறினாள்.

சிற்சில சமயம் மனிதனுக்கு நியாய அநியாயத்தைச் சரிவரப் புரிந்து கொள்ள முடியாதபடி அறிவுக்குத் திரை போடப் படுகின்றது. முதலில் கேட்கும் வாதம்தான் சரி என்று தோன்றி விடுகின்றது. பாஸ்கரனுக்கும் அப்படித்தான் தோன்றியது. தம் தங்கையின் கூற்றுத்தான் சரி என்று தோன்றிற்று. தம் மனைவிதான் முறை தவறி ருக்மணியிடம் நடந்து கொண்டிருக்க வேண்டும் என்று பட்டது. தங்கை என்ற பாசத்துடன் அவளுடைய சொத்தும் அல்லவா அவருடைய குறிக்கோள்! சாரதாவுக்குப் பேசச் சந்தர்ப்பமே அளிக்கவில்லை. அவளை வாயைப் புடைத்து விட்டார். அதுமட்டுமா! தம் தங்கையை அவமதித்து அவள் மனம் புண்படும்படி நடந்து கொண்டதற்காக, உடனே அவளை ரயிலேற்றிப் பிறந்தகம் அனுப்பி விட்டார். பெண்ணை மட்டும் தம்மிடமே வைத்துக் கொண்டார்.

ருக்மணி இப்படி முடியும் என்று எதிர்பார்க்கவில்லை. தன்னால் அந்தக் குடும்பத்தில் கலகம் ஏற்பட்டு விட்டது என்று ஊரார் கூறுவார்களே என்ற திகில் அவள் மனத்தில் ஏற்பட்டது.

''அண்ணா! ஊரார் ஏதாவது சொல்வார்கள். அவளை அழைத்துக் கொண்டு வந்துவிடு. நான் ஏதோ உன் மனத்தைக் கலைத்து விட்டதாய்ச் சொல்வார்கள்'' என்றாள் மேலுக்கு.

''நீ ஏன் ருக்மணி கவலைப்படுகிறாய்! அந்த நாய்க்குத் திமிர் அதிகம். தனக்கு மட்டுந்தான் தன் குழந்தையின் மீது பிரியம் உண்டு என்ற எண்ணம். நீ என்ன அயலா! உனக்குக் குழந்தையின்மீது பிரியமில்லையா! நீ குழந்தைக்கு எவ்வளவோ செய்து கொண்டு வருகிறாய். இதை எண்ணிப் பார்த்தாளா! அவள் எக்கேடாவது கெட்டுத் தொலையட்டும்! என் தங்கையை அவள் அவமதித்தது என்னையே அவமதித்தது போலத்தான்'' என்று கண்டிப்புடன் பேசினார் பாஸ்கரன்.

பிறந்தகம் வந்து சேர்ந்த சாரதா கண்ணீரும் கம்பலையுமாகத் தன் ஏகாந்த வாழ்க்கையை நடத்தி வந்தாள். குழந்தையைப் பிரிந்த ஏக்கம் அவள் தாயுள்ளத்தைக் கசக்கிப் பிழிந்தது.

தன் கணவனுக்குச் சில கடிதங்கள் எழுதினாள் சாரதா உருக்கமாக. பதில் இல்லை. தன் குழந்தையையாவது சில காலம் தன்னிடம் விட்டு வைக்கும்படி கெஞ்சி எழுதினாள். அதற்கும் பதில் நிரும்பம் கிடையாது. தன் கிழத் தந்தையை அனுப்பித் தனக்காக மன்றாடும்படி கேட்டுக் கொண்டாள். கிழவருக்கு அவமரியாதை கிடைத்ததுதான் மிச்சம். தமது பேத்தியைப் பார்க்கக் கூட கிழவருக்கு அனுமதி கிடைக்கவில்லை.

இந்த நிலையில் திடீரென்று சாரதாவின் தந்தை மாண்டு போனார். தாயை இளம் வயதிலேயே இழந்து விட்ட சாரதா, இப்போது தந்தையும் போய் விடவே, நடுச் சந்தியில் நிற்க நேர்ந்தது. தன் கணவரிடம் சென்று தன்னை மன்னித்து ஏற்றுக் கொள்ளும்படி மன்றாடினாள்.

''உனக்கும் எனக்கும் இனி சம்பந்தம் கிடையாது. உன்னைத் தொட்டுத் தாலி கட்டிய தோஷத்துக்காக, மாதம் இருபது ரூபாய் உன் ஜீவனத்துக்காகத் தர முடியும். குழந்தையை உன் கண்ணில் காட்ட முடியாது. நட!'' என்று கொடுஞ் சொற்களால் அவளை விரட்டினார் பாஸ்கரன். இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு பேசாமல் நின்றாள் ருக்மணி. அவளுக்

குத் தன் தமையனின் சொற்கள் இதமாய் இருந்தன போலும்! வெளியே எட்டிப் பார்த்த குழந்தை காந்திமதியை உள்ளுக்குள் இழுத்துக் கொண்டாள் அவ்வுத்தமி.

நாளடைவில் சாரதாவுக்கும் அவளுடைய கணவருக்கும் தொடர்பு அறுபட்டதாகவே ஆகி விட்டது. தன்னையும் விலக்கித் தன் குழந்தையையும் தன்னிடமிருந்து பிரித்து வைத்த ருக்மணியை அவளால் திட்டாமலிருக்க முடியவில்லை. நல்ல பாலில் ஒரு விஷம் கலந்தாற்போல், தன் அருமைக் கணவருடைய பொன்னான மனத்தைக் கலைத்து, தன் குடும்பத்தில் கலகத்தை ஏற்படுத்தியதுடன், தன் வயிற்றில் பிறந்த குழந்தையையும் தன்னிடமிருந்து பிரிக்கக் காரணமான அச் சண்டாளிக்கு ஆண்டவன் நல்ல கூலி கொடுக்க வேண்டும் என்று வேண்டினாள்.

அன்று சாரதாவின் பெயருக்கு இருபது ரூபாய் மணியார்டர் வந்தது. கணவர் தன் ஜீவனத்துக்காக அனுப்பிய முதல் தொகை என்று அறிந்து கொண்டாள். ஒரு நிமிஷம் சிந்தித்தாள், அதைக் கையெழுத்திட்டு வாங்குவதா வேண்டாமா என்று. ஒரு முடிவுக்கு வந்தாள். பணத்தை மறுத்து விட்டாள். பிறர் வார்த்தையைக் கேட்டுக் கொண்டு நியாயா நியாயத்தைச் சிந்தியாமல் அற்ப விஷயம் காரணமாக, தன் வாழ்வைப் பாழ்படுத்தி, தன் குழந்தையையும் தன் கண்ணில் காட்டாமல் வைத்தவருடைய பணம் தனக்குத் தேவையில்லை என்று முடிவுக்கு வந்தாள் சாரதா. தன் உடலில் வலுவுள்ளவரை, தன் ஒரு ஜீவனுக்கு நேர்மையான முறையில் சம்பாதித்துக் கொள்ள முடியும் என்று தீர்மானித்தாள். ஒரு வீட்டில் சமையல் வேலைக்கமர்ந்து, அதன் மூலம் கிடைக்கும் தொகையைக் கொண்டு, ஜீவனம் நடத்திக் கொண்டு வந்தாள்.

வருஷங்கள் பதினைந்து உருண்டோடின. இந்த நீண்ட காலத்தில் சாரதாவின் உள்ளம், தன் கணவர் சம்பந்தப்பட்ட வரை, வைரமாகி விட்டது. தன் கணவருடன் மீண்டும் வாழலாம் என்ற நம்பிக்கையை அறவே விட்டு விட்டாள். அவள் அபிலாஷை ஒன்றே ஒன்றுதான். தன் வயிற்றில் பிறந்த காந்திமதியை மீண்டும் சந்தித்து, அவளுடன் உறவாடச் சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும் என்பதுடன், அவளுக்குக் கல்யாணம் நடந்து தான் பார்த்து விட்டால், தன் வாழ்வின் லட்சியம் ஈடேறும் என்று கருதினாள். அதன் பின்பு தனக்கு வாழ்வே தேவையில்லை என்றும் நினைத்தாள்.

ஒரு நாள் சாரதாவைத் தேடிக் கொண்டு, அடுத்த வீட்டு அம்மாள் வந்தாள். "சாரதா! இந்த அதிசயத்தைக் கேட்டாயா! நான் உன் கணவருடைய ஊருக்கு ஒரு வேலையாய்ப் போயிருந்தேன். உன் பெண்ணையும் பார்த்தேன். நன்றாய் வளர்ந்து, ராஜாத்தி மாதிரி இருக்கிறாள். கல்யாணம் கூட நிச்சயமா யிருக்கிறதாம். உன்னைப் பற்றிக் கூடச் சொன்னேன். அதற்கு முன்பே உன் விஷயம் முழுதும் தெரிந்து கொண்டிருக்கிறாள் என்று தெரிந்து கொண்டேன், பேச்சு வாக்கில். அவள் பேசியதிலிருந்து, உன்மீது அவளுக்கு வாஞ்சை இருப்பதாகவே தோன்றவில்லை.

"'ஏன்மா பெண்ணே! கல்யாணத்துக்கு உன் அம்மா வர வேண்டாமா! அவளுக்குக் கடிதம் போட்டீர்களா!' என்றேன்.

"'அவள் ஏன் வரவேண்டும்! ஒன்றும் வேண்டாம். என் அத்தை இருக்கிறாள். அதுவே போதும். என் அத்தையை விட அம்மா என்ன சாதித்துவிடப் போகிறாள்! எனக்கு அத்தைதான் எல்லாம்' என்று சொன்னாள். பக்கத்தில் உன் நாத்தனார் இருந்தாள். இதைக் கேட்டுச் சிரித்தாள். எப்படி யிருக்கிறது! உன் வயிற்றில் பிறந்த பெண்ணுக்கு உன்மீது அன்பும் அபிமானமும் காணோம். நீதான் பெண்ணுக்காக உயிரை விடுகிறாய்!" என்று கூறினாள்.

இதைக் கேட்ட சாரதா இடி ஓசை கேட்ட நாகம் போலானாள். தன் வயிற்றில் பிறந்த பெண்ணாவது தன்மீது அபிமானம் வைத்திருப்பாள் என்றுதான் எதிர்பார்த்தாள். அதுவும் பூஜ்யம் என்று இப்போது தெரிந்தது. இருந்தாலும் பெண் பாசத்தை அவளால் விட்டொழிக்க முடியவில்லை. அந்தப் பாசம் அவளை உந்தத், தன் பெண்ணின் மணக் கோலத்தைக் காண விழைந்தது மனம். தவிர, தன் பெண்ணின் போக்கைப் பற்றி மனமும் சமாதானம் கூறியது. "குழந்தையை இரண்டு வயதில் பிரிந்தோம். இந்தப்



பதினைந்து வருஷங்களாக, என்னிடம் வராமல் இருக்கையில், எப்படி என்மீது அவளுக்குப் பாசம் இருக்க முடியும்!"

பெண்ணின் மணக் கோலத்தைக் காண்பது எப்படிச் சாத்தியம்! தன்னை என்னவோ அவர்கள் அழைக்கப் போவதில்லை. பெற்ற தாயை நீக்கிப் பெண்ணுக்கு மணம் முடிக்கப் போகிறார்கள்! இருந்தாலும், திருட்டுத்தனமாகவாவது அந்தக் காட்சியைக் கண்டு மனம் குளிர வேண்டும் என்று அவளுடைய உள்ளம் துடித்தது.

காந்திமதியின் கல்யாணத்துக்குத் தேதி குறிப்பிடப்பட்டது என்று அறிந்து கொண்டாள் சாரதா. முகூர்த்தத்துக்கு இன்னும் மூன்று தினங்களே இருந்தன.

அன்று சாரதா வேலை செய்யும் வீட்டிலே ஏகப்பட்ட தடபுடல். காரணம், அவர்களுடைய நெருங்கிய உறவினர் ஒருவருடைய பிள்ளைக்கு அதே தேதியில் திருப்பதியில் கல்யாணம். அந்தச் சமயம் சாரதாவினால், தன் பெண்ணின் கல்யாணத்தைப் பற்றி எண்ணி ஏங்காமலிருக்க முடியவில்லை. வேலை அவளுக்கு நெட்டி வாங்கியது. இங்கு யாரோ சம்பந்தமில்லாதவர்களுடைய உறவினர் வீட்டுக் கல்யாணத்துக்காக மாடு மாதிரி உழைக்கிறாள். அவள் வயிற்றில் பிறந்த பெண்ணின் கல்யாணத்துக்குத்தான் உடன் இருந்து நடத்தக் கொடுத்து வைக்கவில்லை. போதாக்குறைக்கு, சாரதாவையும் திருப்பதிக்கு வர வேண்டும் என்று அவர்கள் உத்தரவு போட்டுவிட்டார்கள். அவளுக்குப் போக மனமில்லை. வீட்டு எஜமானியம்மாள் உத்தரவுக்கு அவள் பணிந்துதான் ஆகவேண்டியிருந்தது. இல்லாவிட்டால் சீட்டுக் கிழிந்து விடுமே என்ற பயம்!

எல்லாரும் திருப்பதிக்குச் சென்றார்கள். முதல் இரவு மாப்பிள்ளை அழைப்பு சம்பிரமமாய் நடந்தது. சாரதா மட்டும் எதிலும் கலந்து கொள்ளவில்லை. அவள் உள்ளம் அதே சமயம் 'தன் கணவருடைய ஊரிலே நடைபெறும் தன் பெண் காந்திமதியின் மாப்பிள்ளை யழைப்பு வைபவத்தைக் கற்பனை செய்து பார்த்துக் கொண்டிருந்தது! தனிமையில் ஜனநடமாட்டம் இல்லாத ஓர் இடத்தில் அவள் அடைந்து கிடந்தாள்.

சாப்பாடு ஆனதும், வாசலில் யாரோ கூச்சலிட்டுப் பேசும் குரல் கேட்டது. விஷயம் என்னவென்று அறிய வாசல் ஜன்னல் பக்கம் வந்து மறைந்து நின்றாள் சாரதா. என்ன! அவள் காண்பது உண்மையா! என்ன ஆச்சரியம்! அவள் கணவர் நின்று கொண்டிருந்தார். அவருக்கு எதிரில் பிள்ளையின் தந்தை ரௌத்ராகாரத் தோற்றத்துடன் நின்றிருந்தார்.

"என்ன அக்கிரமம் ஐயா! இந்தச் செய்தியை ஏன் முதலில் சொல்லவில்லை! உங்கள் மனைவியை ஏன் தள்ளி வைத்தீர்! சாதாரணக் குடும்பச் சண்டையானால் மனைவியைப் பதினைந்து வருஷம் யாராவது தள்ளி வைப்பதுண்டா! ஏதோ தோஷம் இருந்திருப்பதால்தானே தள்ளி வைத்தீர்! இந்தச் சம்பந்தம் எங்களுக்கு வேண்டாம்."

பாஸ்கரன் தலையைக் கவிழ்ந்து கொண்டு நின்றார். அதைக் கண்ணுற்ற அருகிலிருந்த வேறு சில பிள்ளை வீட்டார்கள் ரகசியமாய்ப் பேசிக்கொண்டவை சாரதாவின் காதில் விழுந்தன.

"மனிதர் பேசுகிறாரா, பார்த்தாயா! விஷயம் உண்மையாயில்லாவிடில், மறுக்க வேண்டாமா!"

சாரதாவினால் மேற்கொண்டு அங்கு வாளாவிருக்க முடியவில்லை. அவள் உள்ளம் அனலிட்ட

புழுவெனத் துடித்தது. பாய்ந்து வாசற் பக்கம் வரத் துணிந்தாள். அந்தத் தருணம் ஓர் அதிசயம் நடந்தது. ஓர் உருவம் பாய்ந்து அங்கு வந்து தோன்றியது. யார் அது! ருக்மணி!

"பெண்ணின் தாய் சாரதாவைப் பற்றி யார் அவதூறாய்ச் சொன்னது! சொன்னவர்கள் வாய் புழுத்து விடும்!" என்றாள் ருக்மணி.

"ஏன்! உங்கள் வட்டாரத்தி லிருந்துதான் இந்தச் செய்தி கிடைத்தது."

"பொய்! சுத்தப் பொய்! அவள் உத்தமி. என் கொடுமையினால்தான் சாரதா பிரிய நேர்ந்தது. நான்தான் அவர்களுடைய குடும்பத்தில் கலகம் ஏற்படக் காரணம். நல்ல சமயத்தில் பகவான் என் கண்களைத் திறந்தார். என் சாரதாவைப் பற்றி இம்மாதிரி அவதூறாய்ப் பேச நான் சகிக்க மாட்டேன். பின்னால் இத்தனை அனர்த்தம் விளையும் என்று தோன்றாமல், என் தமையனுக்கும் சாரதாவுக்கும் பெரும் பாதகம் செய்து விட்டேன். இப்போது புத்தி வந்தது" என்று ஆவேசம் வந்தவள் போலக் கூறினாள் ருக்மணி.

"அக்கா!" என்ற குரல் கேட்டு எல்லாரும் ஏக காலத்தில் திரும்பினார்கள். உள்ளிருந்து பாய்ந்து வந்த சாரதா ருக்மணியை உணர்ச்சி மிகுதியால் அணைத்துக் கொண்டாள்.

"ஆ! சாரதாவா! எப்படி வந்தாய்!" என்று வியப்புப் பொங்கப் பார்த்தார் பாஸ்கரன்.

விஷயத்தை ஏன் வளர்த்த வேண்டும்! பிரிந்த தம்பதிகள் கூடினர். காந்திமதியின் கல்யாணம் ஜாம் ஜாம் என்று நடந்தது.

ஆண்டவனுடைய லீலையை எப்படி வர்ணிப்பது என்றே தோன்றவில்லை சாரதாவுக்கு. யாரோ ஊராருடைய கல்யாணம் என்று நினைத்து வந்த அந்தக் கல்யாணம், கடைசியில் அவள் பெண்ணின் கல்யாணமாக அல்லவா முடிந்தது!

இன்னொரு விஷயமும் பின்னால் தெரிய வந்தது. அதாவது, சாரதாவைப் பற்றிய அவதூறான செய்தியைப் பரப்பியது அவளுடைய பெண் காந்திமதிதான். அவளே அதைத் தன்னுடைய தாயிடம் கூறினாள் ரகசியமாக.

"அம்மா! உன்னை அத்தை எத்தனை கொடுமையாய் நடத்தி யிருந்தாலும், உன் ஒழுக்கத்தைப் பற்றிச் சிலாகித்துத்தான் பேசி வந்தாள். எத்தனையோ பேர் உன்னைப் பற்றிப் பொய் வதந்திகள் கட்டி விட்டார்கள். அத்தை அதைக் கேட்டுச் சகியாமல், அவர்களுக்குச் சூடு கொடுக்கும் முறையில் பேசி யிருப்பதை நான் கேட்டிருக்கிறேன். எனவே, எனக்கு ஒரு யோசனை தோன்றியது. இந்தக் கல்யாண சமயத்தில் நாமே அம்மாவைப் பற்றி வதந்தியைக் கிளப்பி விட்டால் கல்யாணம் தடைப்படும் நிலை ஏற்படும். அப்போது, அத்தை ஆத்திரத்துடன் அதை மறுப்பாள். அத்துடன் பழைய கோபமெல்லாம் மாறி, பழைய படியே உன்னை அழைத்துக் கொள்வார்கள் என்று நம்பினேன். முக்கியமாக நீ இல்லாமல் என் கல்யாணம் நடக்க எனக்கு இஷ்டமில்லை. அதற்காகத்தான் இப்படி அக்கப்போர் கிளப்பினேன். நான் நினைத்தபடியே எல்லாம் நடந்திருக்கிறது. இப்போதுதான் என் உள்ளம் நிறைந்திருக்கிறது" என்றாள் காந்திமதி உணர்ச்சிப் பெருக்குடன்.

காந்திமதியின் கற்பனை விபரீதமானதாயிருப்பினும், ஓர் நன்மையை உத்தேசித்து, அம்மாதிரி அவள் வதந்தி கிளப்பியது சரிதான் என்று தோன்றியது சாரதாவுக்கு. அவள் அம்மாதிரி அக்கப்போர் கிளப்பியிராவிடில், தன் நாத்தனாரின் மனம் மாற வழி ஏது! தான் மீண்டும் தன் கணவருடன் சேர்ந்து வாழத்தான் சந்தர்ப்பம் ஏது!



9. புலன் விசாரணை

பூஜை வேளையில் கரடி வந்து புகுந்த கதையாகப் போலீஸ்காரன் வந்து நிற்கவே, அவனைக் கண்டதும் ஜகதீஷுக்கு உண்டான கோபத்துக்கு ஓர் எல்லையில்லை. போலீஸ்காரனிடத்தில் பதவிசும் நாகரிகமும் மரியாதையும் காணக்கூடிய பொருள்களா? வாசற்படியில் வந்து நின்ற போலீஸ்காரன் கன கோபமான குரலில், "ஜகதீஷ் என்பது யாருடைய பெயர்?" என்று கேட்டான்.

"ஏன்? என்னுடைய பெயர்தான் ஜகதீஷ். என்ன விசேஷம்?" என்று கடுமையே உருவான குரலில் கேட்டான் ஜகதீஷ்.

குடும்பப் பாங்கின் பெருமையை மனத்தில் கொண்டு போலீஸ்காரர்களிடம் பழகப் போனால் அது விபரீதமாகத்தான் முடியும். அடக்கமாகப் பேசி விஷயத்தை விளக்க முயன்றால், இலேசில் அவர்கள் காதில் ஏறாது. யார் யாரிடம் எப்படி எப்படிப் பழகினால் காரியம் கை கூடுமோ, அப்படி அப்படித் தானே பழக வேண்டும்? போலீஸ்காரர்களின் கவனம் பண்பிலே செல்வதில்லை. சிற்சில சமயம் அவர்கள் அநாகரிகத்தின் அவதாரமாகவேகூடக் காட்சி அளிக்கிறார்கள்.

ஜகதீஷின் கோபத்தைக் கண்ட போலீஸ்காரனுக்கும் கொஞ்சம் கோபம் வந்துவிட்டது. "என்ன ஆள் அப்பா நீ! நீயும் ஒரு மனுஷன் மாதிரி! எத்தனை நாழிகையாகக் கதவை இடித்துக் கொண்டிருக்கிறேன்! காதில் வாங்கிக் கொள்ளாமல், வாயைத் திறந்து வார்த்தைகூடச் சொல்லாமல் உட்கார்ந்திருக்கிறாயே! வாசலில் யார் நின்று கொண்டிருக்கிறார்கள், தெரியுமா? இன்ஸ்பெக்டர் ஐயா வந்து வெகு நேரமாக நின்று கொண்டிருக்கிறார்!" என்றான்.

அதைக் கூறியவன் அப்படியே வாசலில் நிற்கவில்லை. விடுவிடென்று உள்ளே நுழைந்தான். அவனுக்குப் பின்னாலேயே இன்ஸ்பெக்டரும் நுழைந்தார். அருகிலேயே ஒரு நாற்காலி கிடந்தது. தமது சொந்த நாற்காலி போன்ற சுவாதீனத்துடன் அதைத் 'தர, தர' வென்று இழுத்துப் போட்டுக் கொண்டு அவர் உட்கார்ந்தார். இன்ஸ்பெக்டர் நல்ல ஆஜானுபாகுவானவர். உயரத்துக் கேற்ற பருமனும் பருமனுக்கேற்ற காம்பீர்யமும் அவரிடத்தில் குடி கொண்டிருந்தன. போலீஸ் இலாக்காவில் உத்தியோகம் பெற வேண்டும் என்றால் அதற்கான பல தகுதிகள் வேண்டும் அல்லவா? அவை யனைத்தும் அவரிடம் ஒருங்கே அமையப் பெற்றிருந்தன. உயரமும் அந்த உயரத்துக்கேற்ற மிடுக்கும் அவரிடம் தாண்டவமாடிக் கொண்டிருந்தன.

கால்களில் கன லாகவமாக அவர் காக்கிப் பட்டைகளைச் சுற்றி யிருந்தார். வட்ட வடிவமான வெள்ளிப் பித்தான்கள் அவர் காக்கிச் சட்டைக்கு எடுப்பாக அமைந்திருந்தன. அவர் அதிகாரி என்பதைப் பறை சாற்றும் முறையில் அவை தோற்றமளித்தன. அவர் தமது மார்பை முன்னுக்குக் கொண்டு வந்து மிடுக்காக நிற்கும் பழக்கத்தை நன்றாக ஏற்படுத்திக் கொண்டிருந்தார். அதிகாரமும் ஆதிக்க மனப்பான்மையும் அவரை ஆட்கொண்டிருந்தன என்பதை அவருடைய பருத்து முன்னுக்கு நின்ற வயிறு வேறு தெரிவித்துக் கொண்டிருந்தது. வெள்ளிப் பில்லை வைத்துத் தைத்த தொப்பி அவருடைய அதிகாரத்துக்கு ஆக்கம் அளிக்கும் தோரணையில் காட்சி அளித்தது. அடர்ந்து கரு கருவென்று வளர்ந்திருந்த அவருடைய மீசையின் முனைகள் நன்றாக முறுக்கி விடப்பட்டிருந்தன. கண்களின் கருவிழிகள் கொஞ்சம் மேலேறி அவரிடம் குடி கொண்டிருந்த அதிகார வெறி எத்தகையது என்பதை எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தன.

"ஜகதீஷ் என்பது உன் பெயர்தானே?" என்று வெள்ளிப் பூண் போட்ட தமது தடியைச் சுற்றிய வண்ணம் கேட்டார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

"ஆமாம். அதுதான் ஒரு தடவை சொல்லி விட்டேனே!" என்றான் ஜகதீஷ் ஆத்திரம் தொனிக்கும் குரலில்.

"ஒரு தடவை என்ன? எத்தனை தடவை கேட்கிறேனோ, அத்தனை தடவையும் சொல்ல வேண்டும்...ஆமாம், உன் வீட்டில் எத்தனை பேர் இருக்கிறீர்கள்?" என்று அதிகாரத்தை விட்டுக் கொடுக்காமல் அதே மிடுக்குடன் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"எத்தனை பேர் இருந்தால் என்ன? நீங்கள் என்ன ஜனசங்கியை எடுக்கப் போகிறீர்களா?" என்று கேட்டான் ஜகதீஷ்.

"ஜன சங்கியையா? அதைக் காட்டிலும் மேலான வேலை இது! உன் வீட்டில் உள்ளவர்கள் எல்லோரையும் என் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்த வேண்டும், தெரிந்ததா?" என்றார் இன்ஸ்பெக்டர்.

கோகிலா நின்ற வண்ணமே அவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்தாள். பெண்களுக்கு மத்தியில் சென்று விட்டால், அதிகாரிகளுக்குத் தங்களுக்குள்ள அதிகாரத்தை முழுவதும் காட்ட வேண்டும் என்ற எண்ணம் ஏனோ தோன்றி விடுகிறது? இந்த இன்ஸ்பெக்டரும் அதற்கு விதிவிலக்கானவர் அல்லவே! எனவே, அடிக்கொரு தடவை கோகிலாவைப் பார்த்துக் கொண்டு ஜகதீஷை அதட்டி உருட்டி அடக்க ஆரம்பித்து விட்டார். பள பளக்கும் தமது பூட்ஸுகளைக் காட்டி, பள பளக்கும் தமது கண்களைக் காட்டி, பள பளக்கும் தமது வெள்ளிப் பில்லையைக் காட்டிக் கோகிலாவின் கருத்தைக் கவர முயன்றார் இன்ஸ்பெக்டர். அதனால் ஜகதீஷிடம் எத்தனையோ கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்த பொழுதிலும், அவருடைய கவனம் முழுவதும் கோகிலா தம்மைக் கவனிக்கிறாளா, இல்லையா என்பதைக் கவனிப்பதிலேயே சென்றிருந்தது.

"என் வீட்டில் நான் ஒன்று, என் மனைவி இரண்டு, என் பையன் மூன்று ஆக மூன்று பேர் இருக்கிறோம்!" என்றான் ஜகதீஷ். அப்பொழுது அவனுடைய கோபம் கொஞ்சம் அடங்கியிருந்தது.

"உன் மனைவி எங்கே?"

"இதோ இருக்கிறாளே!"

"இவள்தான் உன் மனைவி என்பதற்கு என்ன அத்தாட்சி?" என்று கம்பீரமே உருவான குரலில் ஒரு கேள்வியைக் கேட்டுத் தூக்கி வாரிப் போடும்படி செய்தார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.



இந்த மாதிரி ஒரு கேள்வி கேட்கப்படலாம் என்ற எண்ணமே ஜகதீஷுக்குக் கனவில் கூட எழவில்லை. எனவே, அவன் கோகிலாவை ஒரு முறை பார்த்தான். அதே சமயம் அவளும் அவனைப் பார்த்தாள். கண்கள் கலந்ததும் இருவருக்குமே அடக்க முடியாத சிரிப்பு வந்து விட்டது.

"இவள் என் மனைவி என்பதற்கு இதைக் காட்டிலும் வேறு என்ன அத்தாட்சி இருக்க முடியும்?... ஆமாம், இவள் இல்லையென்று மறுத்து விட்டால், அப்புறம் வேறு அத்தாட்சி என்னிடம் இருக்க முடியாதுதான்!" என்றான் ஜகதீஷ், தனக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு.

ஏளனம் நிறைந்த பார்வையில் கோகிலா இன்ஸ்பெக்டரைச் சுட்டு விடுபவள் போலப் பார்த்தாள். அதைக் கண்ட இன்ஸ்பெக்டர் மீசையை இன்னும் ஒரு தடவை கொஞ்சம் அழுத்தி ஒரு முறுக்கு முறுக்கி விட்டார்.

"இவர்களைத் தவிர உன் வீட்டில் வேறு யாருமே மனிதர்கள் கிடையாதா? இல்லையென்று நீ ஆணையிட்டுக் கூறுவாயா?"

என்று அதிகாரத் தோரணையோடு கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"இன்ஸ்பெக்டர்வாள்! நீங்கள் ரொம்ப ரொம்ப மேலே பேசுகிறீர்கள். உங்களுக்கு இந்த மாதிரியெல்லாம் கேட்கச் சிறிதும் உரிமை கிடையாது. இம்மாதிரி ஏதாவது அதிகப் பிரசங்கித்தனமாகத் தாங்கள் ஏதுவும் மேலே பேசினால், நான் வீட்டை விட்டுப் பலவந்தமாகத் தங்களை வெளியேற்றும்படி நேரிடும். ஆமாம், சொல்லிவிட்டேன்!" என்றான் ஜகதீஷ் வெகு அழுத்தமான குரலில்.

அவனுடைய சொற்களைக் கேட்டதும் இன்ஸ்பெக்டரின் குரல் கொஞ்சம் இறங்கியது; நாடி சிறிது தளர்ந்தது. இருந்தாலும் அதிகாரத்தையும் மிடுக்கையும் அவர் அவ்வளவு சீக்கிரம் விட்டுக் கொடுத்துவிட முடியுமா?

"இதோ பார்! நீ குற்றம் இழைத்திருக்கிறாயா, அல்லது இழைக்கப் போகிறாயா என்பது எனக்குத் தெரியாது. இதைச் சோதனையிட்டுப் புலன் விசாரித்துக் கண்டுபிடிப்பதற்காக நான் இங்கே வந்திருக்கிறேன். இனிதான் தவறு ஏற்படப் போகிறது என்றால், அது ஏற்படாமல் தடுக்க வேண்டியது என் கடமை. தெரிந்ததா?" என்றார்.

"நான் என்ன தவறு செய்து விட்டேன், எனக்கே தெரியாமல்? அதை முதலில் சொல்லுங்கள்!" என்றான் ஜகதீஷ்.

"நீ ஒரு பெண்ணைக் கடத்திக் கொண்டு வந்து உன் வீட்டில் ஒளித்து வைத்திருக்கிறாய். அவளை அழைத்துக் கொண்டு எங்கேயாவது கம்பி நீட்டிவிடத் திட்டமிட்டிருக்கிறாய்!" என்றார் இன்ஸ்பெக்டர்.

அதைக் கேட்டதும் ஜகதீஷின் குரல் உயர்ந்தது. "இன்ஸ்பெக்டர்! என்ன சொல்கிறீர்கள்?" என்று ஆத்திரத்துடன் ஆரம்பித்தவன் தன்னை ஒருவாறு அடக்கிக் கொண்டு குரலைத் தாழ்த்தி, "சார்! நீங்கள் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள். நான் நாதியற்ற ஒரு அநாதைப் பெண்ணுக்கு என் வீட்டில் இடம் அளித்திருக்கிறேன். அவ்வளவுதான். அவளை அழைத்துக் கொண்டு எங்கேயாவது ஓடுவது என்ற எண்ணம் எனக்கு இருந்தால், என்னுடைய மனைவி அதற்கு இடம்கொடுப்பாளா? அல்லது அந்தப் பெண்ணை என் வீட்டிலேயே என் 'மனைவிக்கு எதிரிலேயே நான் கொண்டு வந்து வைத்துக் கொள்ளத்தான் முடியுமா?" என்று கேட்டான்.

"வாஸ்தவம். நீ சொல்வது உண்மையான வார்த்தைதான்! இருந்தாலும் நீ இடம் கொடுக்க வேண்டிய காரணம்...?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"காரணம் என்ன? மனிதனின் மனத்தில் இயல்பாக ஏற்படும் இரக்கம்தான். வேறு எதுவாக இருக்க முடியும்? அவள் ஆதரவற்று அநாதையாகப் பசியினால் வாடித் தெருத் தெருவாகத் திரிந்து கொண்டிருந்தாள். அந்த நிலையைக் காண எனக்குச் சிறிதும் சகிக்கவில்லை. அதனால் அவள் மீது இரக்கம் கொண்டு..."

"ஓகோ! இரக்கம் கொண்டா அவளைக் கொண்டு வந்து வைத்துக் கொண்டாய்?



அழகான பெண் பிள்ளை ஒருத்தியைக் கண்டு விட்டால் இரக்கம் மட்டுமா ஏற்படும்? இன்னும் என்னவெல்லாமோ ஏற்படுமே!'' என்று குறும்பாகச் சிரித்துக் கொண்டே சொன்னார் இன்ஸ்பெக்டர்.

நல்ல வேளையாக அப்பொழுது ஊஞ்சலில் வேறு ஒரு பொருளும் இல்லை. இருந்திருந்தால் ஜகதீஷ் அதனாலேயே இன்ஸ்பெக்டரின் தலையை ஒரு முறை நன்றாகப் பதம் பார்த்திருப்பான்.

இன்ஸ்பெக்டர் அதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. அவனுக்கு உபதேசம் வேறு செய்ய ஆரம்பித்து விட்டார்: "இம்மாதிரி ஈவு இரக்கம் எல்லாம் இந்த நாளில் சரிக் கட்டி வராது. இது போல் ஏராளமான பெண்கள் பிச்சை யெடுத்துப் பிழைத்து வருகிறார்கள். அவர்களுக் கெல்லாம் இடம் கொடுத்து ஆக்கம் அளிக்கக் கூடாது. தயவு தாட்சிண்யம் காட்டி அடைக்கலம் அளிக்க முன் வந்தால் இத்தகையவர்களின் கும்பல் ஈசல் போல் அதிகரித்து விடும். அப்புறம் இடம் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கும் கதையாக முடிந்துவிடும்!'' என்றார்.

குற்றம் கண்டு பிடிப்பதற்கும், கண்டு பிடித்த அந்தக் குற்றத்தை மெருகேற்றி வெகு அழகாக வெளியிடுவதற்கும் போலீஸ் இலாக்காவின் சட்டதிட்டங்கள் மிக அருமையாக அமைக்கப் பெற்றிருக்கின்றன. போலீஸ் இலாக்காவின் சட்ட திட்டங்களில் மாபெரும் வேதாந்தத்துக்கு ஒப்பான நுண்ணறிவு நிறைந்திருக்கிறது. வாழ்வாவது மாயம், சாவாவது திண்ணம் என்று வேதாந்தம் கூறுகிறது. போலீஸ் வேதாந்தமும் அதையேதான் கூறுகிறது. இந்த உலகம் பொய். இந்த உலகத்தில் உள்ள அத்தனை மனிதர்களும் பொய்யர்கள். இதுதான் போலீஸ் இலாக்காவின் முதல் முழு நம்பிக்கை. ஆனால் அதன் அந்த நம்பிக்கையே முழுப் பொய் என்று அதனிடம் யார் சொல்வது? எப்படிச் சொல்வது? இதுதான் இன்றும் தீராத வேதாந்தப் பிரச்னையைக் காட்டிலும் பெரிய வேதாந்தப் பிரச்னையாக இருக்கிறது!

"இன்ஸ்பெக்டர்வாள்! நாளைக்கே நீங்கள் இப்படியும் சொல்லலாம் அல்லவா? அதாவது உலகத்தில் உள்ள அத்தனை பிச்சைக்காரர்களுக்கும் உன்னால் காசு கொடுத்து உதவ முடியாத வரையில் ஒரு பிச்சைக்காரனுக்கு மட்டும் காசு கொடுத்து உதவுவது என்பது மகா பாவம். இப்படி நீங்கள் சொன்னால் அது எங்கேயாவது இலேசில் நடக்கக் கூடிய காரியமா?'' என்று குத்தலாகக் கேட்டான் ஜகதீஷ்.

"எனக்கு அதெல்லாம் தெரியாது. அந்த விஷயம் வேறு. இந்த விஷயம் வேறு. இது இப்படித்தான்!'' என்று பதிலளித்தார் இன்ஸ்பெக்டர்.

"இந்த விஷயத்தில் போலீஸ் தலையிட என்ன இருக்கிறது என்று தான் எனக்கு விளங்க வில்லை. நான் அடைக்கலம் அளித்திருக்கும் பெண் விவரம் தெரியாதவள் அல்ல; நல்லது கெட்டது எது என்பதைப் புரிந்து கொள்ளும் வயது வராதவள் அல்ல. அதனால் இது சம்பந்தமாக நான் தங்களுக்கு இவ்வளவு தான் சொல்ல முடியும்!'' என்றான் ஜகதீஷ்.

"அது சரி! நீ சொல்வதற்கு அத்தாட்சி என்ன? அவள் பிறந்த தேதி, மாதம், வருஷம் எல்லாம் நீ குறித்து வைத்திருக்கிறாயா? அப்படிக் குறித்து வைத்திருந்தால் நீ குறித்து வைத்திருப்பது நம்பகமானது தான் என்பதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது?'' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

அத்தாட்சிக்கு அத்தாட்சி கொண்டு வா வென்றால் அவன் எங்கே போவான், பாவம்! எனவே, பெருத்த யோசனையில் ஆழ்ந்து விட்டான். அப்பொழுதுதான் அவனுக்கு இந்த உலகத்தில் எது உண்மையென்று சொல்லப்படுகிறது என்பது சரியாகப் புரிந்தது. இந்த உலகத்தில் உண்மை யென்று சொல்லப்படும் உண்மைக்கும் உண்மையான உண்மைக்கும் உள்ள வேறுபாடும் அவனுக்கு அப்பொழுது தான் விளங்கியது. சாட்சியங்களும் சட்டங்களும் சேர்ந்து பின்னும் மாய வலைதான் இந்த உலகத்து உண்மை என்பதையும் அவன் நன்றாக உணர்ந்தான். சட்டம், சாட்சியம் ஆகியவற்றின் கையில் மாட்டிக் கொண்டு உண்மை என்ன பாடு படுகிறது என்பதும் மின்னல் வெட்டும் நேரத்தில் அவனுக்கு வெட்ட வெளிச்சமாகி விட்டது.

எனவே, ஜகதீஷ், "சரி! அப்படியானால் உங்கள் எண்ணம் என்ன? நான் என்ன செய்ய வேண்டும்? என்னிடத்தில் நீங்கள் கேட்பது போன்ற அத்தாட்சிகளோ சாட்சிகளோ கிடையாது!'' என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பதில் சொன்னான்.

"வீணில் பேசி வார்த்தையை வளர்த்து வானேன்? அடைக்கலம் அளித்திருக்கும் அந்தப் பெண்ணை அவள் வழியே போக விடு. அப்புறம் நான் உன்னைப் போலீஸின் புலன் விசாரணையிலிருந்து தப்ப வைத்து விடுகிறேன்!'' என்றார் இன்ஸ்பெக்டர்.

"அவளை விரட்டி விடவா சொல்கிறீர்கள்? மானமாக வாழ அவளுக்கு வழி வகை உங்களால் செய்து கொடுக்க முடியுமா? பசி தீர அவள் உண்டு உடுத்தி வாழ வேண்டும். இந்தப் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்வதா யிருந்தால் சொல்லுங்கள். நான் இப்பொழுதே அவளை அனுப்பி வைக்கிறேன்!'' என்றான் ஜகதீஷ்.

"போலீஸ் இலாக்கா சத்திரம் கட்டிச் சோறு போடுவதற்காக ஏற்பட்டதில்லை. உனக்கு எதற்கு இந்த வீண் வம்பும், தும்பும்? பேசாமல் போவாயா?...... இந்த வழக்கிலிருந்து தப்பி விடுபட வேண்டும் என்று தோன்றினால், பேசாமல் நான் சொல்வதைக் கேள், ஒரு வழி சொல்லுகிறேன்!'' என்றார்

இன்ஸ்பெக்டர். அவருடைய முகத்தில் ஆசையும் அதிகாரச் சிக்கல்களும் ஒன்றோடு ஒன்று போரிட்டுக் கொண்டிருக்கின்றன என்பது அப்பொழுது ஜகதீஷுக்கு மிகத் தெளிவாகத் தெரிந்தது.

தூரத்தில் நின்று அத்தனையையும் கவனித்துக் கொண்டு நின்ற போலீஸ்காரன், "எனக்கும் வேறு ஏதாவது கிடைக்க வேண்டும்!" என்று கூறிக் கையைப் பிசைந்தான். அவனுடைய அந்த வாக்கியம் அவனுடைய எண்ணத்தை மட்டும் அல்ல; இன்ஸ்பெக்டர் பேசியதன் கருத்து என்ன என்பதையும் நாசூக்காக வெளியிட்டு விட்டது.

'எனக்கும் வேறு ஏதாவது கிடைக்க வேண்டும்!' என்று சொன்ன போலீஸ்காரனின் வார்த்தைகளையோ, 'நான் சொல்வதைக் கேள், ஒரு வழி சொல்லுகிறேன்!' என்று கூறிய இன்ஸ்பெக்டரின் வார்த்தைகளையோ புரிந்து கொள்ள ஜகதீஷுக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. டெபுடி கலெக்டராக உத்தியோகம் பார்த்தவனுக்கு இதெல்லாம் கூடவா புரிந்து கொள்ள முடியாது?

அப்பப்பா! இந்த அதிகாரம் என்பது எந்த எந்த விஷயத்தில், எந்த எந்தச் சூழ்நிலையில் எப்படி எப்படியெல்லாம் கெட்டுச் சீரழிகிறது! தன்னிடம் சிக்கிக் கொண்டவன் செல்லாக் காசுக்குக்கூட விதியற்றவன் என்று தெரியும் வரை ஆட்சி பீடத்தில் உள்ளவர்களின் அதிகாரங்கள் விலைதான் போகின்றன! வரும் வரும்படியை வரப் பற்றிக் கொள்வதில் அவர்கள் கை தேர்ந்தவர்களாகத்தான் திகழ்கிறார்கள்.

"இன்ஸ்பெக்டர்வாள்! தாங்கள் என்னை மறந்து விட்டீர்கள் என்று தோன்றுகிறது. ஆனால் நான் தங்களை மறக்கவில்லை!" என்று சொன்ன ஜகதீஷ், "சில வருஷங்களுக்கு முன் லஞ்சம் வாங்கியதாக உங்கள் மீது ஒரு வழக்குத் தொடரப் பட்டதே, நினைவிருக்கிறதா?" என்று கேட்டான்.

ஜகதீஷ் உத்தியோகத்தில் இருந்த காலத்தில் இதே இன்ஸ்பெக்டருக்கு எதிராக வழக்கு விசாரணை செய்வதற்காக நியமிக்கப் பட்டிருந்தான். அப்பொழுது இந்த இன்ஸ்பெக்டரின் சார்பில் ஜகதீஷிடம் எத்தனை எத்தனையோ சிபாரிசுக் கடிதங்கள் மலை மலையாக வந்து குவிந்தன. தெரிந்தவர்களும் தெரியாதவர்களும், அறிந்தவர்களும் அறியாதவர்களும் அவனிடம் நட்புரிமை பாராட்டிக் கொண்டு வந்தனர். பெண் மணிகள் சார்பில் இந்த இன்ஸ்பெக்டரைத் தப்ப வைக்க வேண்டிக் கோகிலாவிடம் தோழமை பாராட்டிக் கொண்டு வந்த பெண்மணிகளுக்கும் ஒரு கணக்கு இல்லை. சிறிய பெரிய அன்புக் காணிக்கைகள் அவர்கள் வீட்டில் வந்து குவிந்தன. போலீஸ் தரப்பில் பயமுறுத்திப் பல சாட்சியங்கள் தயாரிக்கப்பட்டன. இத்தனை முயற்சிகள் செய்ததன் பலனாக இன்ஸ்பெக்டர் குற்ற



"நாய் வியாபாரம் செய்தீர்களே! என்ன ஆச்சு?"
"என்ன ஆச்சா? கையைக் கடித்து விட்டது. நிறுத்தி விட்டேன்!"

மற்றவர் என்று நிரூபிக்கப்பட்டார். எப்படியோ தப்பினால் போதும் என்ற நிலைமையில் விடுதலை பெற்றும் வந்து சேர்ந்தார். ஜகதீஷுக்கு அவர் லஞ்சம் நிச்சயமாக வாங்கினார் என்ற நம்பிக்கை பரிபூர்ணமாக இருந்தது. இருந்தாலும், அந்த வழக்கை அதிகமாகக் கிளறாமல் போனால் போகிறது என்று விட்டு விட்டான். தலைக்கு வந்தது தலைப் பாகையோடு போயிற்று என்ற ரீதியில் இன்ஸ்பெக்டர் வந்த விபத்திலிருந்து தப்பினார். மலைபோல் வந்தது பனிபோல் விலகி விட்டது. ஆனால் அந்தச் சம்பவம் அவருக்கு அச்சத்தை வருவிப்பதற்குப் பதிலாக அச்சமின்மையை அதிகமாக உண்டு பண்ணிவிட்டுப் போய் விட்டது. அதுதான் அதிசயத்திலும் அதிசயம்.

"அதுபோல் எத்தனையோ வழக்குகளும் விசாரணைகளும் நடந்து முடிந்து விட்டன. ஆனால் அவற்றினால் இந்த இன்ஸ்பெக்டர் ஐயாவை எள்ளளவும் அசைக்க முடியவில்லை!"–அகந்தை தலைக்கேற வெகு முறுக்காகப் பதில் சொன்னார் இன்ஸ்பெக்டர்.

அவருடைய ஞாபக சக்தி அவ்வளவு மோசமானதில்லை, ஜகதீஷைப் புரிந்து கொள்ள முடியாமல் போய் விடுவதற்கு? இப்பொழுது ஜகதீஷ் ஏதாவது பட்டம் பதவியில் இருந்தால் அல்லவா அவர் அவனைப் பொருட்படுத்துவதற்கு? ஜகதீஷ்தான் எல்லோரையும் போல ஒரு சாதாரண மனுஷ்யன்* ஆகி விட்டானே! அவனால் அவரை என்ன செய்துவிட முடியும்? அந்தத் திமிர்தான் அவரை அவ்வாறு பேசுமாறு தூண்டி விட்டது.

"உம், இவ்வளவு தூரத்துக்கு ஆகி விட்டதா? என்னிடமே லஞ்சம் வாங்கக் கூடிய அளவுக்கு உனக்குத் துணிச்சல் பிறந்து விட்டதா? போ, வெளியே போ!

இங்கிருந்து வெளியே போ!'' என்று வெறி பிடித்தவன் போல் காட்டுக் கத்தலாகக் கத்த ஆரம்பித்து விட்டான் ஜகதீஷ்.

''அந்தப் பெண்ணை என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டுக் கொண்டே இன்ஸ்பெக்டர் எழுந்தார்.

''அவன் என் வீட்டில்தான் இருக்கிறான்; என் வீட்டில்தான் இருப்பாள். அதைப் பற்றி நீ கேட்க வேண்டியது அநாவசியம்!''

''அப்படியானால் நீ உன் குற்றத்தை ஒப்புக் கொள்கிறாயா?'' என்று கேட்டார் போலீஸ் இன்ஸ்பெக்டர்.

''இதில் ஏதாவது குற்றம் இருக்குமானால் கட்டாயம் ஒப்புக் கொள்கிறேன். உன்னால் எத்தனை முடியுமோ, அத்தனை தண்டனையும் கொடு. நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளத் தயார்!'' என்றான் ஜகதீஷ்.

''உத்தியோகம் போயும் அதன் வெறியும் மயக்கமும் இன்னும் தணிய வில்லையே! இருக்கட்டும். இந்த வழக்கை ஜோடித்துத் தான் ஆக வேண்டும். அப்பொழுதுதான் ஐயாவுக்கு மயக்கம் தெளிந்து மூளை சரியாகும்!'' என்றார் ஆட்சி பீடத்துக்குப் பிரதிநிதியான இன்ஸ்பெக்டர். அடுத்த கணமே அவர் அங்கே சிறிதும் தயங்கி நிற்காமல் வேகமாக வெளியேறி விட்டார்.

''என்ன?''

அநாவசியமான அந்த வீண் வார்த்தைகளை ஜகதீஷால் அதற்கு மேல் பொறுக்க முடிய வில்லை. ஆத்திரம் எல்லை மீறி விட்டது. ஊஞ்சலிலிருந்து எழுந்து வெகு வேகமாக இன்ஸ்பெக்டரையும் போலீஸ்காரனையும் துரத்திக் கொண்டு பின்னாலேயே ஓடினான். அதற்குள் அவர்கள் பாதிப் படிக்கு மேல் இறங்கி யிருந்தார்கள். ஜகதீஷ் பலமாக அறைந்து கதவைத் தாளிட்டான். அப்பொழுதும் அவனுக்கு ஆத்திரம் அடங்க வில்லை. சாத்திய கதவை ஓங்கிக் காலால் ஒரு உதை உதைத்தான். அப்புறம் திரும்பி வந்து ஊஞ்சலில் முன்போலவே உட்கார்ந்து கொண்டான். அடுத்த நிமிஷமே மறுபடியும் தலையணையில் தலையைப் புதைத்துக் கொண்டு விட்டான்.

அப்பொழுது அவனுடைய முகம் ரத்தமாகச் சிவந்து விட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் கண்ணிமைகள் மூடிக் கொண்டன. கோப மிகுதியால் அவன் பற்களை 'நறநற' வென்று கடிக்கும் சப்தம் வேறு கேட்டது.

பக்கத்து அறையில் வாசற் படியருகில் நின்ற வண்ணமே ராதா 'அங்கே நடந்த சம்பாஷணை முழுவதையும் காதால் கேட்டுக் கொண்டிருந்தான்; காட்சி அனைத்தையும் கண்களால் பார்த்துக் கொண்டும் இருந்தான். அவளால் அதற்குமேல் பொறுக்க முடிய வில்லை. விசித்து விசித்து அழத் தொடங்கி விட்டான்.

அவளுடைய அழுகையைக் கேட்டதும் ஜகதீஷின் முகம் 'ஜிவு ஜிவு' என்று ரத்தம் ஏறி மேலும் சிவந்தது. அவன் தலையைத் தூக்கிக் கோகிலாவை ஒரு முறை பார்த்தான். பிறகு, ''போய் ராதா ஏன் அழுகிறான் என்று பார்! அவளை அழச் சொல்லாதே! சமாதானப் படுத்தித் தைரியமாக இருக்கச் சொல்லு. ஜகதீஷின் வீடு என்று ஒன்று இருக்கும் வரையில் அவளை யாரும் எங்கும் போகச் சொல்ல முடியாது. தைரியமாயிருக்கலாம் என்று சொல்லு!'' என்றான்.

''ஆமாம். நீங்கள் சொல்வது நியாயம் தானே? இந்தக் கோகிலாவின் வீட்டிலிருந்து அவளை யார் வெளியே போகச் சொல்ல முடியும்?'' என்றான் கோகிலா.

தான் அந்த வீட்டில் கணவனுக் கேற்ற மனைவியாக இருப்பது நினைவுக்கு வரவே, கோகிலா கன உரிமையுடன் அப்படிப் பேசி விட்டாள். கணவன் விருப்பம் அறிந்து நடப்பது தானே மனைவியின் கடமை? கணவன் கீறிய கோடு தாண்டாப் பத்தினியாக அவள் ராதாவைச் சமாதானப் படுத்தித் தேறுதல் கூறும் நோக்கத்துடன் பக்கத்து அறைக்குச் சென்றான்.

ஆனால் கோகிலா சொன்ன அந்த வாக்கியத்தின் பொருள் ஜகதீஷுக்கு வேறாகவே பட்டது.

கோகிலா என்ன சொன்னான்? இந்தக் கோகிலாவின் வீட்டிலிருந்து அவளை யார் வெளியே போகச் சொல்ல முடியும் என்று தானே? ஆமாம், அப்படியானால் வீடு யாருடையது? அவனுடையதா, அவளுடையதா? அவனுடையதாக எப்படி ஆகமுடியும்? அவளுடையதுதான்! அப்படியானால் கோகிலா தன் வீடு என்று சொன்னது சரிதானே? சரியில்லை என்று யார் சொல்வது?—இத்தனை கேள்விகளையும் அவன் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்; தனக்குத்தானே பதிலும் சொல்லிக் கொண்டான்.

இந்த வீட்டில் எனக்கு என்ன உரிமை இருக்கிறது? குடும்பத்தை நடத்துவது முழுவதும் கோகிலா. அப்படி யிருக்கும் பொழுது இந்த வீட்டையும் அவளுடையது என்று தானே கூற வேண்டும்? ராதாவைக் கோகிலாவின் வீட்டில் கொண்டு வந்து வைக்க எனக்கு ஏது உரிமை? ராதா என்ன? நான் கூட இந்த வீட்டில் இருக்க வேண்டும் என்றால் கோகிலாவின் தயவைக் கொண்டுதான் இருக்க முடியும்! அவளுடைய தயவு இல்லை யென்றால் நாங்கள் இருவருமே இந்த வீட்டில் எப்படி இருப்பது?

இது போன்ற எண்ணங்கள் அவன் உள்ளத்திலே இடம் பெற்று வளர்ந்தன. இந்த எண்ணங்கள் வளர வளர அவன் மூளையே குழம்பத் தொடங்கி விட்டது. உள்ளத்திலே பயங்கரப் புயல் உருவாகியது.

புயலில் சிக்கிய கப்பலின் வேகம் எல்லை மீறி அதிகரித்து விடுவதுதானே இயல்பு? ஆனால் அந்த வேகம் நிரந்தரமானதல்ல; சிறிது நேரமே நிலைத்து நிற்கக் கூடியது. கப்பலினால் அந்த வேகத்தைத் தாள முடியா விட்

டால், ஒன்று யந்திரம் கெட்டுப் பழுதாகி விடும். அல்லது கப்பல் மூழ்கிப் போய்விடும். இருதயத்தின் நிலைமையும் இதுவேதான். இருதயத்தில் புயல் மூண்டு விட்டால், ஆளை ஆட்டி அலைத்து விடும்.

சிறிது நேரத்துக் கெல்லாம் கோகிலா வந்து நீங்கள் இருவரும் என் வீட்டில் இருக்கக் கூடாது என்று சொன்னால், அதைக் கேட்காமல் இருப்பதற்குத் தன்னிடம் மிருக பலத்தைத் தவிர வேறு என்ன இருக்கிறது என்ற எண்ணம் ஜகதீஷின் மனத்திலே முளைத்தது. அம்மாதிரிச் சந்தர்ப்பம் நேர்ந்து விட்டால் ஆண்மகன் என்று சொல்லிக் கொள்ளும் ஒருவன் தன்மிருக பலத்தைக் கையாளுவதைத் தவிர வேறு வழியே கிடையாதா? நியாயமான தர்க்கம் வேறு எதுவுமே கிடையாதா? இந்த எண்ணம் முளைத்து அவன் மனத்தை இல்லாத வாறெல்லாம் அலை பாய வைத்து விட்டது.

இதே சமயம் கோகிலா அவன் அறைக்குள்ளே பிரவேசித்தாள். சிந்தனை வெறியில் பித்தனாக லயித்திருந்த ஜகதீஷுக்குத் தான் கற்பனை கண்டு கொண்டிருந்த கேள்வியைக் கேட்கவே கோகிலா அவ்வளவு சீக்கிரம் வந்து விட்டாளோ என்று தோன்றியது. உடனே அவன் சட்டென்று அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான்.

கோகிலா வாய் திறக்காமல் நின்று கொண்டிருக்கும் பொழுதே ஜகதீஷுக்குத் தன் மனத்தில் கொண்டிருந்த கற்பனையின் பிரகாரம் அவள் கேட்டு விட்டதாகப் பிரமை மூண்டது. எனவே, அவளை நினைத்து உரலை இடித்த கதையாக, "அப்படியானால் இது என் வீடு இல்லை என்று தானே கூறுகிறாய்?" என்று உள்ளக் கொதிப்புடன் கேட்டான்.

கோகிலா அந்தக் கேள்விக்கு ஒன்றும் பதில் அளிக்க வில்லை. அவள் அவசரம் அவசரமாகப் பறந்து விழுந்து கொண்டு ஜகதீஷின் அருகில் சென்று அவன் தலையில் கை வைத்துப் பார்த்தாள். தலை ஓரேயடியாகக் கொதித்துக் கொண்டிருந்தது.

ராதாவுக்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்லிச் சமாதானப் படுத்திய பின் அவளுக்கு அங்கே இருப்புக் கொள்ள வில்லை. இன்ஸ்பெக்டர் புறப்பட்டுச் சென்ற பொழுது ஜகதீஷுக்கு வந்த கோபத்தை அவள் நேரில் தன் கண்களாலேயே கண்டிருந்தாள் அல்லவா? எனவே, அவன் மனத்தைக் குளிரச் செய்யும் நோக்கத்துடன் அங்கே வந்தாள். "என்ன இருந்தாலும் நீங்கள் இவ்வளவு அதிகமாகக் கோபித்துக் கொண்டிருக்கக் கூடாது. மூளை எப்படிக் கொதித்து விட்டது. பாருங்கள்!" என்றாள்.

"நான் என்ன, உன்னிடமா கோபித்துக் கொண்டேன்?" என்று கேட்டான் ஜகதீஷ்.

"என்னிடம் கோபித்துக் கொண்டீர்கள் என்று நான் எங்கே சொன்னேன்? இந்த



மணலி ஸ்ரீ சீனிவாச முதலியார், அவர்களின் புதல்வி சௌ: அலர்மேல் மங்கை அம்மாளுக்கும், மாடம்பாக்கம் ஸ்ரீ சம்பந்த முதலியாரின் குமாரர் ஸ்ரீ அண்ணாமலை முதலியாருக்கும் திருமலை திருப்பதியில் 13-6-1954 ஞாயிறன்று விவாகம் விமரிசையாக நடந்தேறியது. முகூர்த்தத்துக்கு ஏராளமான பிரமுகர்கள் வந்திருந்தனர். வாழ்க, மணமக்கள்!

விஷயத்தில் பாவம், அந்த இன்ஸ்பெக்டர் தான் என்ன செய்வார்? யாரோ எழுதி விட்டிருக்கிறார்கள். அவர் விசாரிக்க வந்திருக்கிறார். விசாரிக்க வந்த அவரைக் கடிந்து கொண்டு என்ன பயன்? சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து வேலை செய்ய வேண்டியது தானே அவர் கடமை? சட்டப்படிக் கடமையைச் செய்ய வந்தவரைக் கோபித்துக் கொள்வதனால்...'

"சட்டம்! சட்டமாம், சட்டம்! ஆதரவற்ற அநாதைகளைக் காக்கத் தெரியாத சட்டம் இருந்தென்ன, இல்லாமல் இருந்தென்ன? அந்தச் சட்டத்தின் தலையில் தீயைத் தான் வைக்க வேண்டும்!" என்று ஜகதீஷ் எரிந்து விழுந்தான்.

"சட்டம் கெட்டதாக இருந்தால், அது தானாகத் திருந்துகிறது!"

"சட்டமாவது, திருந்தவாவது? நினைத்துக் கொண்டிருக்க வேண்டியது தான்! இந்தச் சட்டம் யார் மூலம் திருந்தும் என்று நீ எண்ணிக் கொண்டிருக்கிறாய்? ஆட்சி பீடத்துக்குப் பிரதி நிதியான இன்ஸ்பெக்டரை இப்பொழுது பார்த்தாய். நாளைக்கு ஆட்சி பீடத்துக்கு இன்னொரு பிரதிநிதியான மாஜிஸ்திரேட்டைப் பார்க்கப் போகிறாய்! இவர்கள் கையில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் சட்டமாவது, திருந்தவாவது? நானும் சில தீர்ப்புகள் கூறி யிருக்கிறேன். அதனால் நியாயம் என்பது என்ன என்று எனக்கும் கொஞ்சம் தெரியும். நினைவு வைத்துக் கொள்!" என்றான் ஜகதீஷ்.

"அந்தச் சட்டம் திருந்தாமல் எக்கேடு வேண்டுமானாலும் கெட்டுத் தொலையட்டும். ஆனால் மக்கள் திருந்தி விடுவார்கள். சமூகம் சீர்திருந்தி விடும்!" என்றாள் கோகிலா.

"ஜனங்களும் ஆச்சு! சமூகமும் ஆச்சு! ராதாவைப் போன்றவர்களைப் பிச்சை யெடுத்துப் பிழைக்கும் படியான கதிக்குக்

கொண்டு வந்து விடும் ஜனங்களும் சமூகமும் திருந்துவதா? பிச்சைப் பிழைப்பு பிழைத்தாவது மானத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று கருதும் அவளுக்குப் பிச்சை போடாமல், நாலு பேர் நிற்கும் நடுத்தெருவில் அவள் பெண்மைக்குப் பேரவமானம் புரியும் சமூகம் சீர்திருந்துவதா? திருந்தும் என்று எதிர் பார்ப்பது மடத்தனம் அல்லவா? அது மட்டுமா? இரண்டு நாட்கள் இரவு தங்குவதற்கு நான் என் குடிசையில் தங்க இடம் அளிக்க முன் வந்தேன் என்பதற்காக என்னைக் குற்றவாளி என்று குற்றம் சாட்டிக் குறை கூறி என்னைப் பகிஷ்கரித்து விலக்கி வைக்க விரும்பும் சமூகமாவது, சட்டத்தை மாற்றி அமைக்கவாவது? இது எங்கேயாவது நடக்கக் கூடிய விஷயமா? நடக்கும் என்று எதிர்பார்க்கத்தான் கூடிய விஷயமா? என்னைக் கேட்டால் இந்தச் சமூகத்தையும் இந்தச் சமூகத்தின் மீது ஆட்சி செலுத்தும் அரசாங்கத்தையும் எரிமலையில் உருட்டித் தள்ளிப் பொசுக்க வேண்டும் என்று தான் சொல்வேன்!'' என்று ஜகதீஷ் எரிமலையாகச் சீறி வெடித்தான்.

அவ்வளவையும் அமரிக்கையாகக் கேட்டுக் கொண்டிருந்த கோகிலா மிகவும் அடக்கமான குரலில், ''அதே ஆட்சி பீடத்தின் கீழுள்ள சமூகத்தில் தான் நீங்களும் இருக்கிறீர்கள். அத்தகைய சீர்கேடுற்ற சமூகத்தில் வாழும் நீங்கள் அவளுக்கு அடைக்கலம் அளிக்கத் துணிந்தீர்களே! அது என்ன குறைவா? சமூகம் என்றால் அதில் கெட்டதும் நல்லதும் கலந்துதான் இருக்கும். இனி நடப்பதெல்லாம் நல்ல விதமாகவே நடக்கும். நான் சொல்வதை நம்புங்கள். நீங்கள் அடைக்கலம் அளித்தது...!'' என்றாள்.

''அடைக்கலம் அளித்தது நானா, நீயா?''— வேதாளம் முருக்க மரம் ஏறிய கதையாக மறுபடியும் ஜகதீஷ், தான் விட்ட விஷயத்தைப் பற்றிக் கொண்டான்.

''இப்படி இருவரையும் பிரித்துப் பேச வேண்டிய அவசியம் என்ன வந்து விட்டது?'' என்று கேட்டாள் கோகிலா.

''அவசியம் நேர்ந்து விட்டதால் தான் பேசுகிறேன். அது போகட்டும். இதைச் சொல்லு. இந்த வீடு யாருடையது?''

''இதோ பாருங்கள்! என் பெயருக்கு இன்று ஒரு கடிதம் வந்திருக்கிறது. உங்கள் 'கேர் ஆப்' போட்டிருக்கிறது. 'கேர் ஆப்' என்றால் 'மேற்பார்த்து' என்று நீங்கள் தானே எனக்கு அர்த்தம் சொன்னீர்கள்? அதனால் இப்பொழுது நீங்களே சொல்லுங்கள், இந்த வீடு யாருடையது?'' என்று கேட்டாள்.

''இந்த வீட்டில் எனக்கு என்ன இருக்கிறது?'' என்றான் ஜகதீஷ்.

''இந்த வீட்டில் உங்களுக்கு என்ன இல்லை? எது இல்லாவிட்டாலும் ஒரு பொருள் மட்டும் கட்டாயம் இருக்கிறது. அது உங்கள் ஒருவருக்குத்தான் சொந்தம். வேறு யாருக்குமே லவலேசங் கூட சொந்தம் அல்ல!'' என்றாள் கோகிலா சிரித்துக் கொண்டே.

''அது என்ன பொருள்?''

''அந்தப் பொருள் உங்கள் அருகிலேயே தான் இருக்கிறது. ஆமாம், நான் பொய் சொல்லவில்லை. அது உங்கள் அருகிலேயே தான் இருக்கிறது!'' என்று சொல்லிய வண்ணம் கோகிலா மெதுவாக ஜகதீஷின் கையைத் தன்னருகே இழுத்துக்கொண்டாள்.

''என்னெதிரில் இருக்கிறதா? என்னெதிரில் நீ அல்லவா உட்கார்ந்திருக்கிறாய்!''

''ஆமாம். அப்புறம் நீங்களாகவே தெரிந்து கொள்ள வேண்டியது தானே? இந்த வீட்டில் உள்ள வேறு எந்தப் பொருளும் உங்களுக்குச் சொந்தமாயிருந்தாலும் இல்லாவிட்டாலும், இந்தக் கோகிலா உங்களுக்கு மட்டுமே சொந்தமானவள் தானே?'' என்றாள் கோகிலா.

ஒரு கண நேரத்துக்கு ஜகதீஷ் வைத்த கண் வாங்காமல் கோகிலாவையே பார்த்துக் கொண்டிருந்தான். கோகிலாவின் கண்களில் பளிச்சிட்ட மகிழ்ச்சி ஒளி அவனை அப்படியே ஆட் கொண்டு விட்டது; விழுங்கி விட்டது. அடுத்த நிமிஷமே அவன் மெய்ம் மறந்தான். புயல் வீசிக் கொண்டிருந்த அவன் உள்ளத்துக்கு அமைதி கிட்டுவதற்கான அறிகுறி தென்பட்டது. உள்ளத்துப் புயல் அடங்கி அமைதி ஏற்பட்டவுடன் அவனுக்குத் தன் தலையை அசாத்தியமாக வலிப்பதுதெரிந்தது.

அப்பொழுது கோகிலா அவன் கையை ஏந்தித் தன் மடியில் வைத்துக் கொண்டிருந்தாள். அசையாமல் படுத்திருந்த ஜகதீஷுக்கு அதை எடுத்து அப்பால் நகர்த்தி வைக்க மனம் வரவில்லை. ''ஏன், கோகிலா! இன்று எனக்கு இப்படி அசாத்தியமாகத் தலையை வலிக்கிறதே, என்ன காரணமாயிருக்கலாம்?'' என்று கேட்டான்.

கோகிலா உடனே அவன் தலையில் கையை வைத்துப் பார்த்தாள். ''அப்பப்பா! என்ன ஜுரம் அடிக்கிறது. தெரியுமா? நானும் ஒரு பெண் மாதிரி! இதைக் கவனிக்காமல் என்ன என்னவோ பேசிக் கொண்டே இருக்கிறேனே! நான் தலையைப் பிடித்து விடுகிறேன். நீங்கள் கொஞ்சம் கண்களை மூடிக் கொண்டு தூங்கப் பாருங்கள்!'' என்றாள்.

அதைச் சொன்னவள் சட்டென்று அப்படியே குனிந்து அவன் கண்களை முத்தமிட்டாள். அதே சமயம் ராதாவும் விஜயலக்ஷ்மியும் அந்த பக்கமாக வந்தார்கள். வந்தவர்கள் கோகிலாவின் அந்தச் சேஷ்டையைக் கவனிக்கத் தவறவில்லை.

கோகிலாவும் அவர்கள் அதைக் கவனித்து விட்டார்கள் என்பதைக் கண்டு கொண்டாள். அவளுக்கு ஒரே வெட்கமாகப் போய் விட்டது. இருந்தாலும் ஒரு விதமாகத் தன்னைச் சமாளித்துக் கொண்டு, 'வாருங்கள்' என்று அவர்களை வரவேற்றாள். (தொடரும்)


மகிழ்ச்சி அளிக்கும்
உணவு
துஷாரில்
சமைத்தது
Tushar
TUNGABHADRA INDUSTRIES LTD.
KURNOOL
துஷார்
வனஸ்பதி
துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட்,
கர்நூல்.


நான் இப்பொழுது மிகுந்த
தெம்புடன் இருக்கிறேன்—
ஊளைச் சதை
கரைந்த பின்னர்
ஊளைச் சதை கரைவதற்காக நான் "க்ருஷன்" ஸால்ட் உட்கொண்டேன். இரண்டே வாரங்களில் 5 ராத்தல் கனம் குறைந்தது பற்றிப் பெரிதும் மகிழ்வுற்றேன். ஐந்து வாரங்களில் 10 ராத்தல் கனம் குறைந்து விட்டது. க்ருஷன் சிகிச்சைக்கு முன்னர் நான் எப்பொழுதும் அசதியும் மந்தமு முள்ளவளா யிருந்தேன். ஆனால் இப்பொழுதோ மிகுந்த தெம்புடன் சுறு சுறுப்பா யிருக்கிறேன். நான் "க்ருஷன்" கட்சியிலே இருப்பதுடன் எப்பொழுதும் க்ருஷனையே சிபாரிசு செய்வேன்."—K. G.
உட்புற இந்திரியங்கள் சரிவர வேலை செய்யத் தவறும்பொழுது ஜீரணிக்கப்படாத கழிவு பொருள்கள் குடலுக்குள் சேருவதால் சதைக் கோளங்கள் உண்டு பண்ணப் படுகின்றன. குடல்களும், மூத்திர கோசங்களும் சரிவர ஒழுங்காய் இயங்குவதற்கு நன்கு உதவுவதால் "க்ருஷன்" சதைகள் உண்டாவதை தீவிரமாக எதிர்க்கிறது. மெதுவாக, ஆனால் நிச்சயமாக அதிகப்படியான சதை மறைய ஆரம்பிக்கிறது. தினசரி ஒரு சிறு அளவு க்ருஷன் உட்கொள்ளுவது உங்களை மந்தமான, ஊளைச் சதை யுள்ளவரன்றி, வீர்ய மிகுந்த ஒற்றை நாடிச் சரீர முள்ளவராகச் செய்யும்.
"க்ருஷன்" உங்கள் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் உதவுகிறது

வட்ட மேஜை

கஷ்டத்தை அறியுங்கள்

ஒவ்வொரு வருடத்தையும் விட இந்தத் தடவை புத்தகங்களும் நோட்டுகளும் அதிகம். நாலாம் வகுப்புக்கு சுமார் 15 நோட்டுகள், 10 புத்தகங்கள் வேண்டுமாம். அவைகளின் விலையைக் கேட்கும் போதோ நம் வயிற்றில் புளியைக் கரைக்கிறது. பணம் மிச்சப் படுத்தலாமென்று அதே வகுப்பில் படித்த மாணவியிடம் பழைய புத்தகம் வாங்கலாமென்றால், பள்ளிக்கூட உத்தரவு பழைய புத்தகம் வாங்கவும் விற்கவும் கூடாது என்பது. பள்ளியில் உள்ள புத்தகவிற்பனை நிலையம்தான் காரணம். நோட்டுப் புத்தகமும் வெளியில் வாங்கக் கூடாதாம்! பள்ளியிலேயே விற்கும் நோட்டுகளை வாங்க வேண்டுமாம்! நான்காம் வகுப்புக்கே இந்தப் பாடென்றால் மூன்று வது, நான்காவது படிவம் சம்பளம் கட்டி, புத்தகம், நோட்டு இவைகள் வாங்கினால், ஒரு பெண்ணுக்கு வரன் தேடிய சிரமமும், வீடு கட்டுவதிலுள்ள செலவும் சேர்ந்தாற்போல் அநுபவித்த உணர்ச்சி உண்டாகிறது. எங்கள் கஷ்டத்தைக் கொஞ்சம் உணரக் கூடாதா என்று பள்ளித் தலைவியைக் கேட்டால், "எங்கள் பள்ளியில் படித்தால் அப்படித்தான் நடக்கும். வேறு எங்காவது பெண்ணைச் சேர்ப்பதுதானே!" என்கிறார்! இது முறையா! இந்தப் பள்ளியில் பாடம் கற்றுக் கொடுக்கும் முறையை எல்லோரும் உயர்வாகக் கூறுவதால் எங்கள் பெண்களை இங்கேயே சேர்க்க விரும்புகிறோம். நடுத்தரக் குடும்பத்தார் படும் அன்றாடக் கஷ்டங்கள் யாவரும் அறிந்தவை. பணக்காரப் பெண்கள் எப்படியும் பள்ளியில் அவர்கள் கூறியபடி வாங்கி வருகிறார்கள். மனிதர்களுடைய தராதரம் அறிந்து, ஏழைப் பெண்களைப் பள்ளிக்கூடங்களிலுள்ள புத்தகங்களையே வாங்கும்படி நிர்ப்பந்தம் செய்யாமலிருக்கும்படி வேண்டிக் கொள்கிறேன். ஏழைப் பெண்களின் பெற்றோரின் கஷ்டத்தையும் உணர வேண்டும்.

மயிலாப்பூர்
22—6—54

எம். எஸ். ராஜம்மாள்

●

தந்தையின் கடிதம்

இந்த வருடம் ஏப்ரலில் நடைபெற்ற டைப்ரைட்டிங் ஹையர் கிரேடு பரீட்சையில் தோல்வியுற்றவர்களில் நானும் ஒருவன். ஜூன் 20ல "கல்கி" இதழைப் பார்த்து மனம்தேறினேன். இந்தச் சந்தர்ப்பத்தில் என் தந்தையாரிடமிருந்து வந்த கடிதம் பின்வருமாறு:—

"You need not worry about your fail in Typewriting Examination. Please go through 'Kalki' Edition June 20th: - Editor's first Page. It is not that everybody should get a clerk's post in these days..."

இந்த மாதிரியான ஒரு மனோதிடத்தைப் பெற்றோர்களுக்கும் பரீட்சையில் தோல்வியடைந்த என் போன்ற மாணவர்களுக்கும் ஏற்படுத்த முயலும் தங்களுக்கு எங்கள் நன்றி.

ஆனால் ஒன்று. மற்றப் பரீட்சைகள் போல் டைப்ரைட்டிங் பரீட்சையைச் சொல்வதற்கில்லை. ஏனென்றால் எவ்வளவுதான் திறமைசாலியாக இருந்த போதிலும் — அதாவது நிமிஷத்துக்கு 40 வார்த்தைகளுக்கு மேல் டைப் அடிக்கத் தெரிந்தவரானாலும் — பரீட்சை மண்டபத்தில் பரீட்சாதிகாரிகள் கொடுக்கும்—ஒன்றல்ல, இரண்டல்ல — பத்துப் பதினைந்து நிபந்தனைகளைக் கேட்டுக் கை நடுக்கமும் பதட்டமும் அடைகிறார். மேலும், முதல் பேப்பரான, வேகமாக அடிக்கும் பரீட்சையில். பக்கத்தில் குறைந்த பட்சம் 40, 50 மெஷின்கள் வேலை செய்யும் போது பதட்டமடைகிறார். இந்த மாதிரியான நிலையில் R அடிப்பதற்குப் பதில் T யும் V அடிப்பதற்குப் பதில் C யும் அடிக்க நேரிடும். சில எழுத்துகள் பட்டும் படாததுமாக இருக்கும். இந்தச் சமயத்தில் மெஷினும் ஏதாவது சில்லறைத் தகராறு செய்யுமாகில் கேட்க வேண்டியதில்லை. அடுத்த பரீட்சைக்கு அவர் சந்தேகப்படாமல் பணம் கட்ட முடிவு செய்யலாம்.

பள்ளிக்கூடங்களில், உதாரணமாக, எஸ். எஸ். எல். ஸி. வகுப்பில் ஆங்கிலத்தில் முதல் பேப்பர், இரண்டாம் பேப்பர் என இரண்டு பரீட்சைகள் நடக்கும். முதல் பேப்பரில் ஒரு மாணவர் 30 மார்க்கும் இரண்டாம் பேப்பரில் 50 மார்க்கும் வாங்கியிருந்தால் ஆங்கிலத்தில் (50+30=80÷2) =40 என்று சராசரியாகப் போடப்படுகிறது. டைப்ரைட்டிங்கிலும் இந்த முதல் பேப்பர், இரண்டாம் பேப்பர் என்ற பாகுபாடு உண்டு. ஆனால் ஒருவர் முதல் பேப்பரில் 35 மார்க்கும் இரண்டாம் பேப்பரில் 60 மார்க் வாங்கியிருந்தாலும் அவர் தோல்வியடைந்தவர்தான். ஏனெனில் அவர் முதல் பேப்பரில் குறைந்த பட்சம் 40 மார்க்காவது வாங்கியிருக்க வேண்டும்.

டைப்ரைட்டிங் ஸ்தாபனங்கள் நடத்துபவர்கள் சிறந்த மாணவர்களைத்தான் தேர்ந்தெடுத்துப் பரீட்சைக்கு அனுப்புகிறார்கள், ஸ்தாபனத்துக்கு நற்பெயர் ஈட்டுவதற்கு. ஆனால் இந்த மாதிரியான நிலையில் ஐந்து பேருக்கு ஒருவர் தேர்வு பெறுவதே அதிகம். இரண்டு வருடம் மூன்று வருடம் என்று கஷ்டப்பட்டு டைப் பழகியவரின் தலைவிதியைப் பதினைந்து நிமிஷங்களில் நிர்ணயிக்க முயற்சிப்பது அநியாயம். இப்படிப்பட்ட ஒரு பரீட்சைக்கு பத்துத் தடவைகள் படையெடுத்தால் ஒரு வேளை வெற்றி பெறக்கூடும். இதற்குப் பதில் குறுக்கெழுத்துப் போட்டி வழிகளில் முயற்சி செய்தால் ஒரு வேளை குருட்டு அதிர்ஷ்டத்தினால் கிடைக்கலாம்.

சிவகங்கை
25—6—54

என். நா.

●

கிராமத்தில் வேலையின்மை

இந்த வருஷத் திட்டத்தின் முக்கியமான நோக்கங்களில் எல்லாருக்கும் 'முழு வேலை' தேடிக் கொடுப்பது என்பது ஒன்று. வேலையில்லாதவர்கள் கூட்டத்தில் படித்தவர்கள்,— படிக்காதவர்கள், ஏழைகள், நடுத்தர வகுப்பினர்கள், ஆண்கள் பெண்கள் ஆகிய எல்லா வகையினரும் இருக்கிறார்கள்; நகரத்திலும் — நாட்டுப்புறத்திலும் இருக்கிறார்கள். பலர் வேலை தேடித் தரும் ஸ்தாபனங்களில் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள்; அரசியல் வாதிகளின் ஆதரவும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் கிராமத்திலுள்ள ஏழைப் பெண்கள் படிப்பு வாசனை இல்லாமலும், ஸ்தாபிதத் தொழிற் சங்கங்களில் சேராமலும், பலப்பல கிராமங்களிலும் நகரத்தின்

மூலை முடுக்குகளிலும் சிதறித் தனித் தனியாக இருக்கிறார்கள். இவர்களிடையே உள்ள வேலையின்மையைப் போக்க என்ன செய்வது! மகாத்மா காந்தியும் ஆச்சாரியா விநோபாவும் ஒரு நல்ல வழியைக் காட்டி இருக்கிறார்கள். அதுதான் கைக்குத்து அரிசித் தொழில்.

நெல்லைக் கையினால் குத்தித் தீட்டாமல் சாப்பிடுவதால் அரிசியிலுள்ள போஷாக்குப் பொருள்களான வைட்டமின் பி, இரும்பு, பாஸ்பரஸ், உப்புக்கள், கொழுப்பு, புரதம் முதலிய எல்லாம் நமக்குப் பூரணமாகக் கிடைக்கின்றன. அத்துடன் பதினாயிரக்கணக்கான ஏழைப் பெண்களுக்குத் தங்கள் தங்கள் ஊரிலேயே வருஷம் முழுவதும் வேலையும் கூலியும் கிடைக்கும். இந்தத் தொழிலுக்கு ஏராளமான மூலதனம் தேவையில்லை. வேலை நிறுத்தம், கதவடைப்பு, முதலாளி — தொழிலாளி சச்சரவுகள் இல்லை. இது மக்களுடைய ஆரோக்கியத்தை வளர்க்கும் தொழில். மில் அரிசிக்கும் கைக்குத்து அரிசிக்கும் விலை வித்தியாசமும் அப்படி ஒன்றும் அதிகமில்லை.

தொன்று தொட்டு நடந்து வந்த இந்தக் கிராமக் கைத்தொழில் சமீப காலத்தில் வந்த நெல் அரைக்கும் யந்திரங்களால் ஒடுக்கப்பட்டது. தங்கள் கட்சியை எடுத்துப் பேச அரசியல் தலைவர்கள் இல்லாமல், தங்கள் நலத்தைப் பாதுகாக்க வழியும் திறமையும் இல்லாமல் இந்த எளிய கிராமவாசிப் பெண்கள் தவிக்கிறார்கள். படித்து வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்கள் அவர்களுக்கு வேலையும் கூலியும் கொடுத்து, தங்களுக்கும் ஒரு வியாபாரத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இந்த நிலைமையைப் பயன் படுத்திக் கொண்டு தங்களுக்கும், ஏழைகளுக்கும், அரிசி உண்ணும் எல்லா ஜனங்களுக்கும் நன்மை செய்ய, படித்த இளைஞர்கள் ஒவ்வொரு ஊரிலும் முன் வரட்டும். ஒரு கூட்டுறவு ஸ்தாபனமோ அல்லது வேறுவித ஸ்தாபனமோ ஏற்படுத்தி, கூலிக்கோ வியாபாரத்துக்கோ நெல்லைக் கையினால் குத்தி அல்லது அரைத்துக் கொடுத்தால், அந்த நெல்லின் அளவின்மேல் அகில இந்திய கதர் கிராமக் கைத்தொழில் போர்டார் அந்த ஸ்தாபனத்துக்கு மான்யம் கொடுப்பார்கள். வேலையில்லாமையைப் போக்க இது வழியும் சந்தர்ப்பமும் ஆகும்.

காந்தி ஆசிரமம்
22—6—54

வி. ஸ்ரீ. தியாகராஜன்

●

யாருடைய குற்றம் ?

ஜூன் மீ 20-ம் தேதி இதழில் கோவையிலிருந்து மாணவன் ஒருவன் எழுதிய கடிதத்தைப் பிரசுரித்திருக்கிறீர்கள். "தன் விடைகளைத் திருத்திய கொடை வள்ளலின் எழுதுகோலினால் மார்க் 34 என்று எழுதப்பட்டு விட்டதாக" மாணவன் மிக உருக்கமாக எழுதியிருக்கிறான். அக்கடிதத்தைப் பிரசுரித்து நீங்கள் "பரீக்ஷையில் தேர்வதற்கு 35 மார்க்குகள் அவசியம் என்று இருக்கும் போது ஒரே ஒரு மார்க் குறைவாக 34 என்று போடும் விடைத்தாள் பரிசோதகர்களைக் கம்ஸன் முதலான அரக்கர் இனத்துடனே தான் சேர்க்க வேண்டும்" என்று எழுதி யிருக்கிறீர்கள்.

இந்த நிலையில், நான் ஒரு ஆசிரியன் என்ற முறையில் அதைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

அநேகமாக எந்தப் பரீட்சைப் பரிசோதகரும் (Examiner) 33, 34 போன்ற—தேர்வு பெறுவதற்கு ஒன்று அல்லது இரண்டு மார்க் குறைவாக—மார்க்குகளைப் போடுவதே யில்லை. அது போன்று எல்லையில் இருக்கும் மார்க்குகளை எப்படியாவது ஒன்றிரண்டு மார்க்குகளைப் போட்டுப் பரீட்சையில் தேர்வதற்கு வழி செய்து விடுகிறார்கள். பரிசோதகர்களும் மனிதர்கள் தாம்.

மேலும் ஆங்கிலத்தில் இரண்டு பகுதிகள் உண்டு. கடிதம் எழுதிய மாணவன் முதல் தாளில் 45 சத வீதமும், இரண்டாம் தாளில் 23 சத வீதமும் வாங்கியிருக்கலாம். இரு பகுதிகளையும் திருத்தும் பரிசோதகர்கள் வெவ்வேறானவர்கள். ஆதலின் மற்ற பகுதியில் மாணவன் எவ்வளவு மார்க் பெற்றிருக்கிறான் என்று அறிந்து அதற்கேற்ப மார்க் போடுவது என்பது பரிசோதகரால் முடியாத காரியம். இந்த இரு பகுதிகளில் கிடைக்கும் மார்க்குகளின் சராசரி தான் ஆங்கிலத்தில் கிடைத்த மார்க்காகக் கணக்கிடப் படுகிறது. இந்த வேலை சென்னையில் உள்ள அரசாங்கக் காரியாலயத்தில் நடைபெறுகிறது. மார்க்குகளை எடுத்து எழுதும் சிப்பந்திகள் மார்க்குகளைக் கூட்டியோ குறைத்தோ எப்படி எழுத முடியும்! இந் நிலையில் மாணவனுக்கு மார்க் கிடைக்காதது யாருடைய குற்றம்!

இந்தச் சூழ்நிலைகளை யெல்லாம் மாணவன் யோசித்துப் பார்ப்பான் என்று நாம் நினைக்க முடியாது. தோற்ற வருத்தத்தில் ஆங்கிலத்தில் 34 சதவிதம் என்று மட்டும் குறிப்பிட்டு விட்டான். ஆனால் உண்மையில் சரியான தேர்வு பெற ஆங்கிலத்தில் 40 மார்க்குகள் வேண்டும். இந்த 6 மார்க் வித்தியாசம் உண்மையான வித்தியாசம் அல்ல. ஏனெனில் மாணவன் ஆங்கிலத்தில் 34-க்கும் குறைவாகத்தான் மார்க் வாங்கியிருப்பான். மாடரேஷன் போர்டு உதவியினால் ஆங்கிலத்தில் 34 சத வீதம் வாங்கி யிருப்பான். மாடரேஷன் போர்டு அதற்கு மேல் அவனுக்கு உதவி செய்ய முடியவில்லை போலும்.

ஆதலின், இவ்விஷயங்களை யெல்லாம் நிர விசாரித்த பின், உங்கள் அபிப்பிராயத்தை எழுதி யிருக்க வேண்டும்; பரிசோதகர்களைக் கம்ஸன் வர்க்கத்தில் சேர்த்திருக்க வேண்டும்.

பல்லடம்
26—6—54

நாகராஜன்



"இவர் பெரிய நடிகர், ஸார்! இவர் பிச்சைக்கார வேஷம் போட்டுக்கொண்டு மேடையில் வந்தாரானால் பிரமாதமாயிருக்கும். நடிப்புக்கு இவரிடம் பிச்சை வாங்கணும், ஸார்!"

வீட்டிலேயே ஸ்னப்புகளெடுங்கள்... இன்றிரவு!



ஒரு 'கோடக்' காமிராவும் ப்ளாஷ்ஹோல்டரும் இருந்தால் வீட்டிற்குள்ளேயே அழகான ஸ்னப்புகள் சுலபமாக எடுக்க முடியும் — பிரமிக்கத்தக்கபடி மலிவாகவுங்கூட

மழை நாட்களில் 'கோடக்' ப்ளாஷின் உதவியால் வீட்டினுள் படம் பிடிக்க அருமையான சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. படங்கள் எடுப்பதும் மிகச் சுலபம். எக்ஸ்போஷர் மற்றும் வெளிச்சத்தைப் பற்றி கவலையே வேண்டியதில்லை. தற்கால 'கோடக்' காமிராக்களில் அநேகமாக ப்ளாஷ் ஹோல்டரைப் பொருத்தி பித்தானை அழுத்த வேண்டியதே. உங்கள் காமிராவில் ப்ளாஷுடன் சேர்ந்து இயங்கும் ஷட்டர் வசதி இல்லாவிடினுங்கூட, கையிலேயே பிடித்துக்கொள்ளக் கூடிய ப்ளாஷ் ஹோல்டர்களும் கிடைக்கின்றன


ப்ளாஷ் உங்களுக்கு லாபகரம்!

ப்ளாஷ் மிக மலிவானதுங்கூட, காரணம் அம்முறையில் பிடித்தால் நிச்சயமாக சிறந்த படங்கள் எடுக்க முடிகின்றது. பிலிம் வீண் போகாது. தவிர, சந்தேகித்து, அதிகப்படியான படங்கள் பிடிக்க வேண்டாம். ஒரு ப்ளாஷ்பல்பிற்காகக் கொடுக்கும் சில அணாக்களும் ஒரு சிறந்த படம் எடுப்பதற்கான பிலிமின் கிரயமும் தான் உங்களது செலவு (உபயோகிப்பது 'கோடக்' சூப்பர்-XX பிலிமாகவே இருக்க வேண்டும்!). உங்கள் கோடக் வியாபாரியிடம் இன்றே ப்ளாஷைப் பற்றிய விவரங்களை விசாரியுங்கள்.

இந்த விலை நயமான 'கோடக்' காமிராக்களைக் கொண்டு உடல் சிலிர்க்கச் செய்யும் ப்ளாஷ் ஸ்னப்புகள் எடுக்கலாம்!



ஸிக்ஸ்-20 'பிரௌனி' காமிரா மாடல் E க்ளோஸ்-அப் லென்ஸ் மற்றும் கலர் பில்டர் அமையப் பெற்றது. ஒவ்வொரு பிலிம் சுருளிலும் எட்டு ஆல்பம் சைஸ் படங்கள். விலை ரூ. 84/- ப்ளாஷ்ஹோல்டர் ரூ. 22/12 கேஸ்: தோல் ரூ. 8/-. கான்வாஸ் ரூ. 8/-



'கோடக்' ஜூனியர் II காமிரா சிறந்த உயர்தரமான மாடல் f/6.3 லென்ஸ் மற்றும் அநேக ஷட்டர் வேகங்களையுடையது நயமான விலை. ஒரு சுருளில் எட்டு படங்கள். விலை ரூ. 115/- ப்ளாஷ்ஹோல்டர் ரூ. 31/4 கேஸ் ரூ. 9/8

இவ்விலைகளில் விற்பனை வரி சேராது

இதர அநேக தினுசுகளும் கிடைக்கும்!

உங்கள் கோடக் வியாபாரியிடம் குறைந்த பக்ஷம் ரூ. 17/8 விலையிலிருந்து இன்னும் எத்தனையோ தினுசு 'கோடக்' காமிராக்களும், அவைகளுக்கேற்ற 'கோடக்' ப்ளாஷ்ஹோல்டர்களும் கிடைக்கும். இன்றே போய்ப்பாருங்கள்.

கோடக் லிட். (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்

K. 9904

மருக்கொழுந்து மணம்



டி. எஸ். கோதண்டராமன்

"மீனு!...ஏ, மீனு!...ஓ, மீனு!"

"............"

"ஏ, மீனு! ஏ, மீனாட்சி! நான் கூப்பிட றது காதில் விழ வில்லையா, உனக்கு?..."

"சஹஸ்ரநாமத்துக்கு இன்னும் எத்தனை அர்ச்சனைகள் பாக்கி?" என்று புன்சிரிப் புடன் கேட்டுக்கொண்டே அவள் வந்தாள்.

என்னுடைய எரிச்சல் பொங்கிக் குமுறிக் கொண்டு கிளம்பியது.

"உன் தலை! மேஜை அறையில் இருந்த பேனா எங்கே தொலைந்து போயிற்று? வீட்டில் இருப்பது இரண்டு பேர்கள்தான். சாமான் வைத்தால் வைத்த இடத்தில் இருப்பதில்லை. என்னுடைய பேனாவைத் தொடாதே என்று உனக்கு எத்தனை தடவை சொல்லி யிருக்கிறேன்!..."

"ஆயிரத்து நூற்று இருபத்தேழு தடவை சொல்லி யிருக்கிறீர்கள்!..."

"இந்தா, விளையாட்டெல்லாம் இப்போ வேண்டாம். பேசாமல், இப்படிப் பேனா வைக் கொண்டு வந்து கொடு. நான் கடிதம் எழுதியாகணும்!"

"நான் என்ன மந்திரக்காரியா, தொலைந்து போன உங்கள் பேனாவைக் கொண்டு வர?"

"என்னது? அப்படியானால், பேனாவை நீ எடுக்க வில்லையா?"

"இல்லை, இல்லை, இல்லை. போதுமா?"

"பின்னே பேனா எங்கே போயிற்று?"

"உங்கள் பேனாவுக்கு இறக்கை ஏதும் இருந்ததாக எனக்கு ஞாபகமில்லை. எங்கும் பறந்து போயிருக்காது! வைப்பது ஓரிடமும் தேடுவது வேறு இடமுமாக இருந்தால் பேனா எப்படிக் கிடைக்கும்?... சட்டைப் பையில் பார்த்தீர்களா?"

நான் பதில் பேசவில்லை. நாற்காலியி லிருந்து எழுந்து சட்டை மாட்டப்பட்டிருந்த 'கோட் ஸ்டாண்டை' நோக்கி நடந்தேன். மீனாவும் பேனாவைத் தேடும் பாவனையில் மேஜை அறையைத் துழாவினாள்.

இரண்டு நிமிஷங்கள் சென்றன. 'கொல்' லென்ற சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த் தேன். கையில் பேனாவுடன் மீனா சிரித்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள்!

எனக்கு மிகவும் வெட்கமாகப் போய் விட்டது. நாற்காலியில் வந்து அமர்ந்தேன்.

"குழந்தைகள் மாதிரி அரை அங்குலப் பென்ஸில்கள் ஐம்பதை டிராயரில் சேமித்து வைத்திருக்கிறீர்கள்! அவைகளின் அடியில் புகுந்து கொண்டு விட்டது உங்கள் பேனா. என்ன இருந்தாலும் உங்களுக்கு மகா அவ சரம்! இந்த லட்சணத்தில் கோபம் வேறு பீறிட்டுக் கொண்டு வருகிறது!" என்றாள்.

தோல்வி மனப்பான்மை உள்ளத்தை நிறைத்துக் கொள்ளவே பதில் ஏதும் எழ வில்லை. பரிதாபமாக மீனாவை ஒரு பார்வை பார்த்துவிட்டு, அவளிடமிருந்து பேனாவைப் பெற்றுக்கொண்டு நண்பனுக்குக் கடிதம் எழுத உட்கார்ந்தேன்.

கடிதம் எழுதுவதில் மனம் பதியவில்லை. மீனாவைச் சுற்றி வட்ட மிட்டது!

மூன்று வருடங்களாகி விட்டன, அவளுக்கும் எனக்கும் பிணைப்பு ஏற்பட்டு. இது வரை அவளை நான் அனாவசியமாக மூவாயிரம் தடவைகள் கோபித்துக் கொண்டிருப்பேன். ஆனால், அவள்? அவசியமேற்பட்ட பொழுதெல்லாம் கூட என்மேல் கோபம் கொண்டதில்லை. ஏன், பொய்க் கோபம் கூடக் கொண்டதில்லை!

கோபத்தில் நான் தாறுமாறாகக் கத்துவேன். ஆனால், அவளுடைய அமைதியான, ஆழமான மௌனத்துக்கு முன், என்னுடைய கத்தல் பொத்தலாகி விடும்!

இந்த மீனாவைத் தவிர வேறு எவளேனும் ஒரு சோனா என் வாழ்க்கையில் எதிர்ப்பட்டிருந்தால், அவள் வாழ்க்கை முழுதும் இடர்ப்பட்டிருப்பாள். என் வாழ்வும் நரகமாக அமைந்து விட்டிருக்கும்......

நான், 'பெண் பார்க்க'ச் சென்றிருந்த படலம் என் அகக் கண்களில் தோன்றியது.

அவள், அப்பாவையும் என்னையும் நமஸ்கரித்து விட்டு எழுந்தபோது என்னை ஒரு மோகனப் பார்வை பார்த்தாள்.

ஒரு தடவை அவளைப் பார்த்ததுமே நான் அவளை மணக்கச் சம்மதித்து விட்டேன்.

மீனாவிடம் அப்படி என்ன வசீகர சக்தி இருந்தது? இது எனக்கே இன்று வரை புரியாத புதிர்! அவள் அப்படி ஒன்றும் பேரழகி அல்ல. ஆனால் அமைதியான முகம்.

என் எதிரே, இருபது அடி தூரத்தில் அமர்ந்து கொண்டு அவள் பாடினாள். அவள் பாட்டு என்னைச் சொக்க வைக்கவில்லை; என்னைக் கிறுகிறுக்கச் செய்யவில்லை. சுமாராகத் தான் பாடினாள். ஆனால், அவள் உச்சரித்த வார்த்தைகளில் இருந்த தெளிவு, ஒவ்வொரு வார்த்தைக்கும் அவள் கொடுத்த மதிப்பு இவைகளில் ஏதோ புதைந்து கொண்டிருந்தது.

முடிவாக நான் அவளுக்கு மாலையிட்டேன்.

நானும் அவளும் கணவனும் மனைவியுமாகி ஏறக் குறைய மூன்று ஆண்டுகள் இன்பகரமாக ஓடி மறைந்து விட்டன.

காரியாலயத்திலிருந்து சோர்வுடன் வீட்டுக்கு வருவேன். கையில் காப்பி டம்ளருடன் அவள் என் அறைக்கு வருவாள். சோர்வு நீங்கட்டுமே என்பதற்காகப் பரபரப்புடன் கையை நீட்டிக் காப்பியை வாங்குவேன். ஆனால், அதை நான் முழுவதும் அருந்தும் வரையில் அவள் சும்மா யிருக்க மாட்டாள். நாங்கள் பிரிந்திருந்த எட்டு மணி நேரத்துக்குள்ளாக எட்டு ராமாயணக் கதைகளை எனக்காக வைத்திருப்பாள்.

இது போன்று எவ்வளவோ!......

** ** **

“என்ன, கடிதம் எழுதி விட்டீர்களா?” பின்னால் நின்றபடி மீனா கேட்டாள்.

நான் மௌனமாகத் திரும்பிப் பார்த்தேன். மீனாவும் என்னை நோக்கினாள். அவள் வாய் மூடியிருந்தது. உதடுகள் மட்டும் அங்கு மிங்கும் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தன. அதில் தான் என்ன கவர்ச்சி!

“ஏன், சுவாமிகளுக்கு இன்னும் கோப நிஷ்டை கலைய வில்லையா?” - என்று கேட்டு விட்டுக் கலீரென்று சிரித்தாள்.

என் மௌனம் மறைந்து விட்டது.

“போக்கிரி, உன் முன் கோபமும் ஆத்திரமும் வெறும் பிரமைதான்!” என்றேன், மெல்லச் சிரித்தவாறே.

“சரி, உணவருந்தும் நேரமாகி விட்டது. தயவு செய்து சமையலறைக்கு எழுந்தருளுங்கள்!...” என்றாள்.

சிந்தனையில் சிக்குண்டிருந்த என் மனத்தைச் சீர்ப்படுத்திக் கொண்டே சமையலறையை நோக்கிச் சென்றேன்.

மூன்று நாட்கள் ஓடி விட்டன.

மாலை வேளை. ஓய்வு நேரம். மீனாவும் அருகே இருந்தாள். மாதத்தின் கடைசி நாட்கள். கையில் பணமில்லாததால் நாங்கள் வெளியே எங்கும் செல்லவில்லை.

“அன்றைய தினம், பேனாவைக் காணவில்லை என்று சத்தம் போட்டீர்களே?...” என்று மீனா ஆரம்பித்தாள்.

“அதற்கு என்ன இப்போது?” என்றேன். என் முகத்தில் சிறிது அசடு தட்டியது.

“பேனா எங்கிருந்தது தெரியுமா?”

“ஊம். மேஜை அறையில் இருந்தது...”

“அதுதான் இல்லை. என்னுடைய கையிலேயே இருந்தது!”

“மேஜை அறையிலிருந்து தானே நீ எடுத்துக் கொடுத்தாய்?”

“அன்று உங்களை நன்றாக ஏமாற்றி விட்டேன்! பால் கணக்கு எழுதுவதற்காக உங்கள் பேனாவை எடுத்துச் சென்றிருந்தேன். நீங்கள் என்னைக் கூப்பிட்டதுமே எதற்காகக் கூப்பிடுகிறீர்கள் என்பது தெரிந்து விட்டது. ஆகவே, என்ன தந்திரம் செய்து உங்களை ஏமாற்றலாம் என்று எண்ணிக் கொண்டே தான் உங்கள் அறைக்குள் நுழைந்தேன்......”

“உம்...”

“சும்மா மேஜையில் தேடுவது போலப் பாசாங்கு செய்துவிட்டு, என் கையிலிருந்த பேனாவை உங்களிடம் நீட்டினேன். நீங்களும் அதை நம்பி விட்டீர்கள்!”

“அடி, கள்ளி” என்றேன் நான். வேறு எந்த பதிலும் எனக்குத் தோன்றவில்லை!

** ** **

இதுவரை மீனாவுக்கு நானாக எதுவும் வாங்கிக் கொடுத்ததில்லை. கல்யாணமான புதிதில்கூட நானாக அவளுக்குச் சோப்பு, சீப்பு, பவுடர், வாசனைத் தைலம் எதுவும் இது வரையில் வாங்கித் தந்ததில்லை.

ஆனால், இந்த மாதம் சம்பளம் வாங்கியதும் என் மனத்தில் ஒரு சிறு சலனம். மூன்று ஆண்டுகளாக ஏற்படாத ஒரு புது உணர்ச்சி. இந்த உணர்ச்சிக்கு வித்து, சில தினங்களுக்கு

முன் நடந்த பேனா விவகாரம்தான்! அந்தச் சம்பவத்துக்குப் பின் என் இதய உரைகல்லில் மீனா இன்னும் ஒரு மாற்று அதிகமாகவே காணப்பட்டாள்.

கணக்கற்ற தடவைகள் அவளிடம் நான் கோபித்துக் கொண்டிருக்கிறேன். அதற்குப் பதிலாக அவள் எனக்கு நிர்மலமான புன்னகைதான் தந்திருக்கிறாள்.

மனிதன் என்ற முறையில் அவளிடம் எனக்கு நன்றி இருக்க வேண்டாமா?

இதுதான் அந்தப் புது உணர்வு.

'அந்த நன்றியை, ஒரு கணவன் தன் மனைவிக்குத் தெரிவிக்கும் நன்றியை எப்படிக் காட்டுவது?' என்ற எண்ணத்துடன் நேதாஜி சாலையில் நடந்து கொண்டிருந்தேன்.

நூற்றிருபது ரூபாய்கள், நோட்டுகளும் சில்லறைகளுமாக என் சட்டைப் பையில் குலுங்கிக் கொண்டிருந்தன. வரப்போகும் முப்பது நாட்களையும் அந்தப் பணத்தைக் கொண்டுதான் ஓட்டியாக வேண்டும்!

சாலையில் நடக்கும் ஆயிரக் கணக்கானவர்களுள் நானும் ஒருவனாக நடந்து கொண்டிருந்தேன். அப்போது எதிரே வந்த வியாபாரியின் தட்டிலிருந்த வாசனைத் தைலச் சீசாக்கள் தடுத்து நிறுத்தின.

ஆமாம், மீனாவுக்கு வாசனைத் தைலம் வாங்கிக் கொடுத்தாலென்ன? பாவம், எப்போதோ அவளுக்கு வாங்கிக் கொடுத்தது! வரவு செலவுகளைச் சரிக்கட்ட முடியவில்லை என்பதனால் வாசனைத் தைலம் வாங்குவதை அவள் எப்போதோ நிறுத்தி விட்டாள்.

இன்றையதினம், நல்ல வாசனைத் தைலம் ஒரு பாட்டில் வாங்கிச் சென்று கொடுத்தால்* அவள் எவ்வளவு சந்தோஷப்படுவாள்?

மேலும், இதைவிடச் சிறந்த பரிசாக அவளுக்கு என்னால் வேறு எதை வாங்கிக் கொடுக்க முடியும்?

ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாக, பெரிய கடை ஒன்றினுள் நுழைந்தேன். உயர்ரக வாசனைத் தைலத்தை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்தேன்.

"மீனா! ஏ, மீனா! இதோ பாரேன்..."

என்னுடைய பரபரப்பை உணர்ந்தவளாக, "என்னது?" என்று கேட்டுக் கொண்டே மீனாட்சி ஓடி வந்தாள்.

"இந்தா, இதை உனக்காக வாங்கினேன்." என் வார்த்தைகள் ஆனந்த மிகுதியால் பூரித்துப் போயிருந்தன.

மீனா அந்தத் தைலத்தைக் கையில் வாங்கிக்கொண்டாள்.

"வாசனைத் தைலமா?" என்று கேட்டாள்.

"ஆமாம்."

"என்ன விலை?"

"இரண்டரை ரூபாய்!..."

"என்ன, இரண்டரை ரூபாயா?..."

திகைப்பில் அவள் வாயும் கையும் விரிந்தன. நல்லவேளையாக வாசனைத் தைலத்தை நான் பிடித்துக் கொண்டேன்.

"அப்படியானால், ஏன் இதை வாங்கி வந்தீர்கள்?" என்று கேட்டாள்.

"உனக்குப் பிடிக்குமே என்று தான்..."

"...திடீரென்று உங்களுக்குத் தோன்றியதாக்கும்! உடனே இரண்டரை ரூபாயைக் கரியாக்கி வாசனைத் தைலம் வாங்கி விட்டீர்கள். இல்லையா?..."

எனக்கு மயக்கம் வரும் போலிருந்தது. இவள் என் மீனாவே தானா? அவளுக்குக் கோபமே வராதே!

"ஏன் பேசாமலிருக்கிறீர்கள்?...ஏதடா, இரண்டரை ரூபாயை வீணாக்குகிறோமே என்ற எண்ணமே இதை வாங்கும்போது உங்களுக்கு ஏற்படவில்லையா?..."

"மீனா, நீ ரொம்பவும் சந்தோஷப்படுவாய் என்று எதிர்பார்த்துத்தான் இதை வாங்கினேன். உனக்குப் பிடிக்காவிட்டால் அதைத் தனியே வைத்துவிடு."

"தனியே வைத்துவிட்டால், இரண்டரை ரூபாய் பணம் திரும்பக் கிடைத்து விடுமாக்



கும்... நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு காலணாவின் மதிப்பையும் இன்னும் தெரிந்து கொள்ளவில்லையே? உங்களுடைய அரிய உழைப்பின் பயன் அல்லவா அந்தப் பணம்? என் தலைக்குத் தடவிக் கொள்ளும் வாசனைத் தைலமாக மாற்றிக் கொள்ளும் அளவுக்கு உங்கள் பணம் மதிப்பிழந்து விட்டதா?..."

நான் மௌனமாக நின்றேன். உள்ளே சென்ற அவள், கையில் காப்பியுடன் வந்தாள்.

காப்பி அருந்திய பின்னும் மனத்தின் ஆயாசம் தீரவில்லை. சேச்சே, நான் நினைத்தது என்ன, நடந்தது என்ன? மீனாவைச் சந்தோஷப் படுத்தப் போக, என் செயல் இன்று வரை நான் அறியாத புதிய உருவில்-வேண்டத் தகாத உருவில்-அவளை எனக்குக் காட்டி விட்டதே...

** ** **

இரவு வந்தது. ஒரு வழியாக உணவை முடித்துக் கொண்டு விட்டு என் அறைக்கு வந்து படுக்கையில் சாய்ந்தேன். தூக்கம் ஒன்றுதான் என் ஆயாசத்தைப் போக்கவல்ல மருந்தாக எனக்குப் பட்டது.

கண்களை மூடிக் கொண்டேன். கோழித் தூக்கத்தில் ஆழ்ந்திருந்த சமயம், காலடியில் விம்மல் சத்தம் கேட்டது.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. திகைத்தவனாக, "யாரது?" என்றேன்.

அவ்வளவுதான். கட்டிலின் கீழ் உட்கார்ந்திருந்த மீனா, என் கால்களைப் பிடித்துக் கொண்டு கதற ஆரம்பித்து விட்டாள்.

"என்ன மீனா, இது? ஏன் இப்படி அசடாட்டமா அழுகிறாய்?"

அவள் ஒரு முறை அழுதுதான் ஓய்ந்தாள்.

"சாயங்காலம் உங்கள் மனத்தை ரொம்பவும் புண்படுத்தி விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்..."

"சேச்சே, அதனாலென்ன மீனா? நான் உன்னைக் கோபித்துக் கொள்ள உரிமையிருக்கும் போது, அதே உரிமை உனக்குக் கிடையாதா?...மேலும், உன்னைக் கேட்காமல் தைலம் வாங்கியது என் தவறுதானே?..."

"இல்லை, இல்லை. இரண்டரை ரூபாய் பணம் அனாவசியமாகச் செலவழிந்து விட்டது என்ற எண்ணம் என்னை நிலை தடுமாறச் செய்து விட்டது. தவிரவும், அப்பா இந்த மாதம் ஐந்து ரூபாய் அதிகப் பணம் அனுப்பும்படி கேட்டிருக்கும்போது, அனாவசியமாக இரண்டரை ரூபாய்க்கு வாசனைத் தைலம் வாங்கி விட்டீர்களே என்ற வருத்தம், கோபமாக மாறி விட்டது!"

அவள் பேச்சு என் வியப்பை இன்னும் அதிகப் படுத்தியது. என் தந்தைக்கு உபகாரச் சம்பளம் குறைவாக வருவதால் மாதந்தோறும் நான் இருபது ரூபாய் அனுப்புவது உண்டு. ஆனால் இந்த மாதம் ஐந்து ரூபாய் அதிகப் பணம் கேட்டுப் பத்து நாட்களுக்கு முன்பு அப்பா கடிதம் எழுதியிருந்தார். அதை மறந்தே போய்விட்டேன்.

"அடடே, அதைச் சொல்கிறாயா மீனா? எனக்குக் கூட அந்த ஞாபகம் இருந்தது. ஆனால் எனக்கு இந்த மாதம் ஐந்து ரூபாய் அதிகம் கிடைத்தது..."

"எப்படி?"

"எப்போதோ ஆறு மாதங்களுக்கு முன் நான் காரியாலயத்தில் அதிக வேலை செய்திருந்ததற்காக இன்றைய தினம், என்னைத் தேடிக் கண்டு பிடித்து, ஐந்து ரூபாய் அதிகப் பணம் கொடுத்தார்கள்!"

நான் பொய் சொன்னேன். அவள் நம்பி விட்டாள். மீனாவிடமிருந்து வந்த நீண்ட பெருமூச்சு, அவள் சமாதானம் அடைந்து விட்டாள் என்பதை அறிவுறுத்தியது.

மறுநாள், வெள்ளிக்கிழமை.

நான் சுவாமி படத்துக்கு நமஸ்கரித்து விட்டு எழுந்து, படத்தின் மேலிருந்த பூவில் கொஞ்சம் எடுத்து மீனாவிடம் நீட்டினேன். பக்தியுடன் கையை நீட்டியவாறே மீனா அருகே வந்தாள். 'கம்'மென்ற வாசனை அவளைத் தூக்கிக் கொண்டு வந்தது.

"மருக்கொழுந்து மணம் வருகிறதே, மீனா? தலையில் வைத்துக் கொண்டிருக்கிறாயா......?" என்று கேட்டபடியே புஷ்பத்தை அவளிடம் கொடுத்தேன்.

"இல்லையே......"

"இல்லையா?......படத்துக்குக் கூட மல்லிகைப் பூ தானே போட்டிருக்கிறேன்? மருக்கொழுந்து மணம் எங்கிருந்து வந்தது?..."

"என் தலையிலிருந்து..." என்று நாணத்துடன் கூறியபடியே ஓடிவிட்டாள் மீனா!

நான் உள்ளூறச் சிரித்துக் கொண்டே மீனாவைத் தேடிச் சென்றேன்.

"மீனா..." சமையலறையின் வாயிற்படியில் நின்றவாறே கூப்பிட்டேன். அவள் ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்தாள்.

"ஏன்?"

"இன்று சாயங்காலம், உனக்கு ஐந்து ரூபாயில் ஒரு சோளித் துணி வாங்கிக் கொண்டு வரப் போகிறேன்......"

திரும்பாமலேயே அவள் பதில் கூறினாள்.


"ஆகா! தாராளமாக வாங்கிக் கொண்டு வாருங்கள்!...... ஏன், இன்றைய தினமும் காரியாலயத்திலிருந்து ஏதாவது அதிகப் பணம் கிடைக்கப் போகிறதா?"

"இல்லை. உன் கோபத்தை மறுபடியும் பார்க்க வேண்டும் போலிருக்கிறது!"

"இனிமேல் எனக்குக் கோபம் வராது. என்னை மன்னித்து விடுங்கள்" என்று சொல்லும்போது அவள் கண்கள் கலங்கின.

ஆம், அவளுக்கு இனிக் கோபம் வராதுதான். ஏன், அவளுக்கு மட்டுமல்ல, எனக்கும் இனிக் கோபம் வராதுதான்.

பிரஷால் தேய்ப்பதால்
கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட்
ஈறுகளைப் பலப்படுத்துகிறது



இதோ! குளோரோபில்* டூத் பேஸ்டின் பூரண நன்மைகள் அடங்கிய புதிய, விசேஷ கால்கேட் சூத்திரம்!

குளோரோபிலின் நன்மைகளை பத்திரமான, ரஞ்சிதமான உருவில் தருகிறது கால்கேட் சூத்திரம்....கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் துரிதமாக, திருத்தமாகச் செயலாற்றுகிறது...அது தரும் சுத்தம் மணிக்கணக்காக நீடிக்கும்!


...பலமான ஈறுகள் புதிய, இனிய சுவாசம் பெற...சாப்பிட்டவுடன் கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை உபயோகிக்கவும். சிறந்த பற்பசைகளைத் தயாரிக்கும் உலகிலேயே மிகப் பெரிய ஸ்தாபனத்தின் உன்னத குளோரோபில் டூத் பேஸ்ட்.

பாக்டீரியாவை ஒழிக்கிறது!

எனாமலை அறிக்கும் தீய அமிலங்களையும் ... அவற்றைத் தோற்றுவிக்கும் பாக்டீரியாவையும் குறைக்கிறது.

ஈறுகளைப் பலப்படுத்துகிறது!

குளோரோபிலின் நன்மைகளைப் பயன்படுத்தி, ஈறுகளைப் பலப்படுத்த கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் உதவுகிறது.



* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது

புதிய பச்சை டூத்பேஸ்ட் பரீட்சித்து உத்தரவாதம் அளிப்பது கால்கேட்

யோகாசனச் சிகிச்சை

வி. என். குமாரசாமி

25. ஜீவ சத்துக்கள்

இந்த ஜீவ சத்துக்களையெல்லாம் கண்டு பிடித்துச் சுமார் ஐம்பது ஆண்டுகள்தான் ஆகின்றன. இன்று இந்த வைடமின் சத்துக்களைப் பற்றித் தெரியாத ஆட்களே இல்லை எனலாம். தங்களுக்கும் சிறிது உணவு ஞானம் இருக்கிறது என்பதை வெளியில் தெரிவித்துக் கொள்ள ஏ. வைட்டமின் பி. வைட்டமின் என்று பெயர்களை உணவு விஷயமான சம்பாஷணைகளில் அடிக்கடி சொல்லுவார்கள். தாம் நடைமுறையில் அனுசரிக்கிறார்களோ இல்லையோ ஆனால் இம்மாதிரி பேசுவது ஒரு நாகரிகமாகவும் நினைக்கிறார்கள். ஆம்! உண்மையில் இப்படிப் பேசுவதைக் கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. இம் மாதிரி பல புதிய கண்டு பிடிப்புகளைப் பற்றிக் கேட்கச் சுவாரஸ்யமாகத்தான் இருக்கிறது. அவைகளைக் கடைப்பிடித்தால் எல்லோருடைய வாழ்க்கையும் இனிமையாகவும் சுகமாகவும் இருக்குமல்லவா!

இன்று நம்முடைய நாட்டில் இன்னமும் போதிய அளவு உணவு ஞானம் வந்திருக்கிறதோ என்னவோ, அது ஏட்டளவில் இருக்கலாம்; ஆனால் நடைமுறையில் வரவில்லையென்றே சொல்ல வேண்டும். ஏதோ ஒரு சிலர் இவைகளைக் கவனித்து அனுசரிக்கவும் செய்கிறார்கள். ஆனால் நடைமுறையில் முப்பது கோடி மக்கள் கொண்ட பாரத சமுதாயம் என்று உணரப் போகிறது! இதன் மகத்துவங்களை உணருவது எவ்வாறு! அல்லது உணர்த்துவதுதான் எப்படி! இன்றுள்ள பிணிகளில் பெரும்பாகம் இந்த ஜீவ சத்துக்கள் சரிவரக் கிடைக்காமல் இருப்பதே காரணம். வறுமையின் மேல் பாரத்தைப் போடலாம், அறியாமையும், வறுமையும் கூடிக் கட்டித் தழுவிக் கோரக் கூத்தாடுகின்ற நமது நாட்டில்.

"பாரத வீரர் மலிந்த நன்னாடு" என்று மார் தட்டுகிறோம், நமது பண்டையப் பெருமையைச் சொல்லி. ஆனால் இன்று காணக் கிடப்பது என்ன! வறுமை, அறியாமை, நோய் முதலியன மலிந்து கிடக்கின்றன. நமது நாட்டில் நோய் பெருகி இருப்பது போல் எந்த நாட்டிலுமே கிடையாது. ஜனத்தொகையில் எவ்வாறு அதிகம் இருக்கிறதோ அதைப் போல வியாதிகளும் மலிந்து இருக்கின்றன. அடிமைத் தளையில் ஆயிரம் வருடங்கள் வாடியிருந்து இப்பொழுது தான் நமது நாடு விடுதலை அடைந்தது. நீண்ட நாட்கள் பல தலைமுறை தலைமுறைகளாக அடிமைப் பட்டிருந்ததால் மக்களின் ஆரோக்கியம், அறிவு, ஆற்றல், செல்வம், கலை முதலியவைகளெல்லாம் சுரண்டப்பட்டு விட்டன. இனியும் இதைக் கட்டி ஆள முடியாது. அபேர்த்தி நமக்கு வந்தெய்தும் என்ற நிலையில் இரண்டாவது மகா யுத்தம் முடிந்ததும் நம்மிடம் கௌரவமாக ஆங்கிலேயர் நாட்டை ஒப்புவித்து விட்டு அவர்கள் நல்ல பெயர் வாங்கிக் கொண்டனர். நம்முடைய மாபெரும் ஒப்பற்ற தலைவர்கள் அல்லும் பகலும் உழைத்து நமது நாட்டை மற்ற நாட்டைப் போல் உயர்வாக்கப் பாடுபட்டு வருகின்றனர்.

நமது நாட்டிலுள்ள நோயின் தற்கால நிலைமைகளைப் பற்றிச் சேகரித்த புள்ளி விவரங்களைத் தருகிறேன். சற்றுக் கவனித்துப் பாருங்கள் :

இந்தியாவில் 100-க்கு 70 பேர் க்ஷயரோகத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நகர வாசத்தில் இருக்கிறவர்களில் 100-க்கு 75 பேர்களுக்கு க்ஷயம் இருக்கிறது.

நமது நாட்டில் நிமிஷத்துக்கு ஒருவர் க்ஷயரோக நோயினால் இறந்துகொண்டிருக்கிறார்.

இந்தியாவில் பத்து லட்சம் குஷ்டரோகிகள் இருக்கின்றனர். பத்து லட்சம் பேர் குருடர்கள் இருக்கிறார்கள். பத்து லக்ஷம் பேர் காலராவால் வருடா வருடம் மரிக்கின்றார்கள்.

சென்னை மாகாணத்தில் வருஷத்துக்கு 30,000 பேருக்கு அம்மை வருகின்றது. அதில் 10,000 பேர் இறந்து விடுகின்றனர். இந்தியா பூராவுக்கும் 50,000 பேர் அம்மையால் இறக்கின்றனர். இந்தியாவில் பைத்தியம் பிடித்தவர்களின் ஜனத்தொகை 71 8000. ஆஸ்பத்திரிகளில் 12,304 பேர்கள்தான் இருக்கிறார்கள். ஆனால் இவர்



சாப்பிட முடியாமல் தவிக்கும் தனவான்......


களுக்காகும் செலவு ஒரு வருடத்துக்கு அறுபத்து மூன்று லக்ஷத்து அறுபத்திரண்டாயிரம் ரூபாய். உலகத்தில் வருடம் முப்பது லக்ஷம் பேர் மலேரியாவில் மடிகின்றனர். இதில் நமது நாட்டின் பங்கு அதிகம் இருக்குமென்பதில் சந்தேகமில்லை. உலக ஜனத்தொகை நிமிஷத்துக்கு நாற்பது பேர் வீதம் அதிகமாகி வருகிறது. இதிலும் நமது நாட்டின் பங்கு மற்றெல்லா நாட்டையும் விட அதிகம்தான் இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

இந்தியாவில் பிறக்கும் குழந்தைகளில் நூற்றுக்கு நாற்பது குழந்தைகள் பத்து வயதுக்குள் இறந்து விடுகின்றன. நூற்றுக்கு அறுபத்தைந்து பேர் முப்பது வயது ஆவதற்குள் இறந்து விடுகின்றனர். இந்திய சராசரி வயது குறையக் கேட்க வேண்டுமா!

நம்மில் நூற்றுக்கு அறுபது பேர்களுக்குப் பல கோளாறுகள் இருக்கின்றன. நமது நாட்டின் ஜனத்தொகையில் நாள் ஒன்றுக்குப் பதினாலாயிரம் பேர் அதிகமாகின்றனர். நமது நாட்டிலுள்ள மக்களில் இருபத்தி மூன்று கோடி பேர்களுக்குச் சாப்பிடச் சரியான உணவு கிடையாது; உணவுக்காகத் திண்டாடுகின்றனர். சென்னை மாகாணத்

தில் ஐந்நூறு பேர்களுக்கு அதிகமாய் வசிக்கக் கூடிய கிராமங்கள் மூவாயிரத்து ஐந்நூறு வரை இருக்கின்றன. அவைகளில் எழுத்தறிவிக்க ஒரு பள்ளிக்கூடம் கூடக் கிடையாது. நமது நாட்டின் பிச்சைக்காரர்கள் பதினைந்து லக்ஷம் பேர் இருக்கின்றனர். இவைகளை யெல்லாம் போக்க எவ்வளவு ரூபாய் வேண்டும், எவ்வளவு நாட்கள் ஆகும் என்பதைச் சிந்தனை செய்யுங்கள்.

மற்றும் நம்மிடையே எத்தனையோ நோய்கள், குறைகள், மலிந்து கிடக்கின்றன. மற்ற நாடுகளில் இவைகளெல்லாம் இல்லையா, நம் நாட்டில் மட்டுந்தானா எனலாம். மற்ற நாடுகளிலும் இருக்கின்றன. ஆனால் நம்மைப்போல் அதிகம் இல்லை. ஏதோ சிறிதளவு இருக்கும். நமது நாட்டைப் போல எங்கு திரும்பினாலும், எங்கு நின்றாலும், எங்கு இருந்தாலும் நம்மைச் சுற்றி நடக்கும், இருக்கும் கூட்டங்களைக் கண்டால் மனம் பதறுகிறது. ஏதோ மனோ சாந்திக்காக வெளியில் செல்லுகிறோம். ஏதோ கச்சேரி நாடகம், சினிமா முதலியவைகளைப் பார்க்கப் போகிறோம். போகும் வழியில் வண்டி நிற்கும் இடங்களில் இருக்கும் காட்சிகளைக் காணச் சகிக்கவில்லை. என்ன சங்கோ



பசியால் வாடும் ஏழை மக்கள்...

ஷம் நமக்கு வேண்டியிருக்கிறது என்று மனம் பதறுகிறது. கடற்கரைக்குச் சென்றாலும் அங்கும் இக்காட்சி தொடர்கிறது. வெளியூர்களில் இதைவிட மோசம். அவைகளைக் காணும்போது உணர்ச்சிப் பெருக்கால் உள்ளம் பதறிப் பதறி நம் நரம்புகளுக்கு மேலும் பலவீனமே ஏற்படுகிறது. நம்முடைய மக்கள் தரம் என்று உயரப் போகிறது என்று மலைப்புத் தோன்றுகிறது.

நாம் அரசியல் புரட்சி செய்தோம். அதில் வெற்றி பெற்றோம். ஆனால் அது போதாது. ஆரோக்கியப் புரட்சி செய்ய வேண்டும். மக்கள் நலன் பெருகப் புரட்சி செய்ய வேண்டும். மக்கள் தரம் உயரப் புரட்சி செய்ய வேண்டும். இன்று நமது முன் நிற்கும் மாபெரும் கடமை இதுவேயாகும். இதில் ஓரளவு யோகாசனப் புரட்சி உதவி செய்யுமென்று நம்புகிறேன். யோகாசனங்கள் செய்து நோய்களை விரட்டுவது ஒரு தேச பக்தனின் முக்கிய கடமையாக மதிக்க வேண்டும். எவ்வளவு ஏழையானாலும் கிடைக்கும் பொருளை உணவு ஞானத்துடன் அதிலுள்ள சத்துக்களை, அறியாமையினால் வீணாக்காமல் சாப்பிடுவதும் ஒரு தேச பக்த கடமையாகும். உணவுக்காக அல்லவா நமது தலைவர்கள் பல வருஷங்களாக "உணவைப் பெருக்குங்கள்; உணவைப் பெருக்குங்கள்" என்று சொல்லி வந்தார்கள். பிற நாடுகளிலிருந்து பிச்சை வாங்கி வாழ்ந்தோமல்லவா! இப்பொழுது அநேகமாய் நமது நாட்டில் உணவுப் பிரச்னை ஒருவாறாய்த் தீர்ந்தது என்றாலும் மக்கள் எல்லோரும் வாங்கி அவைகளை அடையும் சக்தி பெறவில்லை. இன்னும் நாட்டில் முக்கால்வாசி பேர் போதிய உணவு இல்லாமல் திண்டாடுகின்றனர். அவர்கள் காலமெல்லாம் உணவு கிடைப்பதற்காகவே உழைக்கவே சரியாய் விடுகின்றன. அப்படியும் போதிய சத்துள்ள உணவு கிடைப்பதில்லை.

நமது நாட்டில் ஆஸ்பத்திரிகளுக்காகச் செலவிடும் தொகைகளையும், மேல் நாட்டு மருந்துகளுக்காக நம் நாட்டிலிருந்து செல்லும் பணங்களையும் கொண்டு எத்தனையோ ஆக்க வேலைகளைச் செய்யலாம். அதற்கு வேண்டியது மக்களுக்கு உடல் ஞானமும், உணவு ஞானமும்தான். இதில் சற்றுக் கவனம் செலுத்தி மக்கள் வாழ்க்கை நடத்த ஆரம்பித்தார்களானால் எத்தனையோ அற்புதங்களைச் சாதிக்கலாம்.

ஏழை எளியவர்களுக்குப் போதிய சத்துள்ள உணவுகள் கிடைப்பதில்லை.

போதிய சத்துள்ள உணவு கிடைக்காததினால் தான் மக்கள் ஜன சங்கியையும் அதிகமாகின்றன. ஆகாரத்தில் புரதம் அதிகம் தேவைப் படுவதால், மக்கள் அதிகமாய்ப் பிறக்கின்றனர். நல்ல புரதச் சத்து மற்றும் ஜீவ சத்துக்களும் நிறையக் கிடைத்தால் மக்கள் இவ்வளவு அதிகமாகப் பெருக மாட்டார்கள். மற்ற நாடுகளுக்கும் நமது நாட்டுக்குமுள்ள வித்தியாசம் இதுதான். மற்ற நாடுகளில் புரதம், வைட்டமின்கள் நிறையக் கிடைக்கின்றன. மக்கள் வயிறார உண்கின்றார்கள். மக்கள் அதிகம் திருப்தி அடைகின்றனர். அதனால் ஜன சங்கியைக் கட்டுப்படுத்த முடிகிறது. நமது நாட்டில் புரதம் பசி அதிகம். உணவில் திருப்தி ஏற்படுவதற்கு இல்லை. உணவில் இன்பம் காணுவதற்கு இல்லை. மனம் வேறு விஷயங்களில் திருப்பப்படுகின்றன. மனத்தைக் கட்டுப் படுத்த முடிவதில்லை. மக்கள் அதிகம் பெருகுகின்றனர்.

இதற்கு உதாரணமாக வெள்ளை எலிக் கூட்டங்களைக்கொண்டு கூனூர் உணவு ஆராய்ச்சிச் சங்கத்தார் பரீட்சை நடத்தியதை எடுத்துக் கொள்ளலாம். ஒரு கூட்ட எலிகளுக்கு நல்ல புஷ்டிச் சத்துள்ள ஆகாரங்கள் கொடுத்து வளர்த்தார்கள். அவைகள் குறைந்த அளவில் குட்டிகள் போட்டன. நல்ல ஆரோக்கியமாக வாழ்ந்தன. அமைதியோடு இருந்தன. நோய் நொடிகள் வருவதில்லை. பூரண ஆயுளுடன் இருந்து இறந்தன. நடுவயதிலும் குட்டியிலும் இறப்பது அபூர்வமாய் இருந்தன. ஆனால் புஷ்டியில்லாத வெறும் ரசம் சாதம் வைத்து வளர்த்து வளர்க்கப்பட்ட எலிக் கூட்டங்களில் மற்ற எலிக்கூட்டத்தை விட நிறைய குட்டிகளைப் போட்டன. அடிக்கடி குட்டிகள் போட்டன. அதில் பல வயிற்றில் இறந்து பிறந்தன. பிறந்த எலிக் குஞ்சுகள் பல ஆரோக்கியமாய் வளர வில்லை. எல்லாவித நோய்களும் வந்தன. பெரிய எலிகளுக்கும் பலவித நோய்கள் வந்தன, எப்பொழுதும் அமைதியின்றி இருந்து வந்தன.

இந்த நிலைமையில்தான் நாம் இன்று இருக்கிறோம். நமக்கு உணவு ஞானம் ஏற்பட்டு நல்ல சத்துள்ள ஆகாரங்களாய்ச் சாப்பிட்டு அதனுடன் யோகாசனங்களையும் செய்து வந்தால் பிரஜா உற்பத்திப் பிரச்னை ஒருவாறு தீருவதுடன் இன்று நமது நாட்டில் உள்ள மற்ற எல்லாவிதமான பிரச்னைகளுமே தீர்ந்து விடும். (தொடரும்)

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Prees,
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras 10.





DALDA

REGISTERED No. M. 4392
Registered as a news paper in Ceylo

